RR 4-8-89

பதினறு பக்கங்கள் | விலை ரூபா நான்கு

சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்திட
வீடியோ விஹோன்ஸ்
353C, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி.

# வார முரசொலி

For Quality Video Filming
VIDEO VIHONS
353C, Clock Tower Rd, Wellington Junction

முரசு 03 | ஒலி 199 | ஞாயிற்றுக்கிழமை 30 - 07 - 1989 | ஆடி 15 துல்ஹஜ் 26

# 620 ஜவான்கள் நேற்று முதற்கட்ட வாபஸ்

இலங்கை-இந்திய சமரசத்தின் முதல்கட்டமாக நேற்றுமாலை இந்திய அமைதிப்படையின் விலகல் திருகோணமலையில் ஆரம்பித்தது. முதல்கட்டமாக அறுநூற்றிருபது ஜவான்கள் "ஐ. என். எஸ். நாகர்" என்ற இந்திய கடற்படைக் கப்பல்மூலம் இந்தியா திரும்பினர்கள். வடகிழக்கு மாகாணசபை முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் இலங்கை வெளியுறவு ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்கா, பாதுகாப்பு செயலாளர் சேபால ஆட்டிகல, இந்திய அமைதிப்படை தளபதி லெப். ஜெனரல் கல்கட், இலங்கை இராணுவ தளபதி ஹமில்டன் வணசிங்க ஆகியோர் நேற்று முதல்கட்ட இந்தியப்படையினரின் வெளியேற்றத்தின்போது திருமலை துறைமுகத்துக்கு சமூகம் அளித்திருந்தனர். முதல்கட்டமாக நேற்று இந்திய துருப்புக்களில் பீரங்கிப்படை, பரா பிரிவினரே சென்றனர்.

## அமைதிப்படை வடக்கு கிழக்கில் யுத்த நிறுத்தம் செய்யுமாறு

# புதுடில்லியில் ரஞ்சன் கோரிக்கை

அமைதிப்படை விலகல் குறித்து இலங்கை-இந்திய தூதுக்குழுவினருக்கிடையில் புதுடில்லியில் நேற்று இடம்பெற்ற முதல்கட்ட பேச்சுக்களில் இந்திய அமைதிப்படையினர் இலங்கையின் வடகிழக்கில் யுத்தநிறுத்தம் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கைத் தரப்பிலான தூதுக்குழு இந்தியத்தரப்பு குழுவிடம் வலியுறுத்தியதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்துள்ளன.

(புதுடில்லி)

வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தலைமையில சென்ற இலங்கை அரசின் பத்துப்பேர் அடங்கிய உயர்மட்டக்குழு நேற்று பிற்பகல் புதுடில்லியை சென்றடைந்தது.

இலங்கைக்குழுவுக்கு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தலைமையில் உயர்கல்வியமைச்சர் ஜனுப் ஹமீட், பெர்னட் திலகரட்ன, பிரட்மன் வீரக்கோன் சுனில் டி சில்வா, ஜெயசிங்க, பீலிக்ஸ் டயஸ் அபயசிங்க ஆகியோர் சென்றுள்ளனர். உயர் கல்வியமைச்சர் ஜனுப் ஹமீட் பேச்சில் கலந்துகொள்ள லண்டனில் இருந்து டில்லி வந்துசேர்ந்தார்,

புதுடில்லி வந்தடைந்த குழுவினரை இந்திய வெளிவிவகார அமைச்சர் வி. நரசிம்மராவ் வெளிவிவகார செயலர் எஸ். கே. சிங் ஆகியோர் வரவேற்றனர்.

இலங்கைக்குழுவுக்கும் இந்தியக் குழுவுக்கும் இடையிலான பேச்சுகள் நேற்று மாலையில் ஆரம்பமானதாக தெரிவிக்கப்படுகிறது. பேச்சுகள் இரண்டு மணி நேரம் நீடித்தது.

இந்திய அரசின் குழுவில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த், பாதுகாப்பு

—16ஆம் பக்கம் பார்க்க

## சமரசத்தின் பெறுபேறு அல்ல வெறும் புரிந்துணர்வு - ரஞ்சன்

பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன பி.பி.ஸி. செய்திநிறுவனத்துக்கு நேற்று காலை அளித்துள்ள பேட்டி ஒன்றில் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளின் போது தாம் மற்றைய அணிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்போவதில்லை என தம்மிடம் கூறியதாகவும் இதில் தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போதைய இந்தியப்

— 16ஆம் பக்கம் பார்க்க

### இந்திய அமைதிப்படை வெளியேற்றம்

## இரு நாடுகளின் புதிய உடன்பாடு கருணாநிதி, ஜெயலலிதா மகிழ்ச்சி

(சென்னை)

அமைதிப்படையை வெளியேற்றுவது குறித்து இலங்கை இந்திய அரசுகளிடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளதையிட்டு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி, எதிர்க்கட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா உட்பட பல தலைவர்களும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பாக இரண்டு நாடுகளினதும் வெளியுறவு

—16ஆம் பக்கம் பார்க்க

## அமைதிப்படை முன்னாள் தளபதி வரவேற்பு

இலங்கையில் இருந்து இந்தியப்படைகள் படிப்படியாக வெளியேறுவதை இந்திய அமைதிப்படையின் முன்னாள் தளபதி லெப். ஜெனரல் திபீந்தர் சிங் வரவேற்றுள்ளார்.

## யாழ். வைத்தியசாலையில் பற்சிகிச்சை பெற தனியார் பார்மஸி ஒன்றில் அனுமதி அட்டை

யாழ். போதனா வைத்தியசாலையில் பற்சிகிச்சை பெறுவதற்கு தற்பொழுது புதிய நிபந்தனையொன்று விதிக்கப்பட்டுள்ளது. இங்கு பற்சிகிச்சை பெறவருவோர் யாழ். நகரிலுள்ள குறிப்பிட்ட தனியார் பார்மஸி ஒன்றினால் அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்படும் திகதி குறிப்பு அட்டையை கொண்டு வருதல் வேண்டுமென வைத்தியசாலை நிர்வாகத்தினால் பணிக்கப்பட்டுள்ளனர். இதுபற்றிய அறிவித்தல் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு கவுண்டரின் முன்னால் நோயாளிகளின் பார்வைக்காக ஒட்டப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலுடன்

— 16 ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.மாவட்ட மாகாணசபை உறுப்பினர்

## புனர்வாழ்வு வேலைக்கு உதவ வங்கி ஊழியரிடம் கோரிக்கை

"நாடு மிக நெருக்கடியான சூழ்நிலையை எதிர் நோக்கிக்கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில், கடந்தகால வன்செயல்களின் போது, இடம் பெயர்ந்தவர்களுக்கும் மீளக் குடியமவர்தற்கான பண உதவியையும், பாதிக்கப் பட்டவர்களுக்கும், சொத்துக்களை இழந்தவர்களுக்கும் புனர்வாழ்வு நடவடிக்கைகளையும், அதற்கான கொடுப்பனவுகளையும்

→ 15ஆம் பக்கம் பார்க்க

### யாழ். பல்கலைக்கழக மாணவர் சங்கம் அறிக்கை:-

## அநியாய மரணங்கள் மேலும் தொடராமல் இருக்கவேண்டும்

அண்மைக் காலங்களில் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பல அப்பாவிப் பொது மக்கள் பாதிக்கப்படுவது, கடந்த கால பயங்கர நிகழ்வுகளை மீண்டும் தமிழ் மக்களுக்கு நினைவூட்டுவதாக உள்ளது.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

ஆயுதமேந்திய மோதல்க

→15 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய அமைதிப்படை வெளியேற்றம் குறித்தான இலங்கை - இந்திய அரசின் கூட்டறிக்கை

இலங்கை ஜனாதிபதி இலங்கையில் உள்ள இந்திய அமைதிப்படைகளை வாபஸ் பெறும்படி இந்தியப் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அமைதிப்படையை வாபஸ் வாங்கும் நடவடிக்கை இன்று (29. 07. 1989) மீண்டும் ஆரம்பமாகிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சர், இந்திய அமைதிப்படைகளை தொடர்ச்சியாக வாபஸ் பெறும் நடவடிக்கையையும் கால அட்டவணை பற்றியும் கலந்துரையாட இந்தியாவுக்கு வருமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கு இந்தியத் தூதருடாக அனுப்பிய வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இச் சந்திப்பின்போது இலங்கை - இந்திய உடன்படிக்கை மீள ஆராயப்படும். இந்திய இராணுவ நடவடிக்கை நிறுத்தம் பற்றியும், வடகிழக்கிலுள்ள எல்லா இன மக்களின் பாதுகாப்பு பற்றியும் ஆராயப்படும்.

ஒப்பம்
பெர்னட திலகரட்ன
இலங்கை வெளிவிவகார செயலர்
28. 07. 1989

ஒப்பம்
எஸ்.எல்.மல்ஹோத்ரா
இந்திய உயர் ஸ்தானிகர்
28. 07. 1989

## சுகாதார பரிசோதகர் நியமிக்கப் படவில்லை

(தாளையடி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் செம்பியன்பற்று பொது சுகாதார பரிசோதகர் பதவி கடந்த பல வருடங்களாக இருப்பதால் வெற்றிடமாக இப்பகுதிப் பொதுமக்கள் மிகுந்த சிரமப்படுகிறார்கள்.

இப்பகுதி முன்னர் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரியின் பிரிவுக்குள் இருந்தமையினால் பளை பொது சுகாதார பரிசோதகரே செம்பியன்பற்று பதில் சுகாதார பரிசோதகராகவும் கடமையாற்றினார். இப்போது இப்பகுதிகள் யாவும் யாழ். மாவட்டத்துடன் இணைக்கப்பட்டு பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியின் பிரிவுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் காரணமாக பளை பொதுச் சுகாதார பரிசோதகரின் பதில் கடமையும் முற்றாக நிறுத்தப் பட்டது.

செம்பியன் பற்று, முள்ளியான் பகுதிகளுக்கு நிரந்தர பொது சுகாதார பரிசோதகரை நியமிக்குமாறு இப்பகுதி பொதுமக்களும், பொது ஸ்தாபனங்களும் சுகாதார திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுத்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## அரச காணிகளிலிருந்து மரங்கள் களவாக வெட்டல்

(முள்ளியான்)

வடமராட்சி கிழக்குப்பகுதியின் மண்டலாய் முள்ளியான், உம்மண்டி, உணவத்தை போன்ற பகுதிகளில் உள்ள பெரியமரங்களும், பனைகளும் அப்பகுதிகளைச் சேராத வெளியூர்த் தனிப்பட்டவர்களால் வெட்டப்படுவதாக தெரிய வருகின்றது.

அரசாங்கத்துக்கு சொந்தமான காணிகளிலும், சில தனியாருக்கு சொந்தமான காணிகளிலும் பெருமளவு பனை மரங்கள் வெட்டப்பட்டு நகரப்பகுதிகளுக்குக் கொண்டு சென்று அதிக விலைக்கு விற்கப்படுவதாகத் தெரியவருகின்றது.

### ஐ.நா. அகதிகள் ஸ்தானிகராலயம் வழங்கியது
## பொது சுகாதார நிலயத்திற்கு மூன்று இலட்சம் ரூபா நிதி உதவி

(திருநெல்வேலி)

பல்வேறு துறைகளிலும் மகத்தான பணிகளை புரிந்து வரும், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் திரு. சுவாமிநாதன் பாஸ்கரன் கடந்த ஓராண்டு காலம் எடுத்து வந்த தீவிர நடவடிக்கைகளினால், மல்லாகம் குளமன்காலில் ஒரு பொது சுகாதார சமூகநிலயத்தை ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் மூன்று லட்சம் ரூபா செலவில் நிறுவ முன்வந்துள்ளது.

இதற்கான காணியை மேற்படி தலைவரின் வேண்டுதலின் படி அவ்வூரைச்சேர்ந்ததிரு. அந்தோனிப்பிள்ளை மரியதாசனும் மனைவி புஷ்பராணியும், அளவெட்டியைச் சேர்ந்த திரு. கிருஷ்ணர் துரையையாவும் மனைவி கலாதேவியும் தரும சாதனம் செய்துள்ளனர்.

இந்த நன்கொடையை தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் பொறுப்பேற்றுள்ளார்.

இந்த நிலயத்திற்கு மருத்துவமாது ஒருவர் தங்கியிருந்து பணிபுரிவதற்கான விடு. பிரசவ அறை, மருந்தகம் முதலான பல மண்டபங்களும் நிறுவப்படவுள்ளன.

சகல மருத்துவ சேவைகளும் இங்கு நடைபெறும்.

## உற்சவம்

மண்டைதீவு புனிதபேதுருவாலவர் ஆலய வருடாந்த சுற்றுப்பிரகார உற்சவம் எதிர் வரும் முதலாந் திகதி நடைபெறவிருக்கிறது. சென்ற 23-ந் திகதி கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

CLASSES IN ENGLISH
TYPING
SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3 RD. CROSS ST.
JAFFNA.

சிறு விளம்பரம்

கல்வி

G. C. E. (O/L) ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கு 22 வருட அநுபவமுள்ள ஆசிரியரினால் 2 மாதத்திற்குள் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரிகிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி
07235

தனியார் கல்வி நிறுவனங்களின்
பணிப்பாளர் சபை

மேற்படி அமைப்பு 31. 07. 89 திங்கள் காலை 10.00 மணியளவில் 58 A, ஸ்ரான்லி வீதியிலுள்ள பொண்ட் கல்வி நிறுவனத்தில் வகுப்புகள் ஆரம்பம் பற்றியும் சபையின் எதிர்கால செயற்பாடுகள் பற்றியும் தீர்மானிப்பதற்கான அவசர பொதுக் கூட்டம் கூடுகின்றது. அனைத்து தனியார் கல்வி நிறுவன இயக்குநர்களும், பிரத்தியேக வகுப்புகள் நடாத்துகின்ற ஆசிரியர்களும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டப்படுகிறீர்கள்.

பணிப்பாளர் சபை

58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

07241

## கொள்ளை

வியாழக்கிழமை இரவு மண்டைதீவு மூன்றும் வட்டாரத்திலுள்ள வீடொன்றிலிருந்து ஆயுத முனையில் நகை, பணம், மணிக்கூடு என்பன கொள்ளையிடப் பட்டுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப் பட்டுள்ளது. கொள்ளையிடப்பட்ட பொருட்களின் பெறுமதிசுமார் எழுபத்திஐயாயிரம் ரூபாவுக்கும் மேல் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ்.பல்கலைக்கழக மின்தடை நீக்கம்

மின் தடையினால் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆய்வு கூடம், மற்றும் கம்பியூட்டர் பிரிவு என்பன தடைப்படுவதைதவிர்ப்பதற்குதற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்பொருட்டு இப்பிரிவுகளுக்கு ஜெனரேட்டர் ஒன்றின் மூலம் வியாழன் முதல் மின்சாரம் வழங்கப்பப்டு வருகின்றது.

## சுட்டுக்கொலை

சுதுமலை வடக்கில் சுட்டுக் கொல்லப்பட்டவர் அதேயிடத்தைச் சேர்ந்த குமாரசாமி விஜயரத்தினம் (48) என அடையாளம் காணப்பட்டுள்ளார். கடையிலிருந்த இவர் அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

## 25000 ஆசிரியர் 7000 முஸ்லிம்

தமிழ் முஸ்லிம்கள் 7000 பேருக்கு செப்டம்பர் மாதம் முதலாம் திகதி முதல் வழங்கப்படவிருக்கும் 25,000 ஆசிரியர் நியமனங்களில் இன விகிதாசார அடிப்படையில் நியமனம் வழங்கப்பட இருப்பதாக கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## இளைஞர் கொலை

சுந்தர் மடம் சந்தியில் வியாழன்காலை இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் சுமார் இருபது வயது மதிக்கத்தக்க மெலிந்த தோற்றமுடைய இந்த இளைஞரின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ். போதனாவைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலம்
பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நீங்களும் ஆங்கிலம் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால்மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப்பயிற்சி. தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து

✶ "I am an Engineering student. Lack oF English Knowledge makes it Impossible to read Extensively on our subjects. But your project is helpful to me now I am pretty confidence that I can speak English Fluently"

MR. KATHIRAVETPILLAI SIVATHASAN
Muthaliyar valavu, Vathiry,
Karaveddy.

✶ ஆங்கில கல்வியினை இலகுவாக கற்றுக்கொள்ள பிறைட் கல்வி நிறுவனம் செய்யும் உதவி மேலானது. தங்களின் பாடத்திட்டம் அடிப்படை அறிவு இல்லாதவர்களையும் ஒரளவு மனிதனுக்கும் என்பதில் ஐயம் இல்லை. எனக்கு தங்கள் பாடத்திட்டம் மிகவும் உதவியது. நன்றி.

திரு.எஸ்.முகமட் இத்திரீஸ் பி ஏ (இலங்கை)
171, பொதுநூலக வீதி, மருதமுனை,
கல்முனை.

✶ தங்கள் நிறுவனத்தால் நடத்தப்பட்டுவரும் ஆங்கில பயிற்சியில் கல்விகற்றதால் எனக்கு ஆங்கிலம் பேசக்கூடிய நிலையும், மற்றவர்கள் கூறுவதை புரிந்து கொள்ளக்கூடியதாகவும் உள்ளது.

செல்வி கே. இந்திரகலா
89, கரைசட்டு லேன், வண்/வடக்கு மேற்கு,
யாழ்ப்பாணம்.

✶ ஆங்கில பயிற்சியினை செய்து வருவதால் கூச்சமின்றி நாமும் ஆங்கிலம் பேசலாம் என்றதோர் புதிய உற்சாகமும், தென்பும் பிறந்துள்ளது.

செல்வி என். உமையாள்
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்புகொள்க.

BRIGHT TRAINING CENTRE
P. O. Box 162 Colombo
07138

ஆசிரியர் தெரிவுக்கான
போட்டிப்பரீட்சை
ஒகஸ்ட் - 1989

ஒகஸ்ட் பிற்பகுதியில் நடைபெறவிருக்கும் 25,000 ஆசிரியர்களுக்கான போட்டிப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விசேஷ தீவிர பயிற்சி வகுப்புகள் இத்துறையில் அனுபவமுள்ள விரிவுரையாளர்களால் ஆரம்பிக்கப்படவுள்ளன

பாடங்கள்
1. பொது அறிவு
2. பொது உளச்சார்பு

★ பரீட்சை தொடங்கும்வரை தினசரி வகுப்புகள்
★ கடந்தகால பரீட்சை வினாத்தாள்களும் விடைகளும்
★ மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்

ஆரம்பம்: 02. 08. 1989

Fees 200/-

குறிப்பு: குறிப்பிட்ட தொகை மாணவர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவர்

மேலும் விபரங்களுக்கு
School of Business Administration
16, 3rd Cross Street
(O L R தேவாலய மேற்குப்பக்கம்)
JAFFNA
07240

திருப் பாற்கடல்

முரசொலி வார மலர்

# தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்துவது நன்று?

தமிழ் எழுத்துக்களில் தமிழ் நாடு சீர்திருத்தம் செய்து விட்டது. இலங்கைத் தமிழர்களும் எழுத்துச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமா? ; தமிழ் நாட்டைப் பின்பற்ற வேண்டுமா? என்பது இப்பொழுது பலராலும் ஆராயப்பட்டு வருகிறது, நாங்கள் எழுத்துச் சீர்திருத்தம் செய்தாலும், செய்யா விட்டாலும், தமிழ் நாடு செய்துவிட்டதால் அதை இனி மாற்றுவது கடினமான காரியம். புதிதாக அச்சிடும் புத்தகங்களில் எழுத்துச் சீர்திருத்தத்தைப் பின்பற்றி அச்சிடப்பட்டதா? பழைய எழுத்து முறைப்படி அச்சிடப்பட்டதா? என்று முன் பக்கத்தில் குறிக்கப்பட நேரினும் அதிசயம் ஒன்றும் இல்லை.

தமிழில் இரட்டைக் கொம்பு (ே) என்ற குறியீடு கொண்டு வரப்பட்ட காலத்திலேயே, இப்பொழுது செய்த சீர்திருத்தங்களைப் பற்றியும், நிச்சயம் ஆலோசித்திருப்பார்கள். ஆனால் இதை அக்காலத்தில் செய்யாமல் விட்டதற்கும் போதிய காரணம் இருக்கும். இன்னுஞ் சில காலங்களின் பின், உ, ஊ, வரிசை உயிர் மெய் எழுத்துக்களுக்கும் சீர்திருத்தம் செய்ய முற்பட்டால், அதுவும் அதிசயப்படக் கூடியதன்று.

## 'கசின்'

ஆ, ஐ என்ற உயிர்கள் ண், ள், ல், ன், என்ற மெய்களோடு சேர்வதால் வரும் உயிர்மெய் எழுத்துக்களுக்கு இப்பொழுது செய்த சீர்திருத்தத்தை முன்னர் (ே) இரட்டைக்கொம்பு கொண்டு வந்த காலத்தில், ஏன் செய்யவில்லை என்பதை ஆராய்வது சிறிது பயனுடையதாயிருக்கும். 'ஆ' இன் வரிசையில் வரும் உயிர்மெய் எழுத்துக்கள் (ா) என்ற குறியீட்டை இடுவதன் மூலம் காட்டப்பட்டன. ண், ன் என்ற இரண்டு எழுத்துக்களுக்கும் (ா) என்ற குறியீடு இடாது 'ணு', 'னு' எனச்சுற்றி வளைப்பதின் மூலம் காட்டப்பட்டது. ணா, னா என்று எழுதினால் ர என்ற எழுத்தோ ா என்ற குறியீடோ என்று மயக்கம் ஏற்படும். மற்ற எழுத்துகளின் பின்னே அவை வேறு வடிவங்களில் வருவதினால் இம்மயக்கம் ஏற்படாது. அழகற்ற கையெழுத்துப் பிரதிகளில் இப்படியான மயக்கம் ஏற்படுவது அச்சுக்கோப்பாளருக்குத் தெரிந்த ஒன்று. இதே போல் 'ை' என்ற ஐயைக் குறிக்கும் சங்கிலிக் கொம்பும் 'ன' என்ற எழுத்தைப் போல்

[15-ம் பர்க்கம் பார்க்க]

## அவசரம் வேண்டாம்!

எழுத்துச் சீர்திருத்தம் வேண்டும்; வேண்டாம் என்ற குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய முழுமையான அறிக்கை ஒன்றை விரைவிற் பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கப் போவதாக அமைச்சர் தேவராஜ் அறிவித்திருக்கிறார்.

இவ்வளவு அவசரம் அவசரமாக எழுத்துச் சீர்திருத்தத்தை அமுல் செய்ய வேண்டிய அவசியம் என்ன?

வடக்குக் கிழக்கில் உள்ள அறிஞர்கள் புறக்கணிக்கப் பட்டுவிட்டார்கள். அவர்களது தீர்மானம் இவ்விஷயத்தில் அவசியமற்றது என்று அமைச்சர் கருதுவது போலத் தெரிகின்றது. இல்லையென்றால் இவர்களை கலந்தாலோசிக்காமலே அறிக்கையை அவசர அவசரமாகப் பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்க வேண்டிய அவசரம் என்ன?

நமது மொழி, கலாசாரம் சம்பந்தப்பட்டதொரு முக்கிய விஷயம் இது. மாற்றங்கள், சீர்திருத்தங்கள் செய்யப்படுமுன் தீர்க்கமாக ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்ளப் படுவதே முறை. மாறாக அவசரப் படுவது புத்தியாகாது.

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள அறிஞர்களின் அபிப்பிராயங்கள் திரட்டப் படவேண்டாமா?; ஏன் திரட்டப்படவில்லை.

அறிஞர் சிலர் எழுத்துச் சீர்த்திருத்தம் பற்றிய தமது கருத்துக்களைத் திருப்பாற்கடல் மூலம் வெளியிட்டிருக்கிறார்கள். இன்னமும் தெரிவிக்க இருப்போர் பலர் இருக்கலாம் என்றே நாம் கருதுகிறோம். அங்ஙனம் வெளிவரும் இருதிறக் கருத்துக்களையும் சீர்தூக்கவேண்டும்.

யாழ். பல்கலைக்கழகத்திலும் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய கருத்தரங்கொன்று விரைவில் நடைபெற உள்ளதாக அறிகிறோம்.

எனவே,

அமைச்சர் அவசரப்படக் கூடாது இலங்கை வாழ் அறிஞர்களோடு கலந்துரையாடி இவ்விஷயத்தில் தகுந்த தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்றே நாம் கருதுகிறோம்.

க. உமாமகேஸ்வரன்

## திருத்தம் தேவை

மொழிகள் எல்லாமே
கருத்துக் காவிகள்
காலத்தேவையின்
மாறுதல்களுக்கிவை
விலக்கானவையல்ல
விஞ்ஞானப் பாதங்கள்
இவற்றையும்
மிதிக்காமலில்லை
நாங்கள் மட்டும்
முரண்டு பிடிக்கிறோம்
இங்கிலாந்தர் நாவுக்கும்
அமெரிக்கர் ஆய்வுக்கும்
எம்மொழி தேவையோ(?)
எம்தேவைக்கும் உயர்வுக்குமே
எம்மொழி!
பண்டிதப்பண்டங்களின்
பதுக்கல்க்காரர்கள்
இவர்களின்
முதுகுப்போக்குத்தனம்
சிறப்பான மொழிப்பற்றும்
பற்றற்களே
இரவல் காவியங்களையும்
இறைபுராணங்களையும்
எதுவுமே தவிர
வேண்டாமோ?
பீற்றிக் கொள்ளுங்கள்
தன்னிறைவுகண்ட மொழியர் இந்தத் தமிழரென்று
திருத்தம்
மொழிக்கு முதல்
மொழியர்க்குத் தேவை.

யதார்த்தன்

## செயற்கரிய செய்தோர்

### ஊன்பொதி பசுங்குடையார்

சோழன் இளஞ்சேட்சென்னி தன்னோடு போர் செய்த சேரமன்னனை வென்று இருக்கும்போது ஊன்பொதி பசுங்குடையார் என்னும் புலவர் சென்று கண்டார்,

இச் சோழன் போரில் அடைந்த வருத்தத்தால் தான் நல்க இருந்த பரிசிலைத் தாமதித்தான்.

முன்னர் பரிசில் பெற்றவர்தானே சிறிது தாமதித்துப் பெற்றுச் சென்றாலென்ன என்று அவன் கருதுவதாகவும் அவர் நினைத்தார்.

சோழன் கருதுவது தவறு என்பதை அவனுக்கு உணர்த்த விரும்பினார். துணிவுமிக்க ஊன்பொதி பசுங்குடையார் அவர் அரசனைப்பார்த்து;

"அரசே முன்னே நல்ல மழையைப் பெய்தோம் என நினைத்து மழைபெய்யாது போகுமானால் அதே போல் விளை நிலங்களும் முன்னே நல்ல விளைவினைக் கொடுத்தோம் என நினைத்து விளையாது போகுமானால் இவ்வுலகில் உயிர் வாழ்க்கை இல்லாமற் போய்விடும். நீயும் முன்னே நிறையத்தந்தாய் ஆயினும் இப்போதும் தருக என என் போன்ற பரிசிலர் வேண்டுவர். தங்களை நாடி வருபவர்களுக்கு வறுமையால்ஒன்றும்கொடுத்தற்கியலாது அவர் முகம் காண்பதற்கு அஞ்சி நாணி முகம் மறைத்து வருந்தும் தன்மை உடையோர் இனத்தைச் சேர்பவன் நீ அல்ல".

பாணர், பொருநர் புலவர் முதலானோர்க்கு வறுமை நேரும்போது கொடுத்துப் பாதுகாத்தல் அரசர்க்குக் கடனாகும் என்று அறிவுறுத்தினார்.

# வாழ்வழி

*சிவத்தமிழ்ச் செல்வி-தங்கம்மா அப்பாக்குட்டி*

## மனைத்தக்க மாண்புடைமை

வீட்டுக்கும் நாட்டுக்கும் சிறப்புத் தருபவர்கள் பெண்கள். அவர்கள் திருமகள் சொரூபமாகவிளங்குபவர்கள். இந்த விளக்கத்துக்கு இல்லறம் சிறந்த ஒரு இடத்தை வகுத்துக் கொடுக்கிறது. இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை என்பது முற்றிலும் பொருத்தமானது. சங்ககால இலக்கியங்களில் இந்த உண்மையை முழுமையாகக் காணுகின்றோம். மனைக்கு விளக்கு வாழ்நுதல் என்று போற்றப்பட்ட காலம் சங்ககாலம். பெண் என்ற சொல்லுக்கே கண்ணால் காணும்பொழுது தோன்றும் சாந்தமான தோற்றத்தின் இயல்பே என்று உரை விரித்துள்ளார்கள். "மாதர்" என்ற சொல்லுக்கு அழகு, விருப்பு என்ற கருத்துக்களும் உண்டு. பெண்மைக்குரிய இயல்புகள் அடக்கம், பொறுமை, தியாகம், இரக்கம்,அழகு,ஒப்புரவு, தொண்டு ஆகியவையாகும். இதனாலே வீட்டை வீடாகவும் நாட்டை நாடாகவும் ஆக்கி வைக்கும் பெருமை பெண்ணினத்தின் கடமையாக அமைகிறது.

எல்லாவற்றிலும் மேலாகத் தொண்டு என்ற பணி பெண்ணினத்தை உயர்த்தி வைக்கும் பணியாகும். அந்தப் பணியில் ஈடுபடுவதற்குத் தியாகசிந்தை வேண்டும். பொன்முடியார் என்ற சங்ககாலப் புலவர் ஒரு தாயின் கூற்றாக,

"ஈன்று புறந் தருதல்என்றலைக்கடனே"

என்று தொடங்கி ஒரு நற்பிரசையை உருவாக்கி விடுவதில் தாயின் கடமையை முதலிலே வைத்துப் பாடியுள்ளார், தலைக்கடன் என்று குறிப்பிடப்படுவது முதன்மையான கடமையைக் குறிப்பதாகும். தாயின் மடியிலேயே பிள்ளையின் எதிர்காலம் கால்கொள்கிறது. தாய்க்குரிய இயல்பான பண்புகளினால் அவள் பெற்ற பிள்ளையும் நற்பண்புகளைப் பயின்றுகொள்ளுகின்றான். இந்த உண்மையை உலகப்புகழ் பெற்ற உத்தமர்களை உருவாக்கிய தாய்மார்களின் வரலாறுகளிலிருந்து நாம் காணலாம். சுவாமி விவேகாநந்தரை உத்தமனாகவும், ஒழுக்க சீலனாகவும் உலகுக்குத் தந்த பெருமை அவருடைய அன்னையாருக்கே உண்டு. பட்டப் படிப்புக்காக மேற்கு நாட்டுக்குச் செல்ல இருந்த மகாத்மாகாந்தி அடிகளை மூன்று சத்தியங்களைக் கேட்டு முழுமனிதராக்கிய சிறப்பு அவருடைய அன்னைக்கு உண்டு. இப்படியாகத் தாயின் மகத்தான கடமைகளால் நன்மக்கள் பலர் நாட்டை அலங்கரித்தனர்.

"மனையறத்தின் வேரனையார்" என்று சேக்கிழார் பெருமான் பெண்களைப் போற்றுகின்றார். ஒரு மரத்தின் வேரிலே கெடுதி ஏற்பட்டுவிட்டால் வேர் காய்ந்து மரமே சாய்ந்துவிடும். அதே போன்று ஒரு பெண்மணியின் வாழ்வு இயற்கைக்கு மாறாக அமையுமானால் அக்குடும்பமே கெட்டு நாட்டுக்கும் பெரிய அழிவு ஏற்படும். வேரானது மண்ணுக்குள்ளே மறைந்திருந்து மரத்தையே முழுமையாகத் தாங்குகிறது. அதேபோன்று உத்தமமான பெண்குலம் இல்லறம் என்ற சுமையைத் தாங்கி மாண்பு மிக்க செயல்களைச் செய்ய வல்லது. அடிநிலையாகவும் அடித்தளமாகவும் இருப்பவர்களும் இவர்கள். ஒழுக்க நிலையிலும் கூட ஒரு ஆடவன் கெட்டால் குடும்பம் கெட்டுப் போகாது. ஆனால் ஒரு பெண்மணி கெட்டால் குடும்பமே அழிந்துவிடும்.

### தற்கொண்டாற் பேணல்

குடும்பத் தலைவனுடைய தகுதிக்கும், பெருமைக்கும் காரணமாக அமைபவர்கள் பெண்கள். கொண்ட கணவனின் வருவாய்க்கு ஏற்பக் குடும்பம் நடாத்த வேண்டியவர்கள் பெண்கள். கணவனை உயிராகப்பேணி மதிக்க வேண்டியவர்கள் பெண்கள். பிறந்த வீடு எவ்வளவு செல்வச் சிறப்பானதாக இருந்தாலும் புகுந்த வீட்டின் நிலைமைக்கேற்பத் தம்மை அமைத்துக் கொள்ள வேண்டிய கடமை பெண்ணுக்கு உண்டு. ஆனால் கணவனிடம் குற்றங்காணுமிடத்து உலகப் பழிச் சொல்லுக்கு ஆளாக்காது தகுந்த புத்திமதி கூறித் தடுத்து நிறுத்தியவர்களும் பெண்களே.

தெள்ளாறு என்ற இடத்தில் ஒரு ஊராட்சி மன்றம். அந்த மன்றத் தலைவி பெருங்கருணை என்ற பெயரைக் கொண்ட ஒரு பெண்மணி. அவளுடைய கணவன் மது போதையிற் பல தவறுகளைச் செய்து வந்தான். பெண்கள் நீராடச் செல்லும் இடங்களிற் சென்று தகாத வார்த்தைகளைச் சொல்லி ஏளனம் செய்வது அவனுடைய வழக்கம். இந்த முறைப்பாடு ஊராட்சி மன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இவனுடைய மனைவிதான் தலைமை தாங்கி நீதி வழங்கினாள். உயர்ந்த தண்டனை கொடுக்கப் பட்டது.

அதிகாலையிலே தொடர்ந்து நாற்பத்தெட்டு நாள்களுக்கு அங்குள்ள கோயில்களுக்குச் சென்று சரியைத் தொண்டு செய்து விளக்கேற்றி வர வேண்டும் என்பது அந்தத் தீர்ப்பாகும். தலைமை தாங்கிய அம்மையாரே மறுநாட் தொடக்கம் இந்தக் கடமைகளைச் செய்து வந்தாள். இதைக் கண்ட பெண்களுக்கு பெரிய அதிசயம். கணவனின் தண்டனையை மனைவி ஏற்றுக் கடமை புரிகிறாளே என்று பெருங்கருணையிடம் இது பற்றி உசாவினர். அவள் கூறியவை பின்வருமாறு:

"நீதிபதி என்ற முறையிற் குற்றத்திற்கேற்ற தண்டனை கொடுத்தேன். மனைவி என்ற முறையில் அவருடைய துன்பத்தில் பங்கேற்கிறேன்". இதனாலே கணவனும் நாளடைவிலே திருந்திவிட்டான். ஊரவர்களும் அப் பெண்மணியின் மாண்பான செயலைப் பாராட்டினார்கள்.

மனைத்தக்க மாண்புடைமை அமையுமானால் பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்ற கேள்விதான் அனைவராலும் எழுப்பப்படுமன்றோ.

## சிறுகதை

## உயிர்ப்பு

சுந்தரத்தைக் கண்டதும் ரவியின் மனைவி அடக்க முடியாமல் அழ ஆரம்பித்தாள். அவனுக்கும் விம்மல் பொருமியது. ரவியின் மக்களிருவரும்– விடலைப்பருவம்– சுந்தரத்தின் அருகில் வந்துநின்று கேவினார்கள். 'அப்பாவைப் பாத்தீங்களா, மாமா...'–? மூத்தவன் அழுதான்.

ரவியின் உடல் அலங்கரிக்கப்பட்டு, பேழையுள் இருந்தது. தூங்குவது போல அந்த



முகம். வழமையான முறுவல். அவன் வாழ்க்கை இப்படி முடியுமென்று யார்தான் எதிர்பார்த்தார்கள்? துடிப்பும் துணிச்சலும் நம்பிக்கையுமாய் வாழ்ந்தவன் ரவி. சாவையும் அப்படியே எதிர் கொண்டான் என்பதை இம்முறுவல் நிருபிக்கிறது.

தலைமாட்டில் குத்துவிளக்கு, சாம்பிராணி வர்த்தியும் வாசனைத் தைலமும் அந்த இடத்தைத் தம் மணங்களால் நிரப்பியிருந்தன. எதிர்பாரா அதிர்ச்சியால் தளர்ந்து போயிருந்த சுந்தரத்திற்கு இச்சூழல் தலை சுற்றச் செய்வதாயிருந்தது. ரவியின் மனைவியையும் மக்களையும் என்ன சொல்லித் தேற்றலாமென்று தெரியவில்லை. எப்படி ஆறுதல் கூற முடியும்?... பையன்களிருவரையும் அணைத்தபடி திரும்பினான்.

உற்றாரும் உறவினருமாய்க் குழுமியிருந்த கூட்டங்களிலிருந்து விடுபட்டு மூலையிலிருந்த தனிக் கதிரையொன்றிற் போயமர்ந்தான். மூக்கைச் சிந்தி, முகத்தை மீண்டும் துடைத்து... ரவி, அவனுக்கு வெறும் நண்பன் மட்டுமல்ல; உடன் பிறவாச் சகோதரன் போல. அயல், ஒன்றாகவே பள்ளிக்குப் போகத் தொடங்கி சாதாரணதர வகுப்புவரை ஒன்றாகவே படித்தார்கள். பிறகு பாதைகள் கொஞ்சம் பிரிந்தன. ரவி கணிதம் படித்தான். சுந்தரம் உயிரியலுக்குப் போனான். இரண்டாவது முயற்சியிலேதான் இருவருமே பல்கலைக்கழகம் புகுந்தார்கள். படிப்பை முடித்தது வேலை கிடைத்தது, கல்யாணம் செய்து கொண்டது எல்லாம் ஏறத்தாழ ஒரே சமயத்திலேயே. ஒத்த பாதையும் ஒத்த அநுபவங்களும் உறவை நெருக்கின.

கடந்த ஒரு வாரமாகக் கொழும்பில் நின்று விட்டு இன்று மத்தியானம் வீட்டுக்குத் திரும்பியபோது இந்த இடிச் செய்தி. ஒரு மயிரிழை ஆறுதல்– கடைசியாக ரவியின் முகத்தையாவது ஒரு தடவை பார்க்க முடிந்ததில், உடைகளைக் கூடச் சரியாக மாற்றிக் கொள்ளாமல் இங்கு ஓடி வந்திருக்கிறான்.

குருக்கள் வந்தாயிற்று. கிரியைகளுக்கு ஆயத்தம். தானும் போய்க் கூட மாட ஏதாவது செய்யத்தான் வேண்டும். ஆனால், சுந்தரத்தால் எழவே முடியாத மாதிரியிருந்தது. இருந்த இடத்திலேயே பார்த்துக் கொண்டிருந்தான்.

ரவியின் மக்கள் தோய்ந்து, வேட்டி கட்டி, நெற்றியில் நீறும் மார்பில் பூணூலுமாய்...

ரவிக்கும் சுந்தரத்திற்கும் ஒரேயொரு வித்தியாசம்–கல்யாணமாகிப் பதினைந்து வருஷமாகியும் சுந்தரத்திற்கு இன்னும் பிள்ளைகளில்லை. ரவிக்கு இவர்களிரண்டு பேரும், மூத்தவன் சரியாக ரவி மாதிரி, அதிலும் இங்கிருந்து பார்க்கும் போது ரவியேதான். ரவி

**சாந்தன்**

சாகவில்லை. அந்தா, அது ரவிதான். அவன் மிகுதி அல்லது பகுதி அவர்களில் ரவி இருக்கிறான். தங்கள் தந்தை தந்ததை அடுத்த சந்ததியிடம் அவர்கள் கையளிப்பார்கள்.

அப்படியே உயிர்க்கொடி அவர்களூடு படரும். ரவி நீடு வாழ்வான்...

இருந்தாற் போல சுந்தரம் உணர்ந்தான்–தன் சங்கிலியை யார் தொடர்வார்கள்? அடுத்த கணு? உயிரெனும் அந்த உந்நதச் சொத்தை அவன் எவரிடம் கையளிப்பான்–தன் மூதாதையர் தனக்களித்ததை? அவனூடு அக்கொடி தொடராது... இறந்தவன், ரவியல்ல; தான்தான்!

சுந்தரம், திடுக்குற்று விழித்தவன் போலுணர்ந்தான்.

# மா வேண்டுமா? மா!

**செ. நடராஜா**

பையும் கையுமாகத் தெருவில் இறங்கினேனோ இல்லையோ எதிர்த்தரப்பில் இருந்து எனது அருமை நண்பர் அடுத்த வீட்டு அருமைநாயகம் கையைத்தட்டி என்னை அழைத்தார். நான் அவரருகிற் சென்றதும், அவர் நெருங்கி வந்து'' 'என்ன ஐயா! எங்கே கிளம்பி விட்டீர்கள் பையுங் கையுமாக எங்கேயாவது...!

'மெல்லப் பேசுங்கள் ஐயா!; வீட்டுக்காரியின் தொணதொணப்புத் தாங்க முடியாமல் மா வாங்கக் கிளம்பியிருக்கிறேன். அந்தச் சமயத்தில் நீங்கள் எதிர்ப்பட்டிருக்கிறீர்கள்; இன்றைக்காவது மா கிடைத்தால்தான் வீட்டிலே எனக்கு நிம்மதி. இல்லாவிட்டால்...' நான் பேச்சைத் தொடர்வதற்குள் நண்பர் அருமைநாயகம் குறுக்கிடு செய்தார்.

'நாங்கள் அடுத்த வீட்டுக்காரராய் இருக்கும் ஒற்றுமையிலும் பார்க்க எங்களுக்கேற்படுகிற பொருள்களின் தட்டுப்பாட்டிலே ஒரு ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. பார்த்தீர்களா? மாவைத் தேடித்தான் நானும் கிளம்பியிருக்கிறேன். எங்கேயோ தாராளமாக மா கொடுக்கிறார்களாம். 'ரேஷன்' அட்டை ஒன்றும் தேவையில்லையாம். கட்டுப்பாட்டு விலைக்கே மா விநியோகம் நடைபெறுகிறதாம். நமது மனைவிக்கும் நமக்கும் சண்டையை? உண்டு பண்ணி விடுகிற இந்த மாவைக் கண்டு பிடித்து விட்டுத்தான் மறுவேலை!' என்று மாவைக் கண்டுபிடித்து விட்டவர் போல ஒரே உற்சாகத்துடன் குதிக்க ஆரம்பித்து விட்டார் நண்பர்.

நானும் நண்பரும் பேசிக்கொண்டே சுமார் இரண்டு பர்லாங் தூரம் சென்றிருப்போம். எதிரே தோன்றிய சுவரிற் பல விதமான சுவரொட்டி விளம்பரங்களுக்கு நடுவே எதையோ பார்த்து விட்டு நண்பர் திகைத்துப் போய் நின்று விட்டார்.

'என்ன எதற்கு நின்று விட்டீர்கள்?' அப்படி என்ன அதிசயத்தை அங்கே கண்டு விட்டீர்கள்?' என்று நண்பரின் தோள்களைத் தட்டியவாறே கேட்டேன்.

நாம் 'தேடிப்போகிற மாவுக்கு எத்துணை பெருமை பார்த்தீர்களா? அங்கேபாருங்கள் அந்தச் சுவரை. அங்கே 'திருமா' என்று போட்டிருக்கிறதே அவதானித்தீர்களா? 'திருமா' என்றால் திரு மா அல்லது திருவாளர் மா என்று தானே பொருள். இந்தக் காலத்திலே எதற்குத்தான் பாராட்டுவிழா இல்லை' என்று ஏதோ பெரிய உண்மையை அறிந்து விட்டவர் போல நண்பர் அருமைநாயகம் உற்சாகமாகப் பேச ஆரம்பித்து விட்டார். 'திருமால்பெருமை' என்ற 'சினிமா' படத்தின் தலைப்புத்தான் இப்படிச் சிதைந்து போய் விட்டதென்றால் நண்பர் கேட்கவா போகிறார்?

சுவரொட்டி ஆராய்ச்சியில் இருந்து நண்பரை விடுவித்துக் கொண்டு மா தேட வந்ததை அவருக்கு ஞாபகப் படுத்தி மேலும் ஒரு பர்லாங் தூரம் சென்றிருப்போம் அவசரக் கோலத்தில் சைக்கிளின் மணியோசை கேட்கவே நானும் நண்பரும் பின்னாலே திரும்பிப்பார்த்தோம். எம்மிருவருக்கும் தெரிந்த நண்பர் சுந்தரமூர்த்தி படுவேகமாக சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். எம்மைத் தாண்டிச் செல்லும் போது நாம் அவரைப் பார்த்தோம் 'மிக அவசரம் மா...' என்ற வார்த்தைகள் மட்டும் நண்பர் சுந்தரமூர்த்தியின் வாயிலிருந்து வெளி வந்தன. அங்க வஸ்திரம் விழுந்து விட்டது; எடு' என்று சொல்வதற்குள் நள மகாராஜன் தேர்ப்பாகனாக இருந்து செலுத்திக் கொண்டு வந்த இரதம் நாலாறு காதம் போய்விட்டதாக நளவெண்பாவில் படித்திருக்கிறோம் அல்லவா? அத்துணை வேகமாக நண்பர் சுந்தரமூர்த்தியின் சைக்கிள் செல்லாவிட்டாலும்' மிக அவசரம் மா' என்று அவர் எம்மைப் பார்த்துச் சொல்வதற்குள் நூறு யாருக்கு மேலே போய் விட்டது!

நண்பர் அருமைநாயகத்தின் அருமையான மூளை வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. ஆராய்ச்சியிலேயே உறைந்து கிடந்தது அவரது மூளை!

'மிக அவசரமாக மா தேடிச் செல்கிறேன்' என்று சுந்தரமூர்த்தி கூறியிருக்கிறார். மிதி வண்டியின் வேகத்தில் அது அரையுங் குறையுமாக நமது காதுகளில் விழுந்திருக்கிறது. எட்டிப் போடுங்கள் கால்களை! அவர் சென்ற திசையிலே நாமும் செல்லலாம்!' என்று அவசரப்படுத்தினார் நண்பர் அருமைநாயகம்.

எனக்கும் ஒரு சபலம் சுந்தரமூர்த்தியின் வழியிற் சென்றாவது மாவை வாங்க மாட்டோமா என்று.

'சரி எட்டி நடவுங்கள் நாம் போய்ச் சேருவதற்குள் மா எல்லாவற்றையும் கொடுத்துத் தீர்த்துவிடுவார்கள். ஏமாற்றத்தைத் தவிர்க்க வேண்டுமானால் ஓடினாலும் பரவாயில்லை!, என்றேன் நான்.

நண்பர் பாவம் ஓட்டத்திற்கு ஆயத்தமானார் 'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்' என்ற மாதிரியல்லவா இருக்கிறது இந்த மா சமாச்சாரம்!

எதிரே வரும் வண்டிகளையும் பாதசாரிகளையும் எப்படியோ சமாளித்துக் கொண்டு நானும் நண்பரும் ஓட்டமும் நடையுமாகச் சென்று கொண்டிருக்கும் போது என் கால்கள் கெஞ்ச ஆரம்பித்தன. நமது ஓட்டத்தைச் சற்று நிதானப் படுத்தி எதிரே வந்து கொண்டிருந்த ஒருவரை நிறுத்தி மிக இரகசிமாக 'மா' வைப்பற்றி விசாரித்தோம்.

'இங்கே எங்கேயோ மா விநியோகஞ் செய்வதாக நண்பர் ஒருவர் கூறினார். தங்களுக்கு அந்த இடத்தைத் தெரியுமா?' என்றேன் நான்.

எதிரில் நின்றவர் இடியிடியென்று சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

இங்கே 'மாவை உணவாகக் கொள்ளாமல் தவிர்ப்பதெப்படி' என்பதைப்பற்றி ஒரு மாநாடு நடக்கிறது இங்கே வந்து மாவைப்பற்றிக் கேட்கிறீரே!' என்று கூறியதோடு நின்றுவிடாமல் அந்தப் புதியவர் மாநாடுநடக்கும் இடத்திற்கு வழியைக் காண்பித்து விட்டு விடுவிடென்று தம்வழியே போனவர் திரும்பி வந்தார்.

நானும் நண்பரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் விழித்துக் கொண்டிருந்தோம்!

'யாரையா நீங்கள்? உங்களைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது; எதற்காக ஒருவரை ஒருவர் பார்த்து விழித்துக் கொண்டிருக்கிறீர்கள் எதையாவது தொலைத்து விட்டீர்களா, அல்லது...', அந்தப் புதியவருடன் நான் தான் முதலிற் பேசினேன்.

'ஒன்றுமில்லை ஐயா, உங்களிடம் கூறினால் என்ன, எங்களுக்கு கொஞ்சம்' அமெரிக்கன் மா' தேவைப்படுகிறது அதற்காகத்தான்.

அந்தப் புதியவருக்குக் கோபம் வந்துவிட்டது 'நாங்கள் இங்கே மா கிடைத்தால் போதுமென ஆலாய் பறக்கிறோம் உங்களுக்கு 'அமெரிக்கன்' மாவா தேவைப்படுகிறது? அமெரிக்கன்மா வேண்டுமென்றால் அமெரிக்காவுக்குப் போக வேண்டியது. தானே. இங்கே எதற்காக நின்று கொண்டிருக்கிறீர்கள்.''

புதியவரின் கோபம் வார்த்தைகளாக உருவெடுத்து என்னைச்சாடின. இச்சாடலால் தவித்துப்போன என்னை நண்பர் அருமைநாயகம் காப்பாற்றியருளினார்.

உங்களுக்கு விளக்கமாக சொல்ல வேண்டும் என்பதற்காக 'அமெரிக்கன்' மா என்று கூறிவிட்டார் எனது நண்பர்' அதை மன்னித்து விடுங்கள். எங்கேயாவது தங்களுக்குத் தெரிந்த இடத்தில் மா அகப்படுமா என்று கூறுங்கள். உங்களுக்கு கோடி புண்ணியமுண்டு! அழாக் குறையாகப் பவ்வியமாக விண்ணப்பித்துக் கொண்டார் நண்பர் அருமைநாயகம்.

அந்த புதியவருக்கு என்ன தோன்றிற்றோ என்னை அழைத்துக் காதோடு இரகசியம் பேசினார்.

அப்படியா! அடே! என எனது வாய் முணுமுணுத்ததை கேட்ட நண்பர் அருமைநாயகத்திற்கு ஆவல் எல்லையை மீறிவிட்டது.'புதியவர் அவ்விடத்தை விட்டு அகன்ற பின்னர் என்னைப் பிடித்துக் கொண்டார்.

ஐயா! இது ஒன்றும் அப்படி 'வாட்டகேற்' விவரமல்ல. மாவைக் கண்டுபிடிக்க உபாயம் சொல்லியிருக்கிறார். நீர் என்பின்னாலேயே வாரும்!' என நண்பர் அருமைநாயகத்தையும் அழைத்துக் கொண்டு கடை முதலாளி முத்தையா வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தேன்.

முதலாளி முத்தையா வார்த்தையில் உற்சாகமே இல்லாமல் தயங்கித் தயங்கி எம்முடன் வார்த்தையாடினார். வந்த விஷயத்தை நாம் 'நைசாக' அவருக்குப் புரிய வைத்ததும், மனுஷன் துள்ளிக் குதித்து ஆர்ப்பாட்டம் பண்ணினாலும் சகித்துக் கொள்ளலாம். என்னைப் பற்றி நீங்கள் என்ன நினைத்துவிட்டீர்கள்! என என்மீது பாய்ந்தாலும் 'சிவனே' என்று தாங்கிக் கொள்ளலாம், இவையிரண்டையும் தவிர்த்து விலாவைப் பிடித்துக் கொண்டு அசட்டுச் சிரிப்புச் சிரித்ததுதான் எமக்குப் பெரிய அவமானமாக இருந்தது. நாங்கள் அப்படியென்ன கேட்காத விஷயத்தைக் கேட்டு விட்டோம்?

முதலாளி முத்தையா கூறினார்:

'மாவைத் தேடி என் வீடு வந்த மூன்றாவது நபர் நீங்கள். இப்படி வந்ததற்கு உங்கள் மீது குற்றஞ் சுமத்தவில்லை. எல்லாம் எனது அருமை மருமகனாலும் அடுத்த வீட்டு அண்ணாச்சாமியாலும் வந்த வினை.

'என் மருமகன் பாலு என் மீது அத்தியந்த பற்றுதல் கொண்டவன் அவன் அடிக்கொரு தடவை என்னை மாமா மாமா என்று அழைத்துக் கொண்டேயிருப்பான். மா மா மா மா என்ற ஓசையால் வீடே நிறைந்துபோய் விட்டது.

'நானும் முதலாளியாக இருக்கிறேன். வீட்டிலும்

15 ஆம் பக்கம் பார்க்க

# ஈழத்து கவிஞர் பக்கம்

## என்ன சொல்வேன் ஏது செய்வேன்

சினிமா நண்பர் சினிமா பார்த்தால்
சினிமா பற்றிச் சிறிதும் சொல்லார்
பக்கலில் இருந்த பாவை பற்றிப்
பக்கம் பக்கமாய்ப் பாடம் சொல்வார்

எனக்கும் இதிலோர் அநுபவம் காண
எடுத்தேன் ''ரிக்கற்'' 'பல்கனிக்' கென்றே
எல்லா இடமும் நோட்டம் விட்டு
ஏந்திழை ஒருத்தி பக்கலில் அமர்ந்தேன்

கொவ்வைச் சிரிப்பும்; கன்னக்குழியும்
கூந்தலழகும்; கொல்லும் கண்ணும்
என்ன சொல்வேன் அவள் எழில் கூற
கவிஞனல்லவே காவியம் பாட

ஊரைக் கூறி உறவைச் சொல்லி
ஒருவழியாக நட்பைப் பெற்றேன்
நதியா நடிப்பை அவளே கேட்டாள்
நடிப்பதற்கென்றே பிறந்தவள் என்றேன்

காலால் தட்டித் தலையைத் தடவி
கையைப் பிடித்துக் காதிற்பேசிக்
கற்பனை என்னும் குதிரையில் ஏறிக்
கதிரையில் இருந்து கனவு கண்டேனே

இடைவேளை இடையில் ஏன்தான் வந்ததோ?
இருந்தும் என்ன 'கொக்கோ கோலா'
உடைத்துக் கொடுத்து ரசித்துக் குடித்து
மைனர் செயினை வெளியில் விட்டேன்

ஓடும் படத்தை யார்தான் பார்ப்பார்
ஒருவழியாக என் நதியா வந்தாள்
ஆடும் அவள் நடை இடை பார்க்கவே
அருகில் இருந்தவள் எங்கே மறைந்தாள்

படம் முடியவே பாடம் தெரிந்தது
கை எல்லாம் ஒரே'டை'யாய் இருந்தது
பல் செட் ஒன்றும் பல்லை இளித்தது
மைனர் செயினும் மாயமாய் மறைந்தது

என்ன சொல்வேன் ஏது சொல்வேன்
என்னிலை பற்றி என்ன சொல்வேன்
இரவற் செயினை நண்பன் கேட்டால்
என்ன சொல்வேன் ஏது சொல்வேன்?

வாணிகேள்வன்

## பொருளற்றுப் போன புனிதச்சொற்கள்

எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே''
என்பது தொல்காப் பியச்சொல் இலக்கணம்
'ஆகாயத் தாமரை ஆமைமயிர்க்கம் பளம்
போன்றவற் றிற்கும் பொருள்உண்டோஎனில்
'பொருளில்லை என்பதே பொருளிவற் றிற்கெனத்
'தருக்கநூல்' வல்ல இலக்கண உரைசெய்!
'சேனு வரையர் சொல்கிறார் உரையில்
'பொருளின் மையைத்தம் பொருளாக் கொண்ட சொல்
இவைபோல் ஒருசில தாம்அவர் காலத்தே
எங்கள் தமிழில் இருந்தன இன்றோ
அன்பறம் 'நீதி'நேர்மை மனி தத்தன்மை
பண்பாடு போன்ற புனிதப் பொருள் தரும்
சொற்களே கூட ஆற்றல் அழிந்தே
'பொருளின் மை,யைத்தம் பொருளெனக் கொள் சடச்
சொற்களாய் மாறிப் பொருளற்றுப் போயினவே!

அல்லை. க. வ. ஆறுமுகம்

## மனிதம் வாழும்!

தெள்ளரிய சிந்தனையால் மனிதமாகும் - உயர்
செய்கையினால் மனிதரிலே தேவனாகும்
வள்ளண்மை உண்மையினால் புனிதனாகும்-மன
வண்மைமிகு மானிடர்கள் மடிவதுண்டோ?

வெள்ளை மனம் தன்னோடு விளையும் நேர்மை-பிறர்
வேதனையில் தோள் கொடுத்து உதவும்நீதி
உள்ளவரை எளியோரை உயர்த்தும் செய்கை-இந்த
உயர்வினிலே மிளிர்வோனை உலகம் போற்றும்!

ஆசைகளில் அலையாது மனதைப் பார்த்து-தூய
அன்பாலே உலகினையே ஒன்று சேர்த்து
பாசமுடன் வாழ்கின்ற பண்பு நெஞ்சம்-அது
பலகோடி காலங்கள் இங்கு வாழும்!

இச்சைகளை மனதாலே கட்டி ஆளும்-நல்
இயல்பாலே கற்பு நெறி முறைகள் பேணும்
பிச்சை மனம் கொள்ளாது உயர்ந்து நிற்கும்-நற்
பேரறிவு மிக்கவரால் மனிதம் வாழும்!

மனிதநெறி காக்கின்ற மானிடர்க்கு-பொன்
மனமென்னும் செல்வந்தான் சொந்தமாகும்
புனித நிலை அதுவன்றி யாதுமில்லை-அது
வானுளில் அறிவாட்சி மாண்பு தானே!

வளலாய்-ரஞ்சன்

## வானம் பொழிகின்றது

கோடையில்
கொட்டுது
கண்களைப்
கலக்கிடும்
கருநிற
கண்டது
திசையெல்லாம்
செறிந்தது
இருண்ட
இடைக்கிடை
இமைப்பது
இருந்திடும்
கருமுகிற்
இருளினில்
சுமைதனைத்
துயருறும்
வானமே
வந்திடும்
சுமைதனைத்
துன்புற்ற
தாழ்ந்துமே
தந்திடும்
சோவெனச்
யாழிசை
கொடும்
கோரமாய்
தாய்மையே
பூமணம்

இடி
மழைதான்
பறிக்கும்
அச்சம்
மேகக்
வானம்
தூங்கினுற்
இருள்தான்
அவ்வானத்
மின்னல்
போலே
அந்தக்
கூட்டம்
உலகம்
தாங்கி
போது
வெடிப்பதைப்
மின்னல்
தாங்கி
முகில்கள்
கீழே
மழையாய்
சொரிந்து
இனிமை
இடிமுழக்கம்
மின்னல்
எங்கும்
எங்கும்

இடித்துக்
இங்கே
மின்னல்
தந்து
கூட்டம்
எங்கும்
போல்
எங்கும்
தின்கண்
வந்து
கண்கள்
காட்சி
வானில்
மூழ்கும்
டாது
அங்கே
போல்
ஒன்றுய்ச்
டாது
இப்போ
வந்து
நீரைச்
தள்ளும்
கேட்கும்
இல்லை
இல்லை
தோன்றும்
வீசும்

வ. யோகானந்தசிவம்

## என் சிந்தையில் நீ

குருட்டுமயில் ஆடாததைக் கண்ட இருட்டுமேகம்
தான் மேகமில்லையோ என நினைத்து
தன் முகத்தை மின்னலால் சொறிந்து கொண்டது
கண்ணே உனைப்பார்த்த கோவில் சிலைகள் கூட
ஒரு கணம் கண் இமைக்க மறந்தனவோ
நீ உன் கூந்தலை ஆகாய கங்கையில் நனைத்ததால்
ஆகாய கங்கை வற்றியது

கண்ணே நீ எட்டிப்பார்க்கவே நிலா வந்ததாய்
நினைத்து மறைந்தது சூரியன்
உனைத்தொட்ட தென்றல் சந்திரனைத் தீண்டியதால்
அதன் மீது சந்தன மழையாம்
உன் கூந்தலை வானமென நினைத்து கீழேயிறங்கிய
சூரியனைக்கண்டு கிண்டல் செய்தன வெள்ளிகள்

கண்ணே நீ அண்ணாந்து பார்த்தது
கண் கூசியதோ சூரியனுக்கு
நீ குளித்த ஆற்றில் நான் பிடித்த மீனின்
உடலெல்லாம் ரோஜா மணமல்லவா

கண்ணே என் கண்ணுக்குள் நீ இருப்பதால்
நான் கண்தானம் செய்ய விரும்பவில்லை
கண்ணே உன்னைப்படைத்தபின் தான்
பிரமனுக்கு கவிஞன் என்ற கர்வமோ

கண்ணே நீ பிறந்தாய் தங்கத்தை கண்டு
பிடித்ததற்காய்
உன் தாய்க்கு நோபல் பரிசு
கயிலையையும் என் இதயத்தையும் தூக்கிய
இராவணனுக்கு கனத்தது என் இதயமாம்
என் சிந்தையில் நீ எப்படியென்று பாரேன்

புங்கையூர் :கதிர்திவ்வி

## சிந்தனை

மனம்
என்னும்
சிறையிருப்பை
உடைத்துக் கொண்டு
பகுத்தறிவு
என்னும்
தேசிய கீதத்தை
பாடிக் கொண்டு.
வான வெளியில்
வட்ட மிட
விரும்பும்
அற்புதப்புறு

மேசிலன்

## நிம்மதியை தேடி நான்..

இவ்வுலகில்
நிம்மதியாய்
வாழ்வதற்கு
நிம்மதியை
நான்
தேடிக்
கொண்டிருக்கின்றேன்
அது
வெகு தொலைவில்
இருப்பதாக
பலர்
சொல்லுகிறார்கள்
அதனால்
அது
எங்கே
இருக்கின்றது
என்று
தேடுவதற்கு
புறப்பட்டு
விட்டேன்
எப்பிடியாவது
கண்டு
பிடித்து விட்டால்
பூவுலகில்
நிம்மதியிழந்து
தவிக்கின்ற
பலருக்கு
பங்கீட்டு
முறையில்
வழங்க
எண்ணியுள்ளேன்
நிம்மதி
வேண்டுவோர்
முற்பணத்துடன்
தொடர்பு
கொண்டால்
நிம்மதி
நிச்சயம்
கிடைத்துவிடும்

அளவையூர்
பு. உதயகுமார்

## என் இதய வாசல்

என் இதய
வானத்திலே
சிறகடித்த வான்பறவை
உன் பிரிவுத் துடிப்பில்
சிறகு உடைந்து
போகுதடி

என் இதயத்
தோட்டத்திலே
இதழ் விரிந்த ரோஜாப்பூ
உன் பிரிவு வெம்மையில்
இதழ்உதிர்ந்து போகுதடி

என் இதய வீணையிலே
எழும் இனிய சுபராகம்
உன் பிரிவுத் துயரில்
முகாரி ராகம் பாடுதடி

என் இதயக் கோயிலிலே
ஏற்றி வைத்த ஒளி தீபம்
உன் பிரிவுப் புயற்காற்றில்
ஒளி இழந்து போகுதடி

என் இதய வாசலிலே
கோலமிட்ட கருவிழிகள்
உன் பிரிவுத் தாகத்தில்
செயல் இழந்துபோகுதடி

செ. புவனா

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொலைக்காட்சிப் பெட்டி உரிமையாளர்களின் எண்ணிக்கை விரைவாக அதிகரிக்கிறது தொலைக்கா'சிப் பெட்டிகளின் பரம்பல், அதற்கான காரணிகள் நுகர்வின் தன்மை நுகர்வினூற் கிடைத்த அநுகூலங்கள் ஆகியவற்றை இக்கட்டுரை ஆராய்கிறது

# யாழ். மாவட்டம்: தொலைக்காட்சி பரம்பல்; பயன்பாடு

யாழ். பல்கலைக்கழகம் விரிவுரையாளர்
கா. குகபாலன்

இன்றைய உலகிற் சமூக பொருளாதார, கலாசார குறிகாட்டிகளாகத் தொடர்பு சாதனங்கள் அமைகின்றன. பத்திரிகை, வானொலி, சினிமா, முதலிய தொடர்பு சாதனங்கள் பல ஆண்டுகளுக்கு முன்னரே மக்களைச் சென்றடைந்து விட்டன.

1880-ம் ஆண்டிலிருந்து தொலைக்காட்சி பற்றியநுட்ப முறைகள் படிப்படியாக வளர்ச்சி பெற்றதெனினும் 2ம் உலகயுத்தத்துக்குப் பிற்பட்ட காலப்பகுதியிலேயே சிறப்பான வடிவம் பெற்றதெனலாம். விருத்தியடைந்த நாடுகளில் வட அமெரிக்கா, ஐரோப்பா, யப்பான், துரித வளர்ச்சியைப் பெற்றுள்ளன. அண்மைக் காலங்களில் விருத்தியடைந்து வரும் நாடுகளின் மக்களிடத்து துரித உள்நுழைவை ஏற்படுத்தி வரும் சாதனம் தொலைக்காட்சியே.

1948-ல் ஐக்கிய அமெரிக்காவின் பல்வேறு அலைவரிசைகளில் ஒளிபரப்பட்ட தொலைக்காட்சிநிகழ்ச்சிகளை 4கோடியே 60 லட்சம் குடும்பத்தினர் கண்டுகளித்தனர். 1970 களில் 95 சதவீதமான அமெரிக்க குடும்பங்களிற் குறைந்தது ஒரு தொலைக்காட்சிப் பெட்டியாவது இருந்தது எனக் கணிப்புத் தெரிவித்துள்ளது. இதற்கு மாறாக இந்தியாவில் தூரதர்சன் ஒளிபரப்பு 8 வீத நிலப்பரப்பினையும் 14.9 வீத குடித்தொகையையும் மட்டுமே உடையதாகக் காணப்பட்டது. இலங்கையில் தொலைக்காட்சிச் சேவை 1979 லிருந்து அறிமுகம் செய்யப்பட்ட போதிலும் 1980-ம் ஆண்டின் பின்னரே வளர்ச்சியடைந்த நாடுகளின் தரத்தினைக் கொண்டதாக விஸ்தரிக்கப்பட்டது. இதன் விஸ்தரிப்பிற்கு உலகின் தொலைக்காட்சிப் பெட்டிகளை அதிகம் உற்பத்தி செய்வதுடன் இவைபற்றிய நுட்ப முறைகளில் ஏனைய நாடுகளுக்குச் சவாலாகவும் அமைந்துள்ள யப்பானின் பூரண ஒத்துழைப்புக் குறிப்பிடத்தக்கதொன்று.

இலங்கையில் 1985 ம் ஆண்டில் இரண்டு லட்சத்திற்கும் சற்று அதிகமாகத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்திருக்கும் நிலை காணப்பட்டது. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சுதந்திர தொலைக்காட்சி சேவை ஆகியன உள்நாட்டு, வெளிநாட்டு நிகழ்ச்சிகள் கொண்ட காட்சிகளை மக்களின் பார்வைக்குத் தருகின்றன. சிங்களமொழி, பௌத்த கலாசார நிலைமைகளுக்கு ஏற்ப அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதனால் தமிழ் பேசும் மக்கள் ஆரம்ப காலங்களிற் தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கவோ தொலைக்காட்சி பார்க்கவோ ஆர்வம் காட்டவில்லை. எனினும் 1983-ம் ஆண்டு ஜுலையில் நடைபெற்ற இனக்கலவரத்தின் பின்னர் தமிழ்ப் பிரதேசங்களிற் குறிப்பாக யாழ் குடாநாட்டில் தனிப்பட்ட சிலர் உள்ளூர்த் தொலைக்காட்சி சேவையினை அறிமுகம் செய்தனர். இதன் விளைவாக அந்த ஒளிபரப்புக்களை பெருமளவில் நுகரும் பக்குவம் மக்களிடையே அதிகரித்தது. உள்ளூர்த்தொலைக்காட்சி சேவை மக்களின் அன்றைய நிலையின் தேவையைப் பூர்த்தி செய்ததேயொழிய சேவையைப் பெற்றுக் கொண்டவர்கள் எனக் கூறமுடியாது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1981-1987-ம் ஆண்டுக் காலப் பகுதியிலேயே தொலைக்காட்சிப் பெட்டி உரிமையாளர்களின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்தது. இம் மாவட்டத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகளின் பரம்பல் அதற்கான காரணிகள், நுகர்வின் தன்மை, நுகர்வினூற் கிடைத்த அநுகூலங்கள் ஆகியவற்றை அறிதலே இக்கட்டுரையின் அடிப்படையின் நோக்கமாகும்.

இவ்வாய்வின் முற்பகுதி, 1987-ம் ஆண்டு மார்ச், ஏப்ரல் காலப் பகுதிகளில் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாண அரச அதிபருடாகக் கிராம சேவையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பரம்பல், அடர்த்தி ஆகியனவற்றை அறிய முற்பட்டது. இரண்டாவது பகுதி யாழ். உதவி அரச அதிபர் பிரிவில் வண்ணார்பண்ணை வடமேற்கு பிரிவும், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கொக்குவில் கிழக்கு பிரிவும் தெரிந்தெடுக்கப்பட்டு தொலைக்காட்சிப் பெட்டி உரிமையாளர்களில் 10 வீதத்தினரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பயன்பற்றி ஆய்வு செய்யப்பட்டது. இவ் இருபிரிவுகளிலும் 109 குடியிருப்பாளர்களிடம் வினாக்கொத்து வழங்கப்பட்டு விவரங்கள் திரட்டப்பட்டன.

யாழ். மாவட்டம் ஆய்வுக்குட்பட்ட காலத்தில் 13 உதவி அரச அதிபர் பிரிவுகளைக் கொண்டிருந்தது. 1981-ம் ஆண்டுக் கணிப்பின் படி 738,791 மக்களைக் கொண்டிருந்த போதிலும் பௌதிக, பண்பாட்டுக் காரணிகள் குடித்தொகைப் பரம்பலில் வேறுபட்ட பண்பினைக் கொண்டிருக்கின்றன. நெடுந்தீவு, தீவுப்பகுதி வடக்கு, தீவுப்பகுதி தெற்கு, வலிகாமம் மேற்கு, வடமராட்சி வடகிழக்கு, தென்மராட்சி ஆகிய பிரிவுகள் பௌதிக, பொருளாதார ரீதியில் ஏனைய பிரிவுகளில் பின்னடைவு கொண்டவை. இருப்பினும் ஏனைய பிரிவுகளிலும் குறிப்பிட்ட சில பகுதிகள் பின்தங்கியுள்ளன. இதனை யாழ்ப்பாண மாவட்டத்தின் தொலைக்காட்சிப் பெட்டிகளின் பரம்பலில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன,

## தொலைக்காட்சிப் பெட்டிகளின் பரம்பல்

| உதவி அரசஅதிபர் பிரிவு | குடியிருப்பாளர் | நிறுவனம் | மொத்தம் | வர்ணம் | கறுப்பு வெள்ளை |
|---|---|---|---|---|---|
| நெடுந்தீவு | 9 | — | 9 | 6 | 3 |
| தீவுப்பகுதி வடக்கு | 466 | 2 | 468 | 335 | 133 |
| தீவுப்பகுதி தெற்கு | 349 | 4 | 353 | 227 | 126 |
| யாழ்ப்பாணம் | 2780 | 35 | 2815 | 1707 | 1108 |
| நல்லூர் | 3979 | 4 | 3983 | 2587 | 1396 |
| வலி-கிழக்கு | 1425 | 3 | 1428 | 927 | 501 |
| வலி-தெற்கு | 601 | 8 | 609 | 339 | 270 |
| வலி-வடக்கு | 775 | 7 | 782 | 463 | 319 |
| வலி-மேற்கு | 915 | 2 | 917 | 564 | 353 |
| வலி-தென்மேற்கு | 1473 | — | 1473 | 880 | 593 |
| வடமராட்சி தென்மேற்கு | 1607 | 3 | 1610 | 1076 | 534 |
| வடமராட்சி வடகிழக்கு | 587 | — | 587 | 327 | 260 |
| தென்மராட்சி | 558 | — | 588 | 285 | 273 |
| மொத்தம் | 15583 | 68 | 15583 | 9717 | 5866 |

ஆதாரம்: அரசாங்கச் செயலக அறிக்கை, யாழ்ப்பாணம் 1987

அட்டவணையின் படி தொலைக்காட்சிப்பெட்டிகளின் பரம்பல், பெட்டிகளின் வகை, உரிமையாளரின் நிலை ஆகியனவற்றை அறியமுடிகின்றது. தொலைக்காட்சிப் பெட்டி உரிமையாளர்களில் 62.4 வீதமானோர் வர்ணத்தொலைக் காட்சிப் பெட்டிகளையும் 37.6 வீதமானோர் கறுப்பு வெள்ளைப் பெட்டிகளையும் பயன்படுத்துகின்றனர். இம் மாவட்டத்தில் பயன்படுத்தப்படும் தொலைக்காட்சிப் பெட்டிகளில் 25.6 வீதமான பங்கினை வைத்திருக்கும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு நல்லூர், யாழ்ப்பாணம், வடமராட்சி தென்மேற்கு, வலிகாமம் வடமேற்கு, வலிகாமம் கிழக்கு பிரிவுகள் முறையே 18.0, 10.3, 9.5, 9.2 வீதமாகவுள்ளன. மிகக்குறைவான பெட்டிகளைக் கொண்டுள்ள பிரிவுகள் நெடுந்தீவு, தீவுப்பகுதிதெற்கு, தீவுப்பகுதி வடக்கு, தென்மராட்சி, வடமராட்சி வடகிழக்கு, வலிகாமம் தெற்கு என்பனவாகும்.

பொருளாதார நிலைக்கும், தொலைக்காட்சிப் பெட்டிகளின் பாவனைக்குமிடையில் நெருங்கிய தொடர்பு காணப்பட்டாலும் இம் மாவட்டத்தின் சில பிரிவுகள் இதற்கு விதிவிலக்காகவுள்ளன. நெடுந்தீவு, வடமராட்சி வடகிழக்கு, வலிகாமம் தெற்கு, தென்மராட்சி வலிகாமம் மேற்குப் பிரிவுகளில் பெரும்பாலான மக்கள் விவசாயமும் அதனோடு இணைந்த தொழில்களிலும் அதிகமாக ஈடுபாடு கொண்டுள்ளனர். கல்வி நிலையிலும் பின்தங்கியுள்ளனர். மேற்குறித்த, பொருளாதார, பண்பாட்டுநிலையுடன் மின்சார இணைப்பு, தொலைக்காட்சிபற்றிய குறைவான அறிவும் குறைந்த கவர்ச்சிக்குக் காரணங்களாகக் கொள்ளலாம். தீவுப்பகுதியின் இரு பிரிவுகளிலும் வாழும் மக்கள் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் கொண்டவர்களான போதிலும், அவர்களது மனப்பாங்கு, மின்சார இணைப்பு பரவலாக காணப்பட்டமை, பராமரிப்பதிற் கூச்சநிலை, தொலைக்காட்சி பற்றிய அறிவுக் குறைவு, போன்றன பயன்பாட்டினை மட்டுப்படுத்தியுள்ளன. அதிகளவிற் பயன்படுத்தும் பிரிவுகளில் நகர, நகரம் சார் வாழ்வு, சமூக அந்தஸ்தை பேணல், தொடர்புச்சாதனங்களை அதிகளவில் நுகரும் பண்பு, பெரும்பாலான மக்கள் சிறப்பான தொழில் வாய்ப்பினைக் கொண்டிருத்தல், உயர்ந்த கல்வியினை, அயல் வீடுகளிலும் மினி சினிமாக்களிலும் தொலைக்காட்சி பார்ப்பதை பெருமளவிற்கு தவிர்த்துக் கொள்ளும் நிலை போன்ற காரணிகள் நிலவுகின்றன.

யாழ். மாவட்டத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகளின் பரம்பலுக்கும் மக்களுக்கு

[14-ம் பக்கம் பார்க்க]

## பாடலை மாற்றிப்பாடாதே!

தமிழ்நாட்டில்விநோபா அடிகள் பூதான இயக்க பாதயாத்திரை மேற்கொண்டிருந்த சமயம் நடந்த ஒரு நிகழ்ச்சி. அடிகள் தங்கும் ஒவ்வொரு கிராமத்திலும் மாலையில் பிரார்த்தனைக்கூட்டம்நடைபெறுவது வழக்கம், தேவாரம், திருவாசகம் போன்ற பக்திப்பாடல்களைப் பாடுமாறு கேட்டுக்கொள்ளுவார். ஆண்டாள் பாசுரங்கள் அவருக்குப் பிரியம். பாரதியார் பாடல்களை விரும்பிக்கேட்பார். ஆகவே இப்பாடல்களை இசையோடு பாடக்கூடியவர்கள் அவருடைய யாத்திரைக் குழுவில் கட்டாயம் இடம்பெறுவர்.

சோழவந்தான் சிவம் என்ற ஒரு அருமையான பாடகர் சில மாதங்கள் அடிகளுடன் கூடவே பாதயாத்திரையில் கலந்து கொண்டு உருக்கமான இசையுடன் பாடல்கள் பாடிவந்தார். பூதான இயக்கத்தில் ஈடுபாடுடன் கலந்துகொண்டவர் சிவம். விநோபா அடிகளின் ரசனை அறிந்து பாடல்களைப் பாடுவதிலும் வல்லவர். இடையிடையே பூதானக் கொள்கை பதிந்த பக்திப் பாடல்களையும் பாடுவதிற் சமர்த்தர். ஒரு நாட் கூட்டத்தில் விநோபா அடிகளுக்கு பிரியமான பாரதியார் பாடல் ஒன்றைப் பாடவேண்டும் என்று சிவம் எண்ணினார். "பாரத சமுதாயம் வாழ்கவே" என்று துவங்கும் பாடலை பாடலானார். அடிகள் அதைக்கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார். அப்பாடலில் "தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று ஒரு அடி வருகிறது. அந்த வரியை உள்ளது உள்ளவாறு அப்படியே பாடுவதற்கு சிவம் சற்றுத் தயங்கினார். "ஜகத்தினை அழித்திடுவோம்" என்பதில் வன்முறை தொனிக்கிறது அல்லவா? அமைதிப் புரட்சியில் ஈடுபாடுள்ளவராயிற்றே அடிகள். ஆகவே, இதை அடிகள் ரசிப்பாரோ என்று தான் சிவம் தயங்கினார்.

பாடகர் சிவம் வெறும் பாடகர் மாத்திரமல்ல, இசை நெருடாமல் சமயோசிதமாக தக்க இடத்தில் பொருந்துமாறு இடைச் செருகல் செய்து பாடுவதிலும் சமர்த்தர். ஆகவே, ஜகத்தினை அழித்திடுவோம்" என்பதற்கு பதிலாக "ஜெகத்தினில் உழைத்திடுவோம்" என்று மாற்றி இசைகெடாமல், பொருள் பொருந்துமாறு பாடினார். "பாட்டை நிறுத்து "என்று ஒரு குரல் குறுக்கிட்டது. திடுக்கிட்ட சிவம் பாட்டை நிறுத்தினார். அந்தக் குரல் வந்த திக்கை நோக்கித் திரும்பினார். ஆம்! அடிகளே பாடலை நிறுத்துமாறு உத்தரவிட்டார் சப்த நாடிகளும் ஒடுங்க சிவம் அடிகளைப் பார்த்தார். அக்கூட்டத்தில் இருந்தவர்களும் வியப்புடன்அடிகளைப்பார்த்தனர். "பாடகரே" பாரதியாரைவிட அதிகம் தெரிந்தவர் என்று உங்கள் எண்ணமோ? பாரதியார் தெய்விகக் கவிஞர் அல்லவா? அந்த வரியை எந்த உணர்வுடன் பாடினர் என்பதை நீர் அறிவீரா? அறிந்திருந்தால் இப்படி மாற்றிப் பாடத் துணிவீரா? 'ஜகத்தினை அழித்திடுவோம்'' என்றல்லவா அவர் பாடியிருக்கிறார். எத்தனைஉணர்ச்சிவேகத்துடன் அவர் பாடியிருக்க வேண்டும்? "பசியோடிருக்கும் ஆயிரமாயிரம் ஏழைகளின் சார்பில் அல்லவா அவர் அவ்வாறு பாடினார். பசியோடிருப் பவர்களுக்குள்ள ஏக்கத்தோடும் ஆவேசத்தோடும்அல்லவா பாடினார்? கவிஞரின் இந்தக் கருணை உள்ளத்தை உம்மால்புரிந்து கொள்ள முடியவில்லையே. உலகத்தை அணுக்குண்டு போட்டு அழித்து விட வேண்டும் என்ற கருத்தில் பாரதியார் அன்று பாடவில்லை, பசியோடிருக்கும் ஏழைகளின் பசி தீர வேண்டும் என்ற தீவிர வாஞ்சையோடும் அவசர உணர்வோடும் அவ்வாறு பாடினார் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பாரதியின் உணர்ச்சியை மதித்து, அவர் பாடிய பாடலை சிறிதும் மாற்றாமல் "மீண்டும் அதைப் பாடுங்கள்" இவ்வாறு அடிகள் கூறியதைக் கேட்டு சிவம் வியந்து நின்றார்.

கூட்டத்தினர் விநோபா அடிகளுக்கு இருந்த தமிழ் ஞானத்தைக்கண்டு ஆச்சரியமுற்றனர். பாரதியார் பாடல்களை அடிகள் எத்தனை துல்லியமாக தெரிந்து வைத்திருந்தார் என்ற செய்தியும் அப்போதும் வெளியாயிற்று. அது மாத்திரமல்ல பாரதியாரின் உணர்வுகளையும் எத்தனை ஆழமாக புரிந்திருந்தார் என்ற விபரம் அனைவரை வியப்பில் ஆழ்த்திற்று. அடிகளே ஒரு ஆழமான கவிஞர். பல நூறு பாடல்களைப் புனைந்து கங்கை நதிக்கு அர்ப்பணித்தவர் அவர்.

தொகுப்பு:
க. கனகராசா

## அத்தியாயம் இருபது

### சமூக நவீனம்




வவனிக்குளம் சந்தியிலிருந்து அரைமைல் நீளம் வரை அலங்கார தோரணங்களும், பல்வேறு வர்ணங்களிலான கடதாசி கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தன. அன்று கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கான கட்டிடத்துக்கும், நெசவு நிலைய மண்டபத்துக்கும் அடிக்கல் நாட்டு விழாவும், பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளதாக விளம்பரங்களும் விநியோகிக்கப்பட்டிருந்தன. ஒலிபெருக்கியின் சத்தம் அங்கே ஓர் குதூகலமான விழாவைக் காண மக்களை அழைப்பது போன்று ஒலித்துக்கொண்டிருந்தது.

மாலை ஐந்து மணி அளவில் மாவட்ட அமைச்சருடன் உறுப்பினரும் வந்திருந்தனர். ரகுவரனே தனது விடுதியினின்றும் அவர்களை அழைத்து வந்திருந்தான். கந்தையா மாஸ்டர் குணரத்தினம் உட்பட பல பிரமுகர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். மேளவாத்திய சகிதம் ஊர்வலமாக அவர்கள் சம்பந்தப்பட்ட இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கிராம அபிவிருத்திச்சபை நிர்வாகிகளால் விசேடமாக அமைக்கப்பட்ட மேடைக்கு அவர்களை வரவேற்று அழைத்துச் சென்றனர். மாவட்ட அமைச்சர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

'எல்லோருக்கும் வணக்கம் தமிழில் தொடர்ந்து பேச முடியாமைக்கு மன்னிப்புக் கோருகின்றேன். எனது பேச்சை தமிழில் அரச அதிபர் உங்களுக்கு கூறுவார்' என தமிழிலே கூறிய மாவட்ட அமைச்சர் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினுர்.

'நான் இப்பகுதிக்கு முதலில் வந்த போதிருந்த நிலைமையைக் காட்டிலும் குறுகிய காலத்தில் பெரும்அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதை காண்கிறேன். இதற்காக உங்கள் உதவி அரச அதிபர் எடுத்துக் கொண்ட துரித முயற்சிகள் செயற்பாடுகள் யாவும் நான் அறிந்தவைகளே. அரச அதிபரே அவரைப் பாராட்டி எனக்கு பல அறிக்கைகள் அனுப்பி வைத்துள்ளார்.

உங்கள் பகுதிக்கு ஓர் வரப்பிரசாதமாகவும் ஏனைய பிரிவினருக்கு முன் மாதிரியாகவும் விளங்கும் அவர் முதன் முறையாக இங்கேதான் பதவி ஏற்ருர். என்னுடைய மாவட்டத்தில் கடமையாற்றலாம் தானே என நான் அவரைக் கேட்டபோது நிச்சயமாக ஒரு கஷ்டப் பிரதேசத்தில் என் சேவையை ஆரம்பிப்பதை விரும்புகின்றேன் என்ருர். உங்கள் அரச அதிபருடன் ஆலோசித்து இப்பகுதிக்கு அவரை நியமனம் செய்தோம்' அனுபவமில்லாத ஒருவரை நியமித்தது குறித்து முதலில் எனக்கும்உங்கள்பாராளுமன்ற பிரதிநிதிக்குமிடையில் கருத்து வேறுபாடு இருந்ததாயினும் இன்று அவரது சேவையைப் பாராட்டும் பொருட்டு உங்கள் பிரதிநிதியே வருகை தந்துள்ளார் எனக் கூறி மேலும் பல பாராட்டுக்கள் தெரிவித்த போது மக்கள் கைதட்டி ஆரவாரித்தனர்.

அடிக்கல் நாட்டும் பொறுப்பை பாராளுமன்ற உறுப்பினரே ஏற்றிருந்தாராயினும் அந்தப் பொறுப்பை ரகுவரனை செய்ய வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார். ஆனுல் ரகுவரன் அதை விட மேலும் ஒருபடி சென்று செயற்பட்டான். அவன் தனது உரையினுல் 'மாவட்ட அமைசரின் வேண்டுகோளுக்கிணங்க நான் இங்கே வந்து கடமை ஏற்றபோது எனக்கு பல இடைஞ்சல்கள் ஏற்பட்டன என்பதை நான் மறைக்க விரும்பவில்லை. அதிகாரத்திலிருப்பவர்கள் எல்லாம் கடமையுணர்வோடு சேவை உணர்வும் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்து. இங்கே எதிரும் புதிருமாக செயற்பட்ட இருவர் இன்று கையோடு கைகோத்து செயற்படுகின்றுர்கள். மிஸ்டர் குணரத்தினம் பற்றி பலரிடமும் ஓர் பீதிநிலவியது. ஆனுல் இன்று அதே குணரத்தினம் தனது காணியில் அரை ஏக்கர் நிலம்கிராம அபிவிருத்திக்காக கட்டிடம் கட்ட ஒதுக்கி அதற்கான பத்திரத்தையும் என்னிடமே கையளித்துள்ளார். அதிகாரிகள் மக்களின் தேவைகளுக்கு ஏற்ற வழிவகைகளை செய்துதரத்தானிருக்கிறுர்கள். உண்மையிலே பாடுபட்டு உழைப்பவர்கள் பலன் கருதாது உழைக்கும் தொண்டர்களே, உதாரணமாக மிஸ்டர் கந்தையா ஆசிரியர் சமூக சேவையின் வழிகாட்டியாக திகழ்கிறுர். அவரும் மிஸ்டர் குணரத்தினமும் இன்றுபோல என்றும் கைகோத்து நின்று இப்பகுதியின் மேன்மைக்காக வளர்ச்சிக்காக பாடுபடுவார்கள் என்பதற்கு சான்ருக இன்றைய அடிக்கல் நாட்டும் பொறுப்பை அவர்களிருவருமே செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்' என்று கூறியபோது ஒரே கைதட்டல்.

அப்படியே இருவரும் அடிக்கல் நாட்டினர். அரச அதிபர் நெசவு நிலையத்துக்கான அடிக்கல்லை நாட்டினுர்.

இப்படியான ஓர் வியத்தகு பொதுக் கூட்டத்தினைக் கூட்டச் செய்து வவனிக்குளம் மக்களை ஆச்சரியத்திலாழ்த்திய கிராம அபிவிருத்திச்சபை நிர்வாகிகள், சூழ்ந்து நின்று பாராட்டினர். குணரத்தினமும் கந்தையா மாஸ்டரும் சேர்ந்து அதிகாரிகள் அனைவருக்கும் சிறப்பான இரவு விருந்தொன்று அளித்து கௌரவித்தனர்.

அன்றுதான் பாராளுமன்ற உறுப்பினர் ரகுவரனை நேரில் முதல் முறையாகச் சந்தித்திருந்தார் அவனுக்குஅருகிலேயே அமர்ந்து சுவாரஸ்யமாக கதைத்துக் கொண்டிருந்தார். அவனுடைய தோற்றம் பிறரை வசீகரப்படுத்தும் பேச்சாற்றல்,எதற்கும்பாவனை இன்றி அணுகும் முறை யாவும் அவரையும் கவர்ந்து கொண்டது.

'மிஸ்டர் ரகு நீங்கள் வெகு விரைவிலேயே முன்னுக்கு வரக்கூடியவர் உண்மையிலேயே இந்த 'ஏரியா' இந் நிலைக்கு மாறும் என நான் நினைக்கவில்லை. எங்கள் நிலைமை உங்களுக்கு புரியும். அதற்காக சில சமயங்களில் எங்களுக்கு வேண்டியவர்கள் செய்யும் தவறுகளைக் கூடத் தெரிந்தும் தெரியாதது போல நடந்துக்க வேண்டியிருக்கு நீங்கள் வந்த பிறகு இந்தப்பகுதியில் அமைதி நிலவுகின்றது. அபிவிருத்தி தொடர்கின்றது. என்னுலும் துணிந்து இன்றுவர முடிந்தது' என்று கூறிச் சிரித்தார்.

'சார் நீங்கள் கூறுவதும் உண்மைதான். ஜனநாயக நாட்டில் 'பொலிடிகல் பிரஷர்' இல்லாத இடமே கிடையாது—அதற்காக அதிகாரிகள் தங்கள் நலனை மட்டும் கருத்தில் கொண்டு செயற்பட்டால் முடியுமா? இந்தப் பகுதிக்கு வர எல்லோரும் தயங்குகின்றுர்கள் என ஜி ஏ. கூறியதும் நான் ஏன் இதனை ஏற்றுக் கொண்டேன் தெரியுமா? காட்டு மிருகங்களையே பழக்கி விடுகின்றுர்கள். இவர்களின் நிலையை அறிந்துதான் பார்ப்போமே என்று நினைத்தேன். நான் வந்த வேளை ஒவ்வொருத்தரை பற்றியும் அறியும் வாய்ப்பும் கிட்டியது உங்கள் பெயரைப் பயன்படுத்திய மிஸ்டர் குணரத்தினத்துடன் கொஞ்சம் கடுமையாக நடந்து கொண்டேன், மற்றும்படி எதுவித பிரச்சினையும் இல்லை'

'நான் எல்லாம் அறிந்தேன்' எனக்கு மிகவும் சந்தோஷமே என் தொகுதிக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இந்தப் பகுதிக்கே அதிக பட்சம் ஒதுக்கியுள்ளேன். மேலும் தேவை ஏற்படின் எனக்கு அறிவியுங்கள் என்று கூறி விடைபெற்ருர்.

பாராளுமன்ற உறுபிப்பினர் சிலர் என்னதான் நற்பணியிலீடுபட்டாலும் அவர்களைச் சூழ்ந்துள்ள வர்களில் சிலர் தாங்கள் அவர்களின் அதிகாரங்களை கொண்டு விளங்குவதாக பாமரமக்களிடம் பாவனை காட்டி அந்த அப்பாவிப் பிரதிநிதிக்கும் சேறு பூசச் செய்து விடுகின்றனர். என்பதை ரகுவரன் ஓரளவுக்கு தெரிந்து வைத்திருந்தான். அதையே பாராளுமன்ற உறுப்பினரும் நாசுக்காக தெரிவித்திருந்தார் பொதுச் சேவையிலீடுபடுபவர்

**கே.எஸ்.ஆனந்தன்**

கள் கல்லெறி, சொல்லெறி முதலியவற்றுக்கு ஆளாக வேண்டிய நிர்ப்பந்தங்களையும், சூழ்நிலைகளையும் எண்ணிமனம் வருந்திஞன்.

ஜனநாயக நாட்டில் தனி மனித சுதந்திரத்துக்கு அளிக்கப்பட்டுள்ள நன்மைகளில் இப்படியான தீமையக்கும் சீர்கேடுகளும், அவலங்களும் நிறைந்திருப்பதை எங்குமே காணக்கூடிய தாயிருக்கின்ற போதும் அதிகாரத்துக்கு வர விரும்புவோர் தெரிந்து கொண்டும் தெரியாததுபோல பாவனை செய்யும் பாங்கினையும் எண்ணி வேதனைப்பட்டவாறே விடுதிக்கு திரும்பிஞன்.

சின்னையா அவன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டே வாசலில்காவலிருந்தார். அவனைப்பார்த்தும் 'வந்திட்டிங்களா தம்பி' என்றவாறே உள்ளே சென்று கதவுகளை திறந்தார்.

சின்னையா இன்றும் நீங்கள் வரமறுத்துவிட்டீர்கள் அன்று சிந்து வீட்டுக்கு அழைத்த போதும் மறுத்துவிட்டீர்கள் உங்களை என்னுல் புரிந்து கொண்டாலும் சிலசமயம் புதிராகவே விளங்குகின்றீர்கள்' என்ருன் ரகு.

'தம்பி நான் உங்களுக்குச் சேவை செய்வதில் பெருமைப்படும் அதே சமயம் என் கடமையையும் செய்யனுமே. தவிர இங்கே உங்களுடன் நானும் சுற்றிக்கொண்டிருந்தால் இவற்றையெல்லாம் பார்ப்பதுயார்? யாராவது ஒரு தறுதலை வேண்டுமென்றே ஏதும்செய்துவிட்டால் உங்கள் பெயருக்கே சகதி பூசுவாங்களேதம்பி' என்ருர்.

'மன்னிச்சிடுங்கோ சின்னையா' என்ருன்.

'இதில் என்ன தம்பி இருக்கு? உங்களுக்கு எதை கூறினுலும் அது என் உள்ளத்துள் நடக்கிறதாகவே நான் உணர்கிறேன் அப்புறம் என்ன தம்பி' என்றவர் நான் கடைவரைக்கும் போய்விட்டு வாறேன் என்ருர் மறுபடியும்.

'இந்த நேரத்தில் எதற்கு சின்னையா?'

'புகையிலை முடிஞ்சுது. கடை இன்னும் பூட்டயில்லை'

'சின்னையா என்னிடம் சொல்லியிருந்தால் ஒரு கட்டு புகையிலையே வாங்கி வந்திருப்பேன் யாழ்ப்பாணத்தில் நாளைக்கு எங்கள் ஆபீஸில் வேலை செய்கிருரே மிஸ்ரர் மணியம் அவரிடம் சொல்லி அனுப்பினுல் நல்ல புகையிலையாய் கொண்டுவந்து தருவார். சிலருக்கு கொண்டுவந்து கொடுத்திருக்கின்ருர். என்ருன்.

'இதுக்கா நீங்கள் ஏன் தம்பி மற்றவர்களிடம்......

'எங்கள் தேவைக்கு இருப்பவர்களிடம் கேட்பது தவரு சின்னையா?'

'தவறில்லை தம்பி இது உங்களுக்கு தேவையில்லாத விடயம் '

'உங்களுக்கு தேவையானதைநான்செய்யக்கூடாதா?' அப்படியானுல் இந்தப்பழக்கத்தையே கைவிட்டு விடுகிறேன்' என்ருன்.

'சின்னையா உங்களிடம் உள்ள நல்ல குணங்களை நான் மதிக்கின்றேன் அதேபோல என்னுல் உங்களுக்கு எல்லா சௌகரியங்களையும் செய்ய முடியாது போனுலும் சில வற்றை நான் செய்யக் கூடாதா?' சரிவேண்டாம். மிஸ்டர்மணியத்தை நாளைக்கு நீங்களே சந்தித்து ஆடர் கொடுங்க அடிக்கடி இரவில் பனியில் கடைக்குப் போக வேண்டாம்' என்று அன்பாகவும் கண்டிப்பாகவும் கூறினுன் 'சரிதம்பி; ஆண்டவா! நான் கொடுத்து வைத்தவன் எத்தனை வருடம் நாயாய் அலைந்தன் அதற்காக என்னிடம் இரக்கம் காட்டி இப்படி ஒரு ராஜபோக வாழ்வைத் தந்தாயா? என்று கூறியவாறே சென்றுகொண்டிருந்தார்.

தன்னுல் பிறருக்கு அசௌகரியங்கள் ஏற்படக்கூடாது. அதேசமயம் தன்னுல் பிறருக்குரிய சௌகரியங்களை கவனிக்க வேண்டும் என்று கருதும் ஓர் உத்தமமான உளப்பாங்கினைக் கொண்ட ஓர் மனித உருவை இவ்வூர் மக்கள் இனங்காண முடியாது போனுர்களே. என நினைத்த போது ஆண்டவனே அவரை தனக்கு அறிமுகம் செய்து வைத்ததாக என்னிடம் மகிழ்ந்தான். இவரைப் போன்று இன்னும் எத்தனை சின்னையாக்கள் தெருவோரங்களிலும் பொது இடங்களிலும் வீடு வாசல்களிலும் தவித்துக்கொண்டு துன்புறுகினுர்களோ என எண்ணி மனம்வருந்திஞன் ரகு.

●

அருண்மொழி இரண்டு நாட்களாக உணவு கொள்ளவில்லை. சந்திரஞானத்துடன் கதைக்கவும் இல்லை. மாசிலாமணியும் எத்தனையோ தடவை கேட்டுவிட்டார். அவள் எதற்கும் பதில் கூறவில்லை. சந்திரஞானம் ரகு பெண்பார்க்கப்போன சமயம் சிலவிடயங்களை மாசிலாமணி மகளிடம் தெரிவித்துவிட்டார். அவள் எதைத் தெரிந்து கொள்ளக்கூடாது என்று சந்திரஞானம் மறைத்துவைத்தாளோ அவற்றைவிடக் கூடுதலாவும் தெரிந்துகொண்ட போது அருண்மொழி அதிர்ச்சியுற்ருள் பெற்றவளை இதுவரைகாலம் எவ்வளவு நேசித்தாளோ, மதித்தாளோ, அத்தனையும் கணப்பொழுதில் எதிர்மாருன நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டது.

அவள் தலைசீவிக் கொள்ளாத நிலையில் முடங்கிப் படுக்கையில் கிடந்தாள். பெற்றதாயே தன் மகளை வெறுத்தாள். தன் பிணத்தில் கூட விழிக்கப்படாது என்று சபதமிட்டிருந்தாள், என்ருல் அதற்கு ஓர் ஆழ்ந்த காரணமிருந்திருக்காமல் போகாது என்ற உண்மை தெரிந்த போது அவள் பெற்ற மகளே தாயை அதே காரணத்துக்காக வெறுக்கும் நிலை ஏற்பட்டிருந்தது.

அவளுடைய துன்பத்திற்கு எண்ணெய் வார்ப்பது போல தொலை தூரத்துக்கப்பாலிருந்த கடையிலிருந்து வாஞெலியில்இருந்து 'அன்னை செய்த பாவம் நான் மண்ணில் வந்தது என் அழகு செய்த பாவம் நீ கண்ணில் கண்டது' என்ற பாடல்காற்றில் மிதந்து வந்து அவள் செவிகளை துளைத்து இதயத்திலிறங்கியது. அதே வேளையில் சிறி அங்கே வந்து சேர்ந்தான்.

அவனைக் கண்டதும் கட்டிலை விட்டெழுந்த அருண்மொழி 'ஹோ' வெனக் கதறி அழுதாள். அவளை அணைத்துத் தேற்றிஞன் சிறி.

''அருண் ரேக் இற் ஈசி. நான் எல்லாம் அறிந்தேன். உங்க அப்பா தான் கூறிஞர். எனக்கு முன்பே உங்கப்பா சகல விடயமும் கூறிஞர். அதன் பின்புதான் உன் திருமணத்துக்கே ஒப்புக்கொண்டார்.''

''என்ன இருந்தாலும் இது வரை எனக்கு இதுபற்றி யாரும் சொல்லவில்லையே. நான் ஓர் பாபப்பட்ட பிறவி என்று தெரிந்த பின்பு வாழ்வே பிடிக்கவில்லை.''

[14-ம் பக்கம் பார்க்க]

# வைத்தியம் செய்யக்கற்ருர் ஆன்ம வைத்தியர் ஆனர்

சுவாமி சிவானந்த சரஸ்வதி உலக போதஞசிரியர்களுள் ஒருவர். அவர் தன்னலமற்ற சேவையை உலக மக்களுக்கு போதித்து ஆன்மிக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திஞர். தமிழ்நாட்டிலுள்ள தாம்பரபர்ணிஆற்றங்கரையிலுள்ள பத்தமடை என்னும் கிராமத்தில் 1887-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 8-ம் தேதி பிறந்தார். வேதாந்தத்தை அனுஷ்டிப்பதில் ஓர் இயற்கை அவா உடையவர்; இவர் பிரசித்தி பெற்ற மெஞ்ஞானி; அப்பைய திட்சிதர் வழித்தோன்றல்; இளமையில் இவரைக் குப்புசாமி என்பர் இவர் எட்டயபுரம் இராஜா உயர்தரக் கல்லூரியில் கல்வி பயின்றவர். எப்பொழுதும் வகுப்பில் முதலாவதாக வந்து பல பரிசில்களைப் பெற்றவர். மற்றிக்குலேசன் வகுப்பில் சித்தியடைந்த பின் திருச்சிராப்பள்ளி என். பி. ஜி. கல்லூரியில் படித்தவர். இலக்கிய பட்டப்படிப்பில் முதற்பகுதி சித்தியெய்தியவுடன் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் மருத்துவ பீட மாணவராகச் சேர்ந்தார். இங்கே எம். பி. சி. எம். பட்டத்தைப் பெற்று திருச்சிராப்பள்ளியில் வைத்திய கலாநிதியாகக் கடமையாற்றிஞர்.

கடவுளுடைய ஆசீர்வாதத்திஞற்போலும்வைத்திய கலாநிதி குப்புசாமி தமது தொழிலை விட்டு மனித ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவி செய்வதற்காகச் சுயநலமற்ற சேவையில் ஈடுபட்டார் சந்திரபாகா ஆற்றங்கரையில் மகாராஷ்டிரத்தில் டலாஜ் என்ற கிராமத்தில் ஒரு தபாலஞ்சல் அதிபருடன் சிறிது காலம் வசித்தார். பின் அஞ்சல் அதிபரின் யோசனைப்படி தியானிக்கும் பொருட்டு இமாலயப் பிரதேசத்திலுள்ள ரிஷிகேசத்திற்குச் சென்ருர். பெரும் ஞானிகளும், யோகிகளும் தங்கும் ரிஷிகேசத்தில் 1924ஆம் ஆண்டு மே மாதம் 8-ம் தேதி குடியமர்ந்தார். இவர் தமது குருவாகிய வணஸ்ரீ சுவாமி விசுவானந்த சரஸ்வதியைக் குருவாகக் கொண்டு முறைப்படி சந்நியாசம் பெற்ருர். குருவால் இவருக்கு சூட்டப்பட்ட பெயர்தான் சுவாமி சிவானந்த சரஸ்வதி என்பது.

இவர் ஒரு சிறு குடிலில் வசித்துக் கடும் தவத்தையும், மௌனத்தையும் விரதங்களையும் பல நாள்களுக்குத் தொடர்ச்சியாகச் செய்வார். தவம் செய்யும் நாள்களிற் சுகயீனமுற்றவர்களைக் கவனிக்கத் தவறியதில்லை. சிலசமயங்களிற் சுகவீனமுற்றவர்களை இவர் தனது முதுகிற் சுமந்து கொண்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வார்.

இவர் தல யாத்திரை செய்பவர்களுக்கு சேவை செய்து அவர்களிலே கடவுளைக் கண்டார். அநேக வருஷத்தின் பின் இவர் நிர்விகல் பசமாதியுற்று ஆனந்தமடைந்தார். இவர் ஞான ஒளி பெற்ற பின்பு 'போய் உன்னுடைய அறிவை எல்லாருடனும் பகிர்ந்து கொள்' என்னும் கட்டளையைத் தன்னுடைய அந்தரங்க ஆத்மாவிலிருந்து கேட்டார், இதற்குப் பின் இந்தியா முழுதும் பிரயாணம் செய்து போதனைகள் செய்தார். தெற்கே உள்ள தலங்களையெல்லாம் தரிசித்துகைலாசம் பத்திரி என்னும் இடங்களுக்கும் சென்ருர். பின் இவர் ரிஷிகேசத்துக்குத் திரும்பி புனித கங்கா நதியின் வலப்புறமாக 1932-ம் ஆண்டு சிவானந்த ஆச்சிரமத்தை ஆரம்பித்தார். 1936-ம் ஆண்டு தனது சிர்குலேந்த பழையகுடிலில் திவ்யஜீவன சங்கத்தை ஸ்தாபித்தார். இச்சங்கத்தின் நோக்கம் நாற்றிசையும் ஆன்மீக அறிவைப்பரப்புவதாம்.

1938ல் திவ்ய ஜீவன சஞ்சிகையை ஆரம்பித்தார். 1950-ல் அகில இந்திய இலங்கை யாத்திரையை மேற்கொண்டு தெய்வீக போதனைகளைச் செய்தார். 1953-ல்அகில உலக சமய மகாநாடு ஒன்றைச் சிவானந்தாச் சிரமத்தில் கட்டினர். இதன் நோக்கம் மக்களிடையே ஆன்மிக விழிப்புணர்ச்சியைச் ஏற்படுத்துவதேயாகும். சுவாமி சிவானந்தா தனது தெய்வ விழிப்புணர்ச்சி சேவையை உலகெங்கும் தனது கடிதங்கள் சஞ்சிகைகள் மூலமாகப் பரப்பிஞர். அவர் ஆரோக்கியம், சுகாதாரம், சமயம்வைத்தியம்வைத்திய விஞ்ஞானம், உளவியல், தத்துவம் போன்றவற்றில் 80ப புத்தகங்களுக்குமேல் எழுதிஞர். இப்புத்தகங்கள் உலகத்திற் பலபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சில சர்வகலாசாலையினர் இவற்றில் சிலவற்றைப் பாடப் புத்தகங்களாக ஏற்படுத்தியிருக்கின்றனர். சுவாமி சிவானந்தருடைய திவ்ய ஜீவன சங்கம் உலகத்திற் பல பாகங்களிலும் சாதி, நிற, பால், பாஷைமதவித்தியாசமின்றி சேவைபுரிந்து வருகின்றது.

1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் திகதி இந்த மகாத்மா சுவாமி சிவானந்தா கங்கைக்கரை தபோவனத்தில் மகாசமாதி அடைந்தார். அவருடை போதனைகள் இன்றும் நின்று நிலவுகின்றன.

க.கனகராசா

# உயிருள்ள புத்தகங்கள்

கவிஞரே!

''உங்களுக்குச் 'சேர்' பட்டம் வழங்கப் பிரிட்டிஷ் அரசு விரும்புகிறது.''

-பஞ்சாப் ஆளுநர்

ஐயா! ஒரு நிபந்தனை, எனக்குப் பாரசீகமும், அரபு மொழியும் கற்பித்த ஆசான் ஒருவர் இருக்கிருர். மௌலவி மீர் ஹஸன் என்பது அவர் பெயர். அவருக்கு, 'ஷம் சுல் உலமா' என்ற விருதை வழங்குவதாஞல் நான் 'சேர்' பட்டத்தை ஏற்றுக் கொள்கிறேன்.''

-கவிஞர்.

அப்படியா, உங்கள் குருதேவரின் திறனை விளக்க முடியுமா? அவர் ஏதாவது புத்தகம் எழுதி இருக்கிருரா?

-ஆளுநர்

''எழுதியிருக்கிருர், அது உயிருள்ள புத்தகம், முகம்மது இக்பால் என்பது அதன் பெயர்.

-கவிஞர் இக்பால்

வி. கேரயூன்

வளரும் பயிருக்கு ...

# இறைவன் அருகில் இருக்கிருன்

கல்யாணம் ஆக வேண்டிய பெண்ணெருத்தி இருந்தாள். அவளுடைய பெற்ருேர் ஒரு பையனைப் பார்த்து அவனுக்கு அவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கத் தீர்மானித்திருந்தார்கள். ஆஞல் அந்தப் பெண் 'புருஷர்களில் எல்லாம் உயர்ந்தவன் எவனோ அவனைத்தான் நான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்!' என்று பிடிவாதம் பண்ணிஞள். அவர்களும் 'உன் இஷ்டப்படியே போ!' என்று விட்டு விட்டார்கள்.

புருஷர்களுக்குள்ளேயே உயர்ந்தவன் ராஜாதான். கல்யாணம் பண்ணிக் கொண்டால் அவனைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று அந்தப் பெண் தீர்மானம் பண்ணிக் கொண்டாள். அவ்வூர் ராஜா எங்கே போஞலும் அவன் பின்ஞலேயே அவள் போய்க் கொண்டிருந்தாள்.

ஒருநாள் ராஜா பல்லக்கில் போய்க் கொண்டிருந்தார். ஒருசாமியார் எதிரே வந்தார். ராஜா பல்லக்கை விட்டுக் கீழே இறங்கிஞன். சாமியாருக்கு நமஸ்காரம் பண்ணிஞன். பெண் பார்த்தாள் ராஜாவைக் காட்டிலும் உயர்ந்தவர் சாமியார் போலிருக்கிறதே! என்று நினைத்து சாமியார் பின்ஞலேயே சுற்ற ஆரம்பித்து விட்டாள்.

ஒருநாள் சாமியார் ஓர் ஆலமரத்தடியிலிருந்த பிள்ளையாருக்கு முன் நின்று தோப்புக்கரணம் போட்டார். சாமியாரை விடப் பெரியவர் பிள்ளையார் போலிருக்கிறது! என்று நினைத்துப் பிள்ளையாருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து விட்டாள்.

தெருவோடு போகிற நாயொன்று அந்தப் பிள்ளையார் மேலே காலைத் தூக்கிக் கொண்டு சிறுநீர் பெய்தது. அடடா! இந்தப் பிள்ளையாரையும் விட உயர்ந்தது இந்த நாய்தான் என்று அந்த நாயைத் துரத்திக்கொண்டு அவள் போக ஆரம்பித்து விட்டாள்.

தெருவில் ஓடுகிற அந்த நாயை ஒருபையன் கல்லால் எறிந்தான்; வள்! வள்! என்று குரைத்துக் கொண்டு நாய் ஓடியது.

'ஏண்டா அந்த நாயை அடித்தாய்'-பையனைப் பிடித்துக்கொண்டு ஒருவன் அதட்டிஞன்.

'நாயைக் காட்டிலும் நாயை அடித்தவன் பெரியவன். அடித்தவனையே திருப்பி அடித்த இவன் அவனையும் விட உயர்ந்தவன்; இவனையே கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன்' என்று தீர்மானமாக அந்தப் பெண் சொல்லி விட்டாள்.

எங்கோ தூரத்திலிருக்கிருன் சுவாமி என்று ஊரெல்லாம் சுற்றுகிருயே! அவன் உன் கிட்டவே இருக்கிருன். 'இறைவன் தூரத்துக்கெல்லாம் தூரம் சமீபத்திற்கெல்லாம் சமீபம் இருக்கிருன்' என்று சுருதி சொல்கிறது.

காஞ்சிப் பெரியவாள்

# வாசகர் இதயம்

## யாரும் விரும்பும் வகையில் வருகிறது!

புதுமை மிகவும் உடையதுவாய்
போற்றும் வர்ணம் உடையதுவாய்
மனதைக் கவரும் பொலிவுடனே
வார முரசொலி வருகிறதே!

நாவல் சிறுகதை உடையதுவாய்
நல்ல கட்டுரை உடையதுவாய்
யாரும் விரும்பும் வகையினிலே
வாரம் தோறும் திகழ்கிறதே!

இலக்கியக் கட்டுரை பலவுண்டு
இனிக்கும் நகைச்சுவை தானுண்டு
விஞ்ஞா னத்தின் அம்சங்கள்
மிகவும் கொண்டது முரசொலியே

மானிப்பாய்
இ. துரைராசா

## காலத்துக்கேற்ற விடயங்களை திருப்பாற்கடல் தருகிறது!

வாரமுரசொலியில் காலத்துக்கேற்ற பல விடயங்களைச் சேர்ந்திருப்பது பாராட்டத்தக்கதொன்று.

''காலங்கள்மாறும்'' தொடர்கதை விறுவிறுப்பான திருப்பங்களுடன் வெளிவருவது மிகவும் மெச்சத்தக்கது.

உண்மையிலேயே இன்றைய காலகட்டத்தில் ரகுவரனைப் போலச் சேவை மனப்பான்மையும் கண்ணியமும் மிக்க இளைஞர்கள் உருவாக வேண்டும். இத்தொடர்கதை பல இளைஞர்களின் மனதைத் தொட்டிருக்கும் என்பதோடு அவர்களை ரகுவரனைப் போல் இயன்றளவு தங்கள் சுயநலனைத் துறந்து சேவை மனப்பான்மை உள்ளவர்களாக மாற்றியமைக்கும் என்பதில் ஐயமில்லை.

இன்றும் பெரும்பான்மை இனத்தவரிடையே சமரசிங்கா போன்றவர் இல்லாமலும் இல்லை. சிறுபான்மை இனத்திலோ பெரும்பான்மை இனத்திலோ இத்தகையவர்கள் விரல்விட்டெண்ணக் கூடிய தொகையினராகவேகாணப்படுகின்றனர். இது வருந்தத்தக்கதும் துரதிர்ஷ்டவசமானதுமாகும்.

வெறுமனே மொழி, சமயம் முதலாம் வர்க்க பேதங்களை விடுத்து சமரசிங்கா போன்ருேர் எங்கிருந்தாலும் அவர்களுக்குக் கௌரவமளித்து அவர்களை மேலும் அப்பாதையிற் செல்லத்தூண்ட வேண்டும். அப்படித் தூண்டிஞல் நாட்டுக்கும் சரி நமக்கும் சரி மிகுந்த முன்னேற்றமும் அபிவிருத்தியும் ஏற்படும்.

டாக்டர் முருகானந்தனின் மருத்துவக் குறிப்புக்கள் மிக முக்கியமானவை.

ப லோகநாதன்
பருத்தித்துறை
வியாபாரிமூலை

## குணமும் குற்றமும்

வார-தினசரி, முரசொலியின் வளர்ச்சியினையும் புதுமெருகினையும் கண்டு மகிழ்ச்சி; பாராட்டுக்கள்.

வாரமுரசொலியில் (1989.07.23, ஈழத்துக்

## ஈடிணையில்லை

பல சுவையான செய்திகளையும் கவிதைகள், கதைகள் என்பவற்றையும் தந்து எம்மை மகிழ்விப்பது முரசொலியே! இதற்கு ஈடான பத்திரிகை உருவானதும் இல்லை; உருவாகப் போவதும் இல்லை.

வே. தனேஸ்குமார்
அச்சுவேலி வடக்கு

ஒரேயடியாக 'ஐஸ்'வைக்காதீர்கள்! குணம் நாடிக் குற்றமும் நாடுங்களேன்!

ஆசிரியர்

கவிஞர் பக்கத்தில் ப.உதயகுமார் எழுதிய ''வேண்டுகோள்'' முழுக்க முழுக்க மு.மேத்தாவின்

வீதியில் போகின்ற
இளைஞர் களுக்கு
ஓர் வேண்டுகோள் ..
விளைவுகளைப் பற்றி
கவலைப்படாமல்
ஜன்னல் வழியே
உங்கள்-ஆர்வப்
பார்வைகளை
அள்ளி வீசாதீர்கள்
அங்கே சில தேவதைகள்
தீக்குளித்துக்
கொண்டிருக்கிறன

என்ற கவிதையின் தழுவல்! பணி சிறக்க வாழ்த்துக்கள்!

ஊரெழு தர்ஷினி

உதயகுமார் போன்ருேர்க்கு இதுசமர்ப்பணம்!

ஆசிரியர்

# சின்னஞ்சிறு சிட்டுக்களே!

கோப்பி குடிக்காதவர் இல்லை. கோப்பி எப்படிப் போடுவது என்றும் எல்லாருக்கும் தெரியும்.

கோப்பித் தூள் அவிந்த சாயத்தை வடிகட்டி, பால் விட்டு, சீனியும் சேர்த்து விட்டால்... கோப்பி தயாராகி விடும்.

அவ்வாறு கோப்பித்தூள் அவிந்த சாயத்தை அம்மா வடிகட்டி வைத்திருக்கும் போது நாங்கள் பார்த்திருக்கிறோம்; ஒரே கறுப்பாக இருக்கும். அதற்குட் பாலைக் கொஞ்சம் கொஞ்சமாக அம்மா ஊற்றுவாள். கோப்பிச் சாயம் கொஞ்சம் கொஞ்சமாக நிறம் மாறும். முதலிற் கறுப்பு அதிகமாகவும் வெள்ளை குறைவாகவும் கலந்த கலப்பு நிறமாகக் காட்சி தரும். பிறகு சற்றே வெளுப்பாகும். பால் அதிகம் சேர்ந்ததும் ஒரே வெள்ளையாகிவிடும்.

இரவில் இருளும் இப்படித்தான். முதலிற் கோப்பிச் சாயம்போல நல்ல கறுப்பாக இருக்கும். பிறகு அதிகாலையில் இருள் மிகுதியாகவும் ஒளி குறைவாயும் கலந்து ஒருவகைத் தோற்றம் தரும். சூரியன் உதித்து மேலே கிளம்பி வரவர நல்ல வெளிச்சமாகிவிடும்; உலகே ஒளிமயமாகி விடும்

அம்மா கோப்பி போடும் போது நடப்பது போலவே பொழுது விடியும் போதும் நடக்கிறது என்று ஒப்புமை காட்டிச் சிந்திக்க வைத்தவர் யார்?

அளவெட்டியிலே பிறந்து அருமையான பாடல்கள் பல எழுதிய 'மஹாகவி' (து. ருத்ரமூர்த்தி) தான் அவர்.

''கோப்பிக்குட் பாலை
அள்ளிக்
கொட்டினற் போலி
ருட்டைச்
சாப்பிட்ட கிழக்கு
வானம்
சரியாக வெளுக்க...''

என்று சூரியோதயத்தைத் தாம் பாடிய சடங்கு என்ற காப்பியத்தில் அவர் வருணித்திருக்கிறார்.

அவருடைய கவிதைகளைப் படிக்க வேண்டும் என்று தோன்றுகிறதா?

உங்களுக்கென்றே அவர் 'சின்னக் குருவி பறக்கிறது' முதலிய பாடல்கள் சில பாடியிருக்கிறார்; படியுங்கள். பெரியவர்களானதும் நீங்கள் படிக்கவென்றே வள்ளி, கண்மணியாள் கதை, சடங்கு, குறும்பா, கந்தப்ப சபதம், கோடை என்று அவர் எழுதிய சில நூல்கள் உங்களை எதிர் பார்த்துக் காத்திருக்கின்றன.

# பட்டம்

மெல்ல மெல்ல
ஆடி ஆடிப்
பறக்கும் பட்டமே
வண்ணநிற சட்டைபோட்டு
குஞ்சம் போன்ற
வாலும் கட்டி
உன்னை அழகாய்
யார் அமைத்தான்
சொல்லு பட்டமே

ஜீவகுமார் இராமநாதன்
அங்.இல.127




# சிட்டுக் குருவீ! சிறகைத் தா

சிட்டுக் குருவி உந்தன் சிறகை
சின்னத் தம்பி எனக்குத்தா
பட்டுச் சிறகை மெல்ல விரித்து
பட்டம் என்னப் பறக்கணும்!

மொட்டு விரித்து மெல்ல மலரும்
மல்லி கையை மணக்கணும்
கட்டுக் கடங்காச் சோம்பல் புரியும்
கொட்டங் களை யடக்கணும்!

வட்ட வடிவ தட்டு நிலவில்
வர்ண வரைகள் தீட்டணும்
வெட்ட வெளியில் தோன்றும் முகிலில்
வண்ண மலர்கள் நாட்டணும்

நெட்டை மரங்கள் தொட்டுத் தடவி
நன்றிக் கதைகள் சொல்லணும்
மொட்டை மனைகள் எட்டி உயர
மட்டில் இடங்கள் பார்க்கணும்!

முட்கள் மலிந்த பாதை வீதிலே
மோதும் இன்னல் கோடியே
புட்கள் நிறைய வாழும் உலகை
பார்க்க என்னுள் ஆசையே!

மாவை-வரோதயன்

# எங்கள் அம்மா

பத்துமாதம் சுமந்து எம்மைப்
பெற்றெடுத்த அம்மா
பக்குவமாகப் பாலூட்டி வளர்த்த
எங்கள் அம்மா

பள்ளி சென்று பல்கலையும்
படித்து வரச் சொல்லும்
பாதி வழியில் வந்து நின்று
அனுப்பும் எங்கள் அம்மா

புத்தகத்தை படிக்காட்டில்
பக்குவமாக எம்பக்கத்தில்
வந்தமர்ந்து பாடம் சொல்லித்
தருவா எங்கள் அம்மா

கடவுளைத் தொழுவதோடு
நித்தம் நித்தம் நாங்கள்
தெய்வமாக எம்மைக் காக்கும்
தாயைத் தொழுவோமே!

சி. யசோதரன்

# விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள்

| | | |
|---|---|---|
| தந்தியும் சிக்னலும் | — | மோர்ஸ் |
| நிழற்படம் | — | வெற்வுட் |
| சுருள்படம் | — | ஈஸ்றமன் |
| இயந்திரக் கலப்பை | — | பேக்கர் |
| இயந்திரத்தறி | — | விட்னி |
| சினிமாப்பட இயந்திரம் | — | லூமேரி சகோதரர்கள் |
| சுழல் துப்பாக்கி | — | கோல்ட் |
| தட்டச்சு | — | சோல்ஸ் |
| யுத்த டாங்கி | — | சுவின்டன் |
| துப்பாக்கி வெடிமருந்து | — | றோஜர் பேக்கன் |
| மைக் | — | பேர்லினர் |
| இயந்திரத்துப்பாக்கி | — | ஜே.டி.கொக்றேவ்ட் |
| பியானோ | — | கிறிஸ்ரோவொரி |
| ஜெட்விமானம் | — | சேர் பிராங் விற்றல் |

தொகுப்பு:-
த. காஞ்சனா
அங்கத்தவர் இல. 44

# நான் விரும்பும் தொழில்

செய்யும் தொழிலே தெய்வம் என்ற முதுமொழிக்கிணங்க உழவுத் தொழிலை சிறப்பான தொழிலாக நான் விரும்புகின்றேன். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம். வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் என்று பாரதி கூறியது குறிப்பிடத்தக்கது. மனித நாகரிக வரலாற்றில் உழவுத் தொழிலுக்கும் சிறப்பான வரலாற்றுப் பெருமையுண்டு. ஆனால் செயல் முறையில் இன்று உழவுத் தொழில் வளர்ச்சியடைந்த தொழிலாக காணப்படுகின்றது.

இத் தொழில் சுதந்திரமான தொழிலாக இருப்பதால் எல்லோராலும் மதிக்கப்படுகின்ற தொழிலாகக் காணப்படுகின்றது உழவுத் தொழிலை மேற்கொள்ளுபவன் எவருக்கும் அஞ்சி வாழ்பவனில்லை. வானம் பொய்த்தாலொழிய வேறு எச்சந்தர்ப்பத்திலும் அவனது வாழ்வு தாழ்வதில்லை. உழுவார் உலகத்தார்க்கு அச்சாணி என்றே கூறப்படுகின்றது.

உழவுத்தொழில் தவிர்ந்த வேறு தொழில்களைச் செய்பவர்களும் இன்று உயிர்வாழ்வதற்கு உழவனையே நம்பியிருக்கின்றனர். இதனாலேதான் வள்ளுவர் கூட, 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' என்று குறிப்பிட்டுள்ளார். 'உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லைக் கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு' என்று கூறப்பட்டதும் நினைவு கொள்ளத்தக்கது. ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்று புறநானூறு கூறுவது கவனிக்கத்தக்கது. உலகிலுள்ள நானூறு கோடி மக்களுக்கும் உணவளித்து உயிர் காக்கும் தொழில் உழவுத் தொழிலாகும். உழவர் கைமடங்கின் தவம் செய்பவர்களும் உயிர் வாழ முடியாது.

உழவுத் தொழில் ஒரு நாட்டில் சிறப்பு எய்தாவிடில் இன்னொரு நாட்டிற்குக் கையேந்தி நிற்க வேண்டிய நிலை ஏற்படும். நம் நாடு இன்று உணவுப் பற்றாக்குறையினால் கஷ்டப்படுவதற்குக் காரணம், அத் தொழில் பலராற் புறக்கணிக்கப் பட்டதேயாகும். உழவுத் தொழில் மேலான தொழில் மேழி பிடிக்குங்கை வேல் வேந்தர் நோக்குங்கை என்று கூறப்பட்டுள்ளதை இலகுவில் மறக்கமுடியாது. உழவனை நம்பினவர்க்கெல்லாம் நல்ல பலாபலன்கள் கிடைக்கும். எனவே உழந்தும் உழவே தலை.

சிவகுரு நிரஞ்சனி

# சோர்க்கலோகம் சென்ற கிராமவாசி

ஒரு நாள் ஒரு கிராமவாசி தனது வயல் நிலத்தில் உரல் தடங்களைக் கண்டான். ஆகவே அவன் கிராமவாசிகளிடம் சென்று தங்களது உரல்களைச் சமையல் அறையில் கட்டி வைக்கும்படி கூறினான் ஆனால் உரல் தடங்கள் மீண்டும் தென்பட்டன. ஆகவே ஒரு நாள் அவன் தனது வயல் நிலத்தைக் காவல் காத்தான். அப்போது ஒரு யானை வானத்திலிருந்து இறங்கி வந்து தனது இளம் பயிர்களைத் தின்பதைக் கண்டு அவன் திகைப்படைந்தான். பயிர்களைத் தின்றுவிட்டு யானை போக ஆயத்தமான போது கிராமவாசி ஓடிச்சென்று அதன் வாலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். யானை சொர்க்க லோகத்திற்குச் சென்றது. மறுநாள் இரவு யானை திரும்பவும் பயிர்களைத் தின்பதற்காகச் சொர்க்க லோகத்தில் இருந்து வந்தபோது கிராமவாசியும் அதனுடன் வந்தான்.

கிராமவாசியின் மனைவி தானும் சொர்க்கலோகத்திற்குப் போகவேண்டுமென எண்ணினாள். தன்னுடன் வருமாறு சில நண்பர்களையும் அவள் அழைத்தாள். அடுத்தநாள் இரவு யானை பயிர்களைத் தின்று முடிந்து சொர்க்க லோகத்திற்குப் புறப்பட ஆயத்தமானது. அப்போது கிராமவாசி ஓடிச்சென்று அதன் வாலைப் பிடித்துக்கொண்டான். அவனைத் தொடர்ந்து அவன் மனைவியும், மற்றவர்களும் ஒருவரொருவருடைய இடுப்பைப் பிடித்துக்கொண்டனர்.

சொர்க்கத்துக்குப் போகும் வழியில் மனைவி கிராமவாசியிடம் ''சொர்க்கத்தில் கொத்து எவ்வளவு பெரிதாக இருக்கும்?'' என்று. கேட்டாள். கிராமவாசி அதற்கு ''இவ்வளவு பெரியது'' என்று கைகளை விரித்துக் காட்டினான். உடனே எல்லோரும் நிலத்தில் விழுந்தனர்.

நாடோடிக் கதையிலிருந்து
இரத்தினசபாபதி
சுரேரஞ்சன்

# தெரிந்து கொள்ளுங்கள்

| சர்வதேச ஸ்தாபனங்கள் | தலைமை அலுவலகம் | ஆரம்பம் |
|---|---|---|
| உலகசுகாதார ஸ்தாபனம் | ஜெனிவா | 1948 |
| அங்ராட் | ஜெனிவா | 1964 |
| உலகஉணவு விவசாய ஸ்தாபனம் | றோம் | 1945 |
| ஐ .நா. விஞ்ஞான கல்வி, கலாசார நிறுவனம் | பரிஸ் | 1946 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | மணிலா | 1966 |

க. த. எழில்குமரன்

30

## அயராது உழைத்தவர்களுள் சிலர்



# இந்துபோர்ட் இராசரத்தினம்

## காலமும் வாழ்வும்

இந்துபோர்ட் என்னும் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் அன்று தோன்றி, ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி மூங்கில் போல் சுற்றம் முசிப்பின்றித்தழைத்து வளர்ந்து வந்தது. அன்று 1623-ம் ஆண்டில் உருவான சங்கம், மன்னர் பின் மன்னர் ஆண்டாலென்னத் தலைவர் முதலாய உத்தியோகத்தவர் வந்து போன போதிலும், தான் ஆற்றேட்டம் போல சனுதனமான முறையில் போய்க் கொண்டிருந்தது.

இலங்கை அரசாங்கம் நாட்டின் பாடசாலைகளைச் சுவீகரித்த போது சங்கம் நூற்றறுபத்தைந்து பாடசாலைகளுக்கும் அதிகமான நிறுவனங்களை ஒழிப்பு மறைப்பின்றி ஒருமிக்க அரசாங்கத்திடம் ஒப்படைத்தது. சங்கம் 1923 முதல் 1960 வரையில் இப்பாடசாலைகளைப் பாதுகாத்துக் கொட்டாமல் சிந்தாமல், உருக்குலையவிடாமல்வளர்த்து வந்தது. இங்ஙனம் வளர்த்து வந்த போது சங்கத்தின் தலைவர், முகாமையாளர், காரியதரிசி, பொருளாளர், கணக்காளர் நிர்வாக உறுப்பினர், எழுதுவினைஞர், ஊழியர் என்றித்திறத்தார் பலரும் சங்கத்தைக் கண்ணெனப் போற்றி வளர்த்து வந்தனர்.

இவர்களை விடப் பெரியவர்கள் சிலர் இரண்டாம் ஆள் அறியாமல் சங்கத்தின் வளர்ச்சிக்குப் பொன்னாகவும், நிலமாகவும் வாரி வழங்கியுள்ளார்கள். இன்னும் சிலர் பட்டம் பெற்ற படிப்பாளிகளாயிருந்தும், தங்கள் தராதரத்திற்குரிய சம்பளத்தைப் பெருது, குறைந்த சம்பளம் எடுத்துச் சங்கத்திற்கு வாழ்வளித்தனர்.

காலந்தோறும் சைவாசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றவர்கள் பலர் தங்கள் விடுதியில் பணங் கொடுத்து உணவுண்ட போதிலும், அதில் சிலசமயம் சாதாரண உணவு கொண்டு, அங்கே ஆதரவின்றி வந்த பிள்ளைகளும் உண்ண வசதி செய்தார்கள். சிலசமயம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தங்களுக்கு இடப்பெற்ற உணவு தரக்குறைவானதென்று கண்டு, தங்கள் குறையை இராசரத்தினம் அவர்களிடம் சுட்டிக்காட்டி முறையிடுவதற்குப் பிரதியாளர் குழுவினரை அனுப்பியதும் உண்டு.

பிரதியாளர் குழுவினரைப் புன்முறுவலோடு வரவேற்கும் இராசரத்தினம் அவர்கள், மெதுவாக இன்சொல் கூறி, 'தம்பிமாரே! உங்கள் புண்ணியத்தால் உங்கள் சூழலில் நூற்றுக்கணக்கான சிவன் பிள்ளைகள் உண்கிருர்களே அந்தப் புண்ணியம் உங்களுக்குத்தானே' என்று ஆறுதலாகச் சமாதானம் சொல்லி விட்டால், குழுவினர் மீண்டும் தங்களை ஏவிவிட்ட ஏனைய ஆசிரிய மாணவர்களைக் கடிந்ததும் உண்டு. ஈற்றில் எல்லோரும் ஏகமனதாக 'அந்த மனிதன் செய்யும் அறப்பணி பெரிது' என்று வாழ்த்துதல் வழக்கம்.

இவ்வாருகச் சங்கத்தின்வரவு செலவுகளைப் பிழையின்றி எழுதி வந்த பொருளாளர் எனனும் தனுதிகாரிகளுள் ஒருவர், நவரத்தினம் என்னும் சுழிபுரத்துப் புறேக்ரரைப் பற்றி கூறுதல் அமைவாகும். நல்லூர்க்கந்தசுவாமி கோயிலில் ஆண்டு தோறும் நடைபெறும் பூஞ்சப்பறத் திருவிழா கார்த்திகைத் திருவிழா என்னும் பெருமை மிக்க விழாவாகும். அவ்விழா விலன்று நாட்டுக்கோட்டைச் செட்டிமாரும் காவடி எடுத்து வருதல் வழக்கம். காவடிக்குப் பெயர் போன அந்தத் திருவிழாவை ஏழு தலைமுறைக் காலமாகச் செய்து வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் நவரத்தினம். அவரின் தந்தையார் கிருஷ்ணபிள்ளை என்பார் தம் பெயர் நிலவக் கீரிமலையில் மடம் கட்டியவர். கிருஷ்ணபிள்ளை மடம் கீரிமலைத்தீர்த்தமாடியவர்களுக்கு வசதியான தங்குமிடமாய் நிலவி வந்தது.

நவரத்தினம் அவர்கள் தனுதிகாரி வேலையை இறை பணியாகச் செய்த பெரியார்.

அவர்கள் பெரிய காந்திப்பக்தர். காந்தியடிகள் 1927-ம் ஆண்டில் இலங்கைக்கு வந்த காலத்தில் கதரணியத் தொடங்கியவர். யோகசுவாமிகளின் அடியாரான இவர் போயிட்டி ஊரினர், கந்தர் மடத்தில் திருமணஞ் செய்தவர். யோகசுவாமிகளும் இவரும் வாரந்தோறும் சிவன் பிள்ளைகளைப் பார்த்துத் தலை தடவி வந்தவர்கள். இராமசாமி அவர்கள் தகரப்பேணிகளை உண்டியல்களாக்கித் தம்மூர்சிறுவர்களிடம் கொடுத்து நல்லூர்த்திருவிழா நாட்களில் குலுக்கப்பழக்கி, அவற்றை நிறையச் செய்து சிவன் பிள்ளைகளின் வாழ்வுக்குக் கொடுத்து வந்தவர். அவர் பிறர்பிள்ளைகளின் தலைகளைத் தடவிய தர்மம் அவர் பிள்ளைகள் பெரியவர்களாக உருவாகத் தலைகாத்தது. கதிர்காமநாதன், கணேசநாதன், யோகநாதன்

செட்டிமார் குடும்பத்தைச் சேர்ந்த அவர் வண்டியும் தொந்தியும் மலர்ந்த முகமும் புன்சிரிப்பும் திருநீறு சந்தனமும் ஒளி வீசும் அழகோடு சீனப்பட்டிலே வேட்டி சட்டை சால்வையாகவும் அணிந்து, வெற்றிலையால் சிவப்பேறிய உதடுகளை விரித்து ஆறுதலாகப் பேசிக் கருமமாற்றி வந்தவர். கந்தப்பசேகரம் என்பது அவர் பெயர். செட்டிமார்களை அறிந்த அவர், இராசர் பணக் கஷ்டம் என்று கூறியதும், குறைந்த வட்டிக்குப்பணம் பெற்றுக்கொடுப்பவர் கந்தப்பசேகரம் அவர்கள். அவர் அலுவலகத்தில் நிரந்தர உத்தியோகத்தராய் ஒரு வகையில் "ஓ.ஏ." போன்ற வேலை பார்த்தவராவர்.

இராசரத்தினம் அவர்களின் அண்ணன் கதிரேசர் என்னும் புறக்ரர் அவர்களின் தம்பி சுவாமிநாதன், முதலாய பெரியவர்களும் சங்கத்தை வளர்த்தவர்களுள் ஒரு சிலராவர்.

இன்னும் தலைவராயுமிருந்த சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் அவர்கள், உபதலைவராயிருந்த அதிகாரி நாகநாதர் முதலியவர்களோடு காலந்தோறும் பணிப்பாளர் வரிசையை அலங்கரித்து வந்த மலையகத்துப் பெரிசுந்தரம், அரியாலை ஆ. கனகரத்தினம், கந்தர்மடம் வை. சி. சி. குமாரசுவாமி, மானிப்பாய் வி வீரசிங்கம். இந்துக்கல்லூரி வெங்கட்ராமன், வட்டுக்கோட்டை நாகலிங்கம் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

வட்டுக்கோட்டை நொத்தாரிசு சிதம்பரப்பிள்ளை, அப்புக்காத்தர் அரியாலைப் பொன்னம்பலம், அரசாங்க அதிபர் செல்லப்பா குமாரசுவாமி, நீராவியடி புறக்ரர் சிவகுருநாதர், பட்டணப் பகுதி அப்புக்காத்தர் எஸ். ஆர். கனகநாயகம் முதலானோரும் அருந் தொண்டாற்றியவர்களாவர்.

இனிப்பெரும் பட்டதாரிகளாயிருந்தும் தங்கள் படிப்புக்கேற்ற பெருங்கல்லூரிகளில் சேவை செய்வதை விடுத்து, குறைந்த சம்பளம் பெறுவதில் அமைதிகண்டு சைவவித்தியா விருத்திச் சங்கப் பாடசாலைகளில் பிள்ளைகளை மனிதராக்கிய பெருமை பெற்றவர்தம் பெயர் வரிசையும் பெரிதாகும்.

அக்காலத்தில் அரசன், தம்பர் இரகுபதி,நடராசா, கணபதிப் பிள்ளை, விஜயரத்தினம், காராளசிங்கம் முதலானோரும் இன்னும் சிலரும் அக்காலத்திலேயே சைவவித்தியா விருத்திச் சங்கப் பாடசாலைகளின் தரத்தை மகாவித்தியாலங்களின் தரத்துக்கு உயர்த்துவதில் ஓய்வின்றி உழைத்தவர்களாவர்.

கல்வியங்காடு என வழங்கும் செங்குந்தா சூழலில் ஒரு பாடசாலை, அக்காலத்தில் நெசவாளர் பலர் வாழ்ந்த பெருமாள் கோயிலடியில் ஒரு பாடசாலை, இடைக்காட்டில் ஒரு பாடசாலை, அராலியில் ஒரு பாடசாலை, மேலைக் கரம்பன் ஊரில் ஒரு பாடசாலை. இவை துவிபாஷா பாடசாலைகள் எனப்பெயர் பெற்று இருமொழியறிவும் கொடுத்த பெரும் நிறுவனங்களாய் நிலவி வளர்ந்தன.

அவருடைய உபகரிப்புக்களும் அதிகம்.

சங்கத்தோடு அரும்பாடுபட்டவர்களுள் இன்னுமொருவர் அப்புத்துரை. கந்தரோடையில் சீரும் சிறப்பும் உள்ள பெரியாரான இவரை அறிமுகஞ் செய்தல் இலகுவாகும் இராசரத்தினம் அவர்களையும் சகோதரர் கதிரேசு அவர்களையும் நீதிபதி வைம்மன் கதிரைவேற்பிள்ளை தாய்மாமன் என்னும் முறையில் ஊர்காவற்துறையில் வளர்த்து வந்தபோது, அங்கே இன்னெரு மாமனுராய சின்னத்தம்பி என்பார் சுங்கப் பகுதியில் வேலைபார்த்தவர். அவர் பழைய காலத்துப் படிப்பித்தல் முறையையும் அறிந்தவராகவே,வீட்டில்இராசருக்கும் கதிரேசருக்கும் அடிப்படைக் கல்வி அளித்து வந்தார். எனவே அவரை இவர்கள், "சட்டம்பி அம்மான்" என்று அன்பொழுக அழைத்துமகிழ்ந்தனர். சட்டம்பியம்மான் கப்பலோட்டிய பெருமைக்கும் உரியாரென்ப. அவருடைய பழைய கப்பல்கள் உடைந்த போதும் அவற்றின் மரப்பலகைகள் இன்றும் பளபளப்புடன் பலவித தளபாடங்களாகக் கந்தரோடையில் உள்ளன.

சின்னத்தம்பி அவர்களின் மூத்த மைந்தனுக்கு முருகேசு என்றும் பெயர். எனவே அவரை சி. மு. அப்புத்துரை எனவே வழங்கினர். அப்புத்துரை அவர்கள் நன்ருகப்படித்தவர்,கந்தரோடை தமிழ்க்கந்தர் மகளை மணந்து, தமிழ் வித்தியாலயத்தின் முகாமையாளராயும் இருந்தவர். அவர் தமிழ்ப்பணி, சமயப்பணி, சமூகப்பணி புரிந்தவாறே சங்கப் பணியையும் கடவுள் பணியென்னும் கருத்தோடு பல்லாண்டுகளாகப் பார்த்து வந்வர். இந்துபோர்ட் அப்புத்துரை எனவே பெயர் வழங்கியவர். கந்தரோடைத் தமிழ் வித்தியாலயத்தின் தரத்தை வெகுவாக உயர்த்திய பெருமையும் அவருக்குரியது.

வல்லிபுரம் இராமசாமி என்பவரை சக்கடத்தார் இராமசாமி என வழங்கினர். யாழ்ப்பாணத்து மாவட்ட நீதிமன்றத்தில் காரியதரிசியாய் இருந்தவர். "செக்கிரத்றறி" என்னும் பதவியைத் தமிழில் சக்கடத்தார் எனவே அக்காலத்தவர் வழங்கினர். "கவுண்மேன்ற்" கோரணமேந்து என்பதும் அந்தவகையில் ஒலித்தது. இராமசாமி

கைலாயநாதன் என்னும் வரிசையில் பிள்ளைகள்நல்ல நிலையில் வாழ்கிருர்கள்.

இந்துபோர்ட் கிளாக்கர்வரிசையில் தட்டச்சுப் பொறித்த கந்தையா துரைசாமி கொக்குவிலில் மணஞ்செய்தவர். பத்தாண்டுகளுக்கு மேலாகத் தனது தட்டச்சையே இந்து போர்ட் அலுவலகத்தில் வைத்துப் பயன்படுத்தி பணிபுரிந்து மறைந்தவர். அவர் மறைந்தவேளையில் இராசரத்தினம் அவர்கள்அவர் குடும்பத்திற்கு ஐந்நூறு ரூபா கொடுத்து அனுதாபம் தெரிவித்ததோடு அவரின் பிள்ளைகளைச் சிறுவர் இல்லத்தில் சேர்த்து படிக்க வைத்து,ஒரு பெண்ணை ஆசிரியையாகவும் முன்னேற்றி விட்டவர்.

இராசரத்தினம் அவர்களின் காரோட்டிகளாக செல்வமணியம் என்பவரும், கந்தையா என்பவரும் வெவ்வேறு காலங்களில் பணிபுரிந்தவர்கள் முன்னர் அவருக்கு வாய்ந்த மயன் என்னும் மரவேலைக்காரன் போலக் காரோட்டவந்தவர்கள்

**க.சி.குலரத்தினம்**

தேரோட்டிகள் போலச் சிறப்புப் பெற்றவர்கள். கண்ணபரமாத்மா தேரோட்டினுற் போலவும், குகன் ஓடமோட்டினுற் போலவும் மணியம் ஓட்டிய முதற்கார் பெபி ஒஸ்ரின் இனத்தைச் சேர்ந்ததும் ஏச்,731 இலக்கம் கொண்டதும ாகும். பின்னர் கந்தையா என்பவர் ஓட்டிய பென்ரியாக் இனத்துக்கார் எச்646 இலக்கம் கொண்டதாகும். எவர் எதனைச் செலுத்தினுலும் இராசருக்காகச் சலிப்பின்றிச் செலுத்தியவராவார். காலை, நண்பகல், மாலை ஆகிய மூவேளைகளிலும் இராசர் திருநெல்வேலியில் சிறுவர் சிறுமியரைக் காணப் போதல் வழக்கம் குறிப்பகறிந்த சாரதிகள் காரைக் குறிப்பிட்ட இடத்துக்கு ஓட்டிச் செல்வர். சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் எழுந்தருளி விக்கிரகம் போல் இராசரத்தினம் அவர்கள் ஓடியோடிக் கருமமாற்றிய வகையில், அங்கே அலுவலகத்தில் ஆதிமூலத்து அசையாமூர்த்தம் போல அமர்ந்து சகல வேலைகளையும் திறம்பட நடத்தி வந்தவர் ஒருவர்.

புதல்வியருள் ஒருவரை மணந்த கோப்பாய்ப் புறக்ரர் சுப்பிரமணியம் அவர்கள் பிரசித்த நொத்தாரிசுவாகவும் இருந்தவர். அவர் பிறரிடம் வட்டிக்குப் பணம் பெற்று இராசருக்கு முட்டுத்தீரக் கொடுத்துதவுவதில் பெருமளவு பணிபுரிந்தவர் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் நடைமுறைகளில் சிக்கல்கள், பிணக்குகள் உண்டானபோது, சட்டப் பிரமாணங்களுக்கமைய ஒழுங்கு நிலையை வகுத்தவர்களுள் அவரும் ஒருவர்.

சைவவித்தியா விருத்திச்சங்கத்தை அலங்கரித்து முதல் தலைவர் சேர் இராமநாதன் அவர்களேயாவர். எனவே பரமேஸ்வராக் கல்லூரி அதிபராயிருந்த அருணுசலம் மகாதேவா அவர்கள் ஆசிரியர்களாயிருந்த கோடன் பியஸ் என்னும் வெள்ளைக்காரன், இன்னும் சுப்பையா நடேசபிள்ளை,ஆறுப்பிள்ளை கந்தையா என்னும் கலாநிதி, கதிர்த்

## திறனுய்வாளன் பேதையா?

'இலக்கியத்தைப் படைப்பவன் மேதை; அதைப்பற்றிப் பேசுகின்றவன் பேதை' என்ற மேனுட்டுப்பழமொழி ஒன்று உணடு. ஆனல் இது விளையாட்டுப்பேச்சே அன்றி உண்மையன்று.

இலக்கியம்என்பது மனித உள்ளத்தின் பல்வேறு நிலைகளையும், சலனங்களையும் சொல்லிலே வடித்து நம்முடைய அநுபவமாக மாற்றுகின்ற ஒரு கலை. இந்தக் கலை நமது உள்ளத்தைத் தொடுகின்ற பான்மையை, அதனுல் நாம் பெறுகின்ற பயனை, சொல்லில் விளக்குவதும் –அதாவதுஇலக்கியத்தைப் பற்றிப் பேசுவதும் மதிப்பிடுவதும் – ஒரு கலைதான் ஆனுல் அதுமிகநுட்பமான கலை என்பது என்னவோ உண்மை. சிறந்த மொழிஅறிவு,இலக்கியமரபுகளைப் பற்றிய தெளிந்த ஞானம்,உந்நதமான இலக்கியங்களோடு இடையருமல் நெடு நாள் பழகிய பண்பு, புலவனுடைய சொற்களுக்கு இடையே தோய்ந்தும் தோயாமல் கரந்து நிற்கும் தொனிப் பொருளைத் தொட்டுக்காட்டும்திறமை, எல்லா வற்றிற்கும் மேலாக தன்னை ஒதுக்கி வைத்து விட்டு,எந்த இலக்கியப் படைப்பைப் பற்றிப் பேசு எழுகின்றதோ அதனேடு ஒட்டி நிற்கின்ற அடக்கம் ஆகிய இவை அனைத்தும் இலக்கிய நலனை ஆராய்கின்ற கலைஞனுக்கு இன்றியமையாதவை.

கவிஞர்களையும் இலக்கிய மேதைகளையும் கருவிலே திருவுடையார் என்று பேசுவதுமரபு. இயற்கையிலேயே இலக்கியப் படைப்புத் திறனை இவர்கள் பெற்றிருக்கிருர்கள்; இந்தத் திறன் கல்வி கேள்விமுயற்சிகளால் மட்டும் கிடைத்து விடாது என்பதுதான் கருத்து. இது உண்மையோ என்னவோ, இலக்கியத்திறனுய்வாளனைப்பொறுத்தமட்டில், கருவிலே திருவோடு ஆழ்ந்த கல்வியும்,பரந்தகேள்வியும், சலியாத உழைப்பும் அமையவில்லையென்ருல் அவனுல் தன்னுடைய கலையில் ஒன்றுமே சாதித்து விட முடியாது.

- பேராசிரியர்
அ. சீநிவாசராகவன்

# மழையை நிறுத்திய பாட்டு

'முருகா!'.........

'ஏம்பா சின்னதொர...... என்னைக் கதிர்க்காமத்துக்கு அழைச்சிட்டுப் போவியா?'

தூய வெண்ணிற ஆடை. கழுத்தில் உருத்திராக்கம். நெற்றி நிறைந்த வெண்ணீறு. முருகா எனும் நாமம் தவிர வேறெதும் அறியாத நாநலம். அபிராமிப் பட்டர் சொன்னதுபோல வந்துவிட்ட இந்தத் தெய்வ வடிவு யாருடையது?

1978ம் ஆண்டு. ஆடித் திங்கள். மாவைக் கந்தன் மஹோற்சவ காலம். முருகனருளால் நாட்டில் அமைதி; ஊரில் அமைதி; வீட்டில் அமைதி. தெய்வத்தைக் கலையினூடு கண்டு வழிப்பட்டுப் பழகிவிட்ட மக்களிடம் தணியாத இசைத் தாகம். அவர்களது செவிகள் உணவுக்குக் கெஞ்சி நின்றன.

பூங்காவனத் திருவிழாவை மேலும் சிறப்பிக்க-பரிமளிப்பிக்க கே.பி. சுந்தராம்பாள் அழைக்கப்பட்டார்.

கட்டுவனூர் பிரபல வர்த்தகர் 'பத்தாயிரம்' சின்னத்துரை அவர்களுடன் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கியதும் கே.பி.எஸ் அவர்கள் கேட்ட கேள்விதான் இது.

'அதுக்கென்னம்மா முதலில் நீங்கள் வந்த அலுவல் முடியட்டும். பிறகு போவோம்' பத்தாயிரம் மகிழ்வோடு சொன்னார்.

வர்த்தகரின் இல்லத்தில் ஒரே கூட்டம் ஔவையாரைக் காண-இசை ஞானப்பழத்தை ஒரு தடவை பார்த்துவிட்டுச் செல்ல இந்த இடிபாடு.

'முருகா'

வந்தவர்க்கு விபூதி தந்து ஆசி கூறி விடை கொடுக்கிறார் கே.பி.எஸ்

'பூச இனியது நீறு; பேச இனியது பண்பு என்று சும்மாவா சொன்னார்கள்?...... மணிக்குரல். தெய்வப்பிறவி' இப்படி அம்மாவுக்குப் பல்லாண்டு பாடுகிறார் பெரியவர் ஒருவர்.

மறுநாள் காலை,

அதே ஜனத்திரள். அயலார்களுக்கும் செய்தி எட்டியதன் பிரதிபலிப்பு-புதுமுகங்கள் வர்த்தகரின் மாளிகை வாசலில். அனைவரும் கே.பி.எஸ் அவர்களிடம் ஆசிபெற்றுத் திரும்பினர்.

நண்பகல்.

மதிய உணவுக்குப்பின் அம்மையார் சிறிது ஓய்வெடுத்துக் கொண்டார்.

இனி வருபவர்களை என்ன செய்வது? இரவு அம்மாவின் இசை நிகழ்ச்சி. எழுபத்திரண்டு வயது. நோய் கண்ட உடல்.

சிறிதுநேரம் சிந்தித்தார் பத்தாயிரம்.

ஆ......

வெளியே வந்தார்; கேட்டைப் பூட்டி விட்டார்.

தமது தாயார் கழுத்தில் நாலு ஐந்து உருத்திராக்க மாலைகளைக் கொண்டு வந்து போட்டார். அன்னையின் புருவங்கள் நெரிந்தன. கொஞ்ச நேர மேக்அப். அவ்வளவுதான். சிறிது நேரத்தில் வேறொரு கே.பி.எஸ் தோன்றி விட்டார்.

மிகச் சிறிய வயதிலிருந்தே அமுதத் தமிழைத் தெளிவாக உச்சரித்துஅர்த்தபாவத்துடன் ரஸப்பிரதானமான முகபாவத்தோடு தமது கம்பீரமான சாரீரத்தினால் பாடி நடித்துப் புகழ்பெற்றவர் கே.பி எஸ். நாடகங்களில் நடிப்பதற்கென இலங்கைக்கு இரண்டாவது முறையாக வந்தபோது அவருக்கு வயது பதினைந்து. வள்ளி திருமணம், நந்தனார், சத்தியவான் சாவித்திரி, பவளக்கொடி, தூக்குத்தூக்கி, கோவலன், சாரங்கதாரா, பாமா விஜயம், இப்படிப் பலநாடகங்களில் நடித்துப் புகழ்பெற்றவருக்காக-ஒரு சின்ன நாடகம்

வர்த்தகர் தமது அன்னையாரை வெளியே ஒரு நாற்காலியில் உட்காரவைத்தார்.

இந்தக் கே.பி. எஸ்ஸை மக்கள் பார்த்தனர்.

வெளியேநின்றவர்களில் ஒருவர் முருகா! என்றார். அதனைத் தொடர்ந்து முருகா! வேலவா! ஷண்முகா! என்று கந்தனின் திருநாமங்கள் பல இசையோடு இழைந்தன.

நல்ல லயம் பிசகாத நிரவல் அனைவர் இதயங்களும் கூத்தாடின. சுட்டபழம் பெற்ற பாட்டியை எட்டநின்றுவது காணக் கிடைத்ததே என்ற களிப்பில் வீடு திரும்பினர் சிலர். இவர்கள் கே.பி. எஸ்ஸை என்றோ சினிமாவில் பார்த்தவர்கள்.

நேரம் நகர்ந்தது.

ரோட்டில் நின்ற மக்கள் கூட்டம் கலையத் தொடங்கியது.

மாவிட்டபுரத்தை நோக்கி விரையத்தொடங்கியது.

உள்ளே-

''அனந்தராமா, தம்பூராவுக்கு ஆள் கெடச்சுதா?''

''ஆமா அம்மா இங்க ராமநாதன் இசைக் கல்லூரியில விரிவுரையாளரா இருக்கா தனதேவி சுப்பையா. அவ எங்க மாணவி... எல்லாம் போட்டுப் பாத்தாச்சு; கவலையில்லை''

வயலின் பக்கவாத்தியத்துக்கென அவரோடு வந்த எம். எஸ். அனந்தராமன் இவ்வாறு கூறுகிறார். அவரோடு வந்த தாள வாத்தியக்காரரும் புறப்படத் தயாராகின்றனர்.

''இந்தச் சுருதி விஷயத்தில அம்மா ரொம்பக் கண்டிப்பானவர். இதுதான் அவரது வெற்றிக்குக் காரணம். அவங்களுக்கு வாசிக்கிறதுன்னா நாங்க ரொம்பப் பயப்படுவோம்.'' என்கிறார் அனந்தராமன்.

இரவு ஒன்பதரை மணிக்குக் கச்சேரி. இப்பொழுது எட்டு மணியாகிவிட்டது.

திடீரென மின்னல். இடியைத் தொடர்ந்து மழை பொழிய ஆரம்பித்தது. அரை மணி நேரத்தில் எங்கும் வெள்ளக்காடு.

கே. பி. எஸ்க்குப் பக்கத் துணையாக வந்த பக்கவாத்தியக்காரர் மூச்சடங்கிப்போய் அமர்ந்துவிட்டனர்.

வர்த்தகர் கையைப் பிசைகிறார்; அம்மாவின் அறைக்கு ஓடுகிறார்.

''இண்டைக்குச் சரிவராதம்மா'' மிகுந்த கவலையோடு கூறுகிறார்.

ஏம்பா உனக்கு முருகனைப் பற்றி அவ்வளவுதான் தெரியுமா? வா போகலாம்.

அம்மா லக்ஷ்மி,- வர்த்தகரின் மனைவியை அழைக்கிறார்.

ஒரு தேங்காய் கழுவி எடுத்துவாம்மா.

அனந்தராமா, கவுரி, அங்கவை, சங்கவை (வர்த்தகரின் ஸ்ரீ, ஜெயா என்ற இரட்டையாகப் பிறந்த பெண்களை இப்படித்தான் இவர் அழைப்பார்) பசங்களா எல்லாரும் போய்க் காரில ஏறுங்க.''

எப்படிப் போய் ஏறுவது?... ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர்.

கே. பி. எஸ். பூஜை அறைக்குள் நுழைகிறார். கற்பூரதீபம் காட்டுகிறார். கொஞ்ச நேரத் தியானம்.

''இந்தாப்பா இதைக் கொண்டுபோய்க் காருக்கு முன்னால அடி'' - பத்தாயிரம் தேங்காயை வாங்குகிறார்; கட்டளைக்குப் பணிகிறார்.

'முருகா,
நீர் கொண்ட மேகங்கள்
நின்றாடும் கயிலையில்
நீர்வாழ இடமுண்டோ
முருகா

கே. பி. எஸ். சிரித்துக் கொண்டே பாடுகிறார்.

என்ன விந்தை!

முத்துஸ்வாமி தீக்ஷிதருக்கு மழையைத் தந்த முருகன் இந்தத் தவமணிக்காக அதனை எடுத்துக்கொண்டான்.

ஐந்து நிமிடங்களில்

இரண்டு கார்களும் ஒன்றன் பின் ஒன்றாகக் கோயிலை நோக்கி நகர்ந்தன.

**தர்மபூபதி சிதம்பரநாதன் B. Music**

# களஞ்சியம்

## மரண பயம்

தெருவோர ஆலமரம் செழிப்பாக நிழல் பரப்பி அமைதியாக நிற்கிறது. மதிய வேளை; தகிக்கும் வெயில். ஆலமர நிழலில் சிலர். அறிவாளியும் இருக்கின்றார்.

'என்ன, அறிவாளி யார் ஒண்டும் பேசாமல் இருக்கிறீர்?'—ஒருவர் கதையை ஆரம்பிக்கிறார்.

'என்னத்தைப் பேசுறது; இந்தக் காலத்திலை மனிசரெல்லாம் ஒரு ஊசி' விழுந்த சத்தம் கேட்டாலும் ஏங்கி ஏங்கிச் சாகுதுகள். இதுக்குக் காரணம் மனிசரோடை கூடப் பிறந்த மரண பயந்தான்! மரணம் எந்த நேரத்திலை, எந்த உருவத்தில் வருமெண்டு சொல்லேலாது. மெய்யே! ஆறறிவு படைச்ச மனிசரான நாங்கள் உதுக்கெல்லாம் பயப்பிடலாமே! ஆறிலும் சாவு; நூறிலும்...

அந்தப்பக்கமாகச் சிலர் தலை தெறிக்க ஓடி வருகிறார்கள்.

குரல்1: 'ஏன் ஓடினம்?'

குரல்2:'ஏதோ பிரச்சனையாம்!'

ஆலமரத்தின் கீழ் இருந்தவர்களும் ஓடுகிறார்கள். எல்லோரையும் முந்திக்கொண்டு அறிவாளி ஓடுகிறார்.

**கதிர் மாணிக்கம்**

## முத்தின் கதை

கடலில் இருக்கும் சிப்பிகளின் ஓட்டுக்குள் தற்செயலாக மணல்துகள் சென்று விடுவதுண்டு. அவ்வமயம் சிப்பியானது கல்சியம் கார்பனேற்று என்னும் மூலப்பொருளை உற்பத்தி செய்ய ஆரம்பிக்கும். அம் மூலப்பொருள் மணல் துகளைச் சுற்றி அதன் மேல்படையாகப் படையாகப் படியும். சில காலங்களின் பின் அதுவே வெண்மையான உருண்டையான முத்துகளாக மாறுகின்றது.

தற்போது மனிதன் செயற்கை முத்துக்களையும் விளைவிக்கின்றான். சிப்பியை எடுத்து அதன் ஓட்டுக்குள் மணல் துகளைச் செலுத்தி பின்னர் நீரில் விட்டால் இரண்டு மூன்று வருடங்களில் அதற்குள் முத்து நன்றாக விளைந்திருக்கும்.

## மதிப்பு ஒன்றே போதும்

ரஷ்ய எழுத்தாளரான டால்ஸ்டாய் பெருஞ் செல்வராக இருந்தபோதிலும் இரக்க குணம் உடையவராக விளங்கினார். தம்மை நாடி உதவி கேட்டு வருபவர்களுக்குத் தாராளமாய் பொருள்களை வழங்கினார்.

ஒரு நாள் டால்ஸ்டாய் ஏதோ வேலையாக ஓர் ஊர் வழியாகச் சென்று கொண்டிருந்தார். கந்தல் ஆடையுடன் கண்கள் குழிவிழுந்து பரிதாபமாகக் காட்சி அளித்த பிச்சைக்காரன் ஒருவன் அவரிடம் ''ஐயா நான்கு நாளாகப் பட்டினி. இந்த ஏழைக்கு ஏதேனும் பிச்சை போடுங்கள்'' என்று கையை நீட்டினான். அந்தப் பிச்சைக் காரனுக்கு ஏதேனும் உதவி செய்ய வேண்டுமென்று நினைத்த டால்ஸ்டாய் தம் சட்டைப் பைகளை துழாவினார். உண்மையிலேயே அப்பொழுது அவரிடம் ஒரு காசு கூட இல்லை.

என்ன செய்வது என்று நினைத்த அவர், பிச்சைக்காரனைப் பார்த்து ''சகோதரனே, என்னிடம் இப்பொழுதுகாசு இல்லை. நீ என் வீட்டிற்கு வந்தாலோ அல்லது உன்னை மறுமுறை சந்தித்தாலோ நான் உனக்கு நிறையப் பிச்சை போடுகிறேன்'' என்றார்.

இதைக்கேட்ட பிச்சைக்காரன் தழுதழுத்த குரலில் ''ஐயா, யாரும் இதுவரை எனக்கு அளிக்காத பெரிய பிச்சையைத் தாங்கள் எனக்கு அளித்தீர்கள். என்னையும் மனிதனாக மதித்துச் சகோதரனே என்று அழைத்தீர்களே? அதுவே எனக்குப் போதும். நன்றி.'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

**கிராமராஜ்யம்**

தொகுப்பு க. கனகராசா

## முதுமையில் ஞாபக சக்தி குறைவதேன்?

சில உயிரியல் அறிஞர்களின் கருத்துப்படி மனித மூளையிலிருக்கும் றிபோ நியூகிளிக் அமிலம் (ribo nucleic acid—R N A) நிகழ்வுகளைப்பதிவு செய்து கொள்கிறது.

மூன்றிலிருந்து40வயதுவரை R.N Aயின் அளவு தொடர்ந்து கூடிக்கொண்டு வர மனிதனின் ஞாபகசக்தியும் அதிகரித்துக்கொண்டு வரும். 40 லிருந்து 55 அல்லது 60வயது வரை R N. Aயின் அளவு மாறா நிலையிலிருக்கும். 60 வயதின் பின் R. N. Aயின் அளவு குறையத் தொடங்கும். அப்படியே ஞாபக சக்தியும் குறைந்து கொண்டு வரும்.

## காளமேகத்தின் நகைச்சுவை

காளமேகப்புலவர் ஒருமுறை திருமலைராயன் என்ற மன்னனிடம் சென்றார். திருமலைராயனின் அவையில் இருந்த புலவர்கள் காளமேகப்புலவர் மேற்கொண்ட பொறாமையால் அவரை அலட்சியப் படுத்தினார்கள்.

நீங்கள் யார் என்று காளமேகப்புலவர் கேட்க அவர்கள் தாங்கள் கவிகள் என்றார்கள் காளமேகப் புலவர் அவர்களைக் கேலி செய்யும் விதத்தில் ஒரு கவிதையே பாடிவிட்டார், காளமேகம்! 'கவி' என்ற சொல்லுக்குக் குரங்கு என்ற பொருளும் உண்டல்லவா? அதை வைத்துக் கொண்டு அவர் பாடிய பாட்டைக் கேட்டுச் சபையிலுள்ளோர் நகைத்தனர்! புலவர்கள் வெட்கித் தலை குனிந்தார்கள்!

வால் எங்கே நீண்ட வயிறு
எங்கே?
முன் இரண்டு
கால் எங்கே? உட்குழிந்த
கண் எங்கே?
—சாலப்
புவிராயர் போற்றும்
புலவீர்காள் நீவீர்
கவிராயர்என்று இருந்தக்
கால்

**மந்துவிலான்**

## எழுதி அறியாத மேதைகள்

வரலாற்றில் நிலையான புகழ் பெற்றுவிட்ட ஹோமரும், சாக்ரடிஸும் பல கருத்துக்களை நமக்கு வழங்கியுள்ளனர் ஆனால் ஒருவரிகூட அவர்கள் எழுதியதே கிடையாது. அவர்களுடைய நூல்கள் அனைத்தும் மனப்பாடம் செய்யப்பட்டு பரப்பப்பட்டவைகளேயாகும்: அவர்களுடைய வாய்மொழியாகக் கேட்டுப் பலர் அதை சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்கள். பின்பு அவை எழுத்தில் இடம்பெற்றன.

# நவீன விவசாயம் சூழலை மாசுபடுத்துகிறதா

இன்று உலகில் எங்கும் விஞ்ஞானப் புரட்சி தான். இவ் விஞ்ஞானத்தால் நன்மைகள் ஏற்படுகின்ற அதே வேளையில் நீண்டகாலத்திமைகளும் ஏற்படத்தான் செய்கின்றன.

அந்தக் காலத்தில் இப்படியான கொடிய நோய்கள் எல்லாம் வருவதில்லை'. 'அன்றைய சாப்பாடு என்ன இன்றைய சாப்பாடு என்ன' என்று வீட்டில் உள்ள வயோதிபர்கள் பெருமூச்சு விடுவதைக் காண்கின்றோம்.

பழைய காலத்து ஆட்கள் நோய்களும் தோன்றலாயின. விவசாயிகள் விவசாய அலுவலகர்களை நாடினார்கள். அவர்கள் நோயைக் கண்டுபிடித்துக் கூறி அதற்கு ஆங்கிலப் பெயரைக் கொண்ட புதிய கிருமிநாசினியைத் தெளிக்குமாறு கூறினார்கள். அத்துடன் நின்று விடவில்லை புதிய ரசாயன உரத்தையும் போடச் சொன்னார்கள்: அப்படிப் போட்டால் தான் அறுவடை பெருகும் என்றார்கள்.

புதிய புதிய நோய்கள் தோன்ற புதிய புதிய மருந்துகளும் பாவனைக்கு வந்தன.

இப்படித்தான் கதைப்பார்கள் என்று நாம் ஒதுக்கிவிட முடியாது. அவர்கள் சொல்வதிலும் உண்மைகள் இருக்கத்தான் செய்கின்றன.

அக்கால பயிர்ச்செய்கை முறைக்கும் இன்றைய நவீன கால பயிர்ச்செய்கை முறைக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. அன்றைய மனிதனுக்கு நோய்கள் வருவது குறைவு. இன்றைய மனிதனுக்கு அதிகமான நோய்கள் வருகின்றன. இதற்கும் பயிர்ச் செய்கைக்கும் இடையே தொடர்புகள் காணப்படுகின்றன.

அக்காலத்து உணவு வகைக்கும் இக் கால உணவு வகைக்கும் இடையே வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லையே! இக்கால உணவு வகை அக்கால உணவுவகையை விடசிறப்பாக இருக்கின்றது என்று நீங்கள் கூறலாம். உதாரணமாக அன்றைய அரிசிக்கும் இன்றைய அரிசிக்கும் இடையே 'அரிசி' என்ற வகையில் பார்க்கின்ற போது வேறுபாடு தெரியவில்லை. நுணுகி ஆராய்ந்து பார்க்கின்றபோது வித்தியாசங்கள் நன்கு புரியும்.

இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த தாய் குழந்தைக்கு பாலூட்டுவதற்கும் இன்றைய தாய் பாலூட்டுவதற்கும் இடையே கூட மாற்றங்கள் வந்து விட்டன. தாய்ப்பாலிற் கூட வித்தியாசமிருக்கின்றது.

மாடுகளுக்கு சுகவீனம்என்று சொல்லி வைத்தியரை அழைக்கின்றோம். இரசாயன உரமும் பூச்சி மருந்துகளும் அடிக்கப்பட்ட வைககோலைச் சாப்பிட்டதால் சுகவீனம் ஏற்பட்டது என்கிறார். ஆதி கால மனிதன் மாடுகளுக்கு வைத்தியமும் செய்யவில்லை. நோயும் வரவில்லை.

விவசாயத்தில் விஞ்ஞானப் புரட்சி என்று புதிய நெல் ரகங்களையும், புதிய முறைகளையும் அறிமுகப்படுத்தினார்கள். அத்தோடு அவர்களுக்குத் தேவையான இரசாயன வளமாக்கிகளையும் களைக்கொல்லி, பூச்சி மருந்துகளையும் அறிமுகம் செய்தார்கள். இன்று நோய்கள் ஏற்படுவதற்கு இவையும் காரணமாகின்றன என்பதை அமெரிக்க, ஜேர்மனிய விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கின்றார்கள்.

விவசாயத்தை நவீனமயப் படுத்திவிட்டால் அமோக விளைச்சல் ஏற்படும் என விவசாயிகள் நம்பினார்கள். பழைய முறையிலான விவசாயத்தை விட புது முறையிலான விவசாயம் ஆரம்பத்தில் நல்ல பலனை விவசாயிகளுக்குக் கொடுத்தது. காலப்போக்கில் புது முறையிலான விவசாயம் மேற்கொள்ள அதிக செலவு ஏற்படும் என்பதைப் புரிந்து கொள்ளத் தொடங்கினார்கள்.

... அறி

நெல் வளர்ச்சி குன்றினால் புதிய இரசாயன உரம், நெற்சோகை தோன்றினால் இன்னொரு உரம் இப்படி பெயர் தெரியாத ஆங்கிலப் பெயருடைய உரங்கள், பூச்சிகளைக் கொல்லி மருந்துகளும் சந்தைக்கு வந்துவிட்டன.

உச்ச அறுவடையை மனதில் வைத்தே புதிய உரங்களையும் கிருமி நாசினிகளையும் அறிமுகம்செய்கிறார்கள். வயல்களுக்குப் பக்கத்திலேயே குப்பையும் கூழங்களுமாகச் சேமித்துவைத்திருந்து போடுகிற இயற்கை எரு இடும் முறை மறைந்துவிட்டது வயல்

பூரணன்

களிலேயே ஆடுகளையும் மாடுகளையும் மேயவிட்டு கழிவுகளை வயலுக்கு உபயோகப் படுத்துகின்ற முறையும் மறைந்து விட்டது.

இயற்கை உரமிடுதல் குறைந்து கால்நடைகளுக்கும் நிலங்களுக்கும் இடைவெளி அதிகரித்துவிட்டது. புதுவிதமான டீசல் என்ஜின்கள் அதிகரித்து விட்டன. இதுமாதிரி இரசாயன உரங்கள் களைக் கொல்லி மருந்துகள் என்று விவசாய இடு பொருட்களின் இறக்குமதிகள் அதிகரித்து விட்டன.

புதிய புதிய நெல் ரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பல நெல் விதைகளில் நோய் எதிர்ப்புச் சக்திகுறைந்திருந்ததோடு அவ் விதைகள் உரச்சத்தை அதிகளவு எடுத்துக் கொள்ள முடியாமலும் போயின. இதனால் உரங்களுக்கும் பூச்சி மருந்துகளுக்கும் புதுக் 'கிராக்கி' ஏற்படலாயிற்று.

பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்துவந்த விவசாயிகளின் மத்தியில் புதிய நெல் ரகங்கள் அதிக அறுவடையை தரும் என்று எப்போது ஆசைவார்த்தை கூறப்பட்டதோ அப்போதிருந்தே விவசாய முறைகளில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

புதிய நெல் ரகங்கள் நுழைந்ததால் அதற்கு ஆதரவாக இரசாயனஉரங்கள் பூச்சிகளைக் கொல்லி மருந்துகள் என்று இரசாயன ஆபத்துக்களும் நுழைந்துவிட்டன.

அதுவரை இயற்கையோடு ஒன்றிணைந்து செயற்பட்டு வந்த விவசாய முறையில் எவ்வளவு பெரிய மாற்றம் வந்து விட்டது. உரங்கள், மருந்துகள் என்று உற்பத்திச் செலவு கூடினாலும் வேறு வழியின்றி விவசாயிகள் செலவழித்தார்கள்.

நான்கைந்து வருடங்களுக்கு ஓரளவு விளைச்சல், ஓரளவு வருமானம் கிடைத்தது. ஆனால் ஒவ்வொரு முறைப் பயிர்ச்செய்கையிலும் முன்னைய வருடம் போட்ட உரத்தை விட அதிக உரம் போடவேண்டியிருந்தது. பூச்சிமருந்துகளைக் கூடுதலாகத் தெளிக்க வேண்டியிருந்தது;

வருடா வருடம் இந்த விகிதங்கள் கூடிக்கொண்டே வந்தன. இரசாயன உரம் அதிகப்படியாகப் போடப் போட மண்ணின் இயல்புத் தன்மையே குலைந்து போய்விட்டது. மண் வளமிழந்து போனது.

எத்தனையோ வருடங்கள் இயற்கையை அனுசரித்து இயற்கை உரங்களைப் போட்டு விவசாயம் செய்த போதிலும் வளமிழந்து போகாத மண் இரசாயன உரம் போட்டு சில வருடங்களிலேயே கெட்டுப் போயிற்று.

இந்த இரசாயனத் தாக்கத்தால் நன்னீர் கூட பாதிப்படைந்து வருகின்றது. நிலம் வளமிழக்க வளமிழக்க இரசாயன உரம் போடும் அளவும் அதிகரிக்க அவற்றின் விலையும் அதிகரித்தது: இதனால் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு அதிகரித்துவருகின்றது.

கிராமப்புற விவசாயிகள் அதிக விளைச்சலைப் பெற வேண்டும் என்பதையே கருத்திற் கொண்டார்களே தவிர தங்களின் விவசாய நிலம் கெட்டுக்கொண்டிருக்கும் ஆபத்தை உணரவில்லை.

புதிய புதிய நெல் ரகங்களினால் புதிய புதிய நோய்கள் தோன்ற பூச்சிகளைக் கொல்லி மருந்துகளைப்பாவிக்க வேண்டியதேவை ஏற்பட்டது. பூச்சிமருந்துதெளிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டபோது மருந்து தெளித்த பல தொழிலாளர்கள் இறந்தார்கள்.

இவற்றால் விவசாயிகளுக்கு மட்டும் பாதிப்பு என்று நினைத்து விடக்கூடாது, விளைவிக்கின்ற பொருட்களைச் சாப்பிடுகின்றவர்களையும் இந்த ரசாயனத்தன்மை பாதிக்கின்றது. இதனால் மனிதர்களுக்கு பலவிதமான நோய்கள் ஏற்படுகின்றன.

இந்தியாவில் போபால்விஷ வாயுத் தொழிற்சாலையில் இருந்து ஏற்பட்ட கசிவினால் நூற்றுக்கணக்கானவர்கள் இறந்தார்கள். இன்னும்பலர் பலவகையான நோய்களால் பீடிக்கப்பட்டார்கள். இந்தத் தொழிற்சாலை கூட ஒரு பூச்சி மருந்துத் தயாரிப்பு நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது

இந்தப் பூச்சி மருந்துகள் பயிர்களுக்குத் தெளிக்கப்பட்டு பயிர் மூலம் மனிதர்களுக்கு சிறிது சிறிதாக விநியோகிக்கப்படுகிறது. காலப்போக்கில் மனிதன் புற்றுநோய் போன்ற கொடிய வியாதிகளுக்கு உள்ளாகின்றான்.

ரஷ்யாவில் ஏற்பட்ட சேர்னோபில் அணுஉலை விபத்தால் ரஷ்ய விவசாயம் பாதிக்கப்பட்டது மட்டுமல்ல அங்கு உள்ள மக்களும் பாதிக்கப்பட்டார்கள். அயல் நாட்டுப் பயிர்ச்செய்கைகளும் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட நாட்டுப் பொருட்களை வாங்க சில நாடுகள் தடைவிதித்திருந்தமைநோக்குதற்குரியது.

அமெரிக்காவில் கூட இப்படியான விபத்துக்கள் ஏற்பட்டு, கோதுமைப் பயிர்ச் செய்கையை பாதிக்கின்றது, பாதிப்புக் குள்ளான கோதுமைத் தானியங்கள் வளர்முக நாடுகளுக்கு அனுப்படுகின்றன. நன்கொடைகளுக்குள் இவை அடங்குகின்றன.

கதிரியக்கப் பர்திப்புக்குள்ளான விளைபொருட்கள் வளர்முக நாடுகளில் விற்கப்படுவது தெரியவந்திருக்கின்றது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நெல், கோதுமை, சோளம், போன்றவற்றில் இரசாயனத் தன்மைகள் அதிகமாகக் காணப்படுவதாக ஆய்வு மதிப்பீடுகள் கூறுகின்றன. இதே நேரம் வளர்ச்சியடைந்த நாடுகளில் தடை செய்யப்பட்ட மருந்துகள், வளர்முக நாடுகளில் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

அமெரிக்கா, ஜப்பான், கனடா, ஜேர்மனி போன்ற நாடுகள் ஆரம்பத்தில் அதிக இரசாயன உரமிட்டுநவீனவிவசாய முறையைக் கடைப்பிடித்து வந்தாலும் ரசாயன உரம், பூச்சி மருந்துகளினால்

> செயற்கையை விட இயற்கைக்கே மதிப்பு அதிகம். செயற்கையால் ஏற்படும் பாதிப்புக்களைஇன்றுஉலக விஞ்ஞானிகள் உணர்ந்து விட்டார்கள். செயற்கை முறைகளை அறிமுகம் செய்தவர்களே இன்று இயற்கைக்குத் திரும்பியிருக்கின்றார்கள்.

ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி உடனடி ஆய்வுகள் நடந்தன.

மண்ணின் வளம் இதனால் எப்படிக் கெட்டுப் போகின்றது. என்பதை விரிவாக ஆய்வுகள் மூலம் கண்டுபிடித்தார்கள். ஜேர்மனியில் உள்ள 54 சதவீத நிலம் கூடுதலான உரப்பாவிப்பால் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்றும், நிலைமை நீடித்தால் மண் வளமே முற்று முழுதாகக் கெட்டுப் போய்விடும் என்றும் கண்டுபிடித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து இதிலிருந்து விடுபட்டு இயற்கையுடன் ஒன்றிணைந்த விவசாய முறை அமுல்படுத்த வேண்டும் என ஜேர்மன் ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

மனிதர்கள் மிருகங்கள் தாவரங்களின் கழிவு மண்ணுக்கு போய் திரும்பப் பயிராகி உணவாக மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் பயன்படுகின்ற ஒரு சக்கரத்தினூடே எப்போது இரசாயனம புகுத்தப்பட்டதோ அப்போதே மண் பாதிக்கப்பட்டு அதன் பாதிப்பு மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் போயிற்று.

நவீன விவசாய முறை என்னதான் அமோக விளைச்சலை அளித்தாலும் மனித நலத்திற்கு கேடு விளைவிக்கக் கூடியது. என்பதை வளர்ச்சியடைந்த நாடுகள் உணர்ந்து விட்டன.

பழைய உற்பத்தி முறையான பசுந்தாள் உரங்கள் மற்றும் பன்றி, கோழி, ஆடு, மாடுகளின் கழிவுகள் காய்கறிகளின் கழிவுகள், இலை குழைகளை உள்ளடக்கிய இயற்கை

14ஆம் பக்கம் பார்க்க

## இந்த வாரம் உங்கள் பலன்

யாழ் சோதிடர் சு. அரியநாயகம்

30-07-1989 — 05-08-1989

**மேடம்:** மனநிம்மதி, வாக்கு வசிகரம், பெரியோராதரவு, உயர்பதவி, பணவசதி, வணிகர்கள், கடல்தொழில், இயந்திர தொழில் செய்வோர் இலாபம், வெளியூர் செய்தியால் நன்மை, மாமன் வழி பொருள் சேர்க்கை, கலைஞர்கள் கௌரவிக்கப்படல்.

**இடபம்:** பிரிந்தவர்கள் ஒன்று சேருதல், வாகனசுகம், காதலர் மகிழ்ச்சி, விவாக நிச்சயம், பெரியோர்வருகை, பணப் புழக்கம், புத்திரசுகம், புண்ணிய வழிபாடு, புதுத் தொழில்.

**மிதுனம்:** பெரியோரால் பகை, பணமுடை, வாகன மாற்றம், சினேகிதராலுதவி, தடைப்பட்ட தொழில் நிவர்த்தி, நெடுநாள் ரோகம் சுகம், மாமன் வழி பகை, இளைய சகோதர வழியில் நன்மை, தூரத்து பிரயாண நிறைவு.

**கடகம்:** வீண் அலைச்சல், இனப்பகை, இடமாற்றம், புதுத் தொழில், பிதாவழியுதவி, மாதா வழி கவலை, வாகன நஷ்டம், வாக்குக் கலகம், உதவிக்கு உபத்திரவம், தடைப்பட்ட காதல்நிவர்த்தி.

**சிங்கம்:** வணிகர்கள், இலாபம், மனநிறைவு, நெடுநாள் ரோக நிவர்த்தி, பொருள் பேறு, இலட்சுமி கடாட்சம், மனை பூமியால் இலாபம், நாற்கால் ஜீவன சுகம், மகப்பேறு, இராஜமரியாதை.

**கன்னி:** வாக்கு பலிதம், பெரியோராசி, புகழ் தேடி வரும், தெய்வதொண்டு, பிரிந்தவர்கள் ஒன்று சேருதல், இலட்சுமி கடாட்சம் விருந்து பசாரம், வணிகர்கள், இயந்திர தொழில், வாகனதொழில் செய்வோர் சமபலன்.

**துலாம்:** வாக்கு வசிகரம், பெரியோராசி, புகழ்தேடி வரும், எண்ணிய எண்ணம் நிறைவு, வாகனசுகம், வணிகர்கள், கடல்தொழில், இயந்திர தொழில் செய்வோர் இலாபம், வெளியூர் போனவர்கள் திடீர் வருகை.

**விருச்சிகம்:** புகழ் தேடி வரும், புண்ணிய வழிபாடு, எண்ணியது நடக்கும், வாகன இலாபம், வணிகர்கள், கடல் தொழில் செய்வோர் இலாபம், மாமன்வழியுதவி, மனை பூமியால் இலாபம், புதுத் தொழில் முயற்சி.

**தனுசு:** சகோதரருதவி, பிதா மாதாவழியுதவி, புதுமனைச் சிறப்பு, எண்ணிய எண்ணம் நிறைவு, வாகனசுகம், வணிகர்கள், கடல் தொழில் செய்வோர் இலாபம், இலட்சுமி கடாட்சம், இனசன மகிழ்ச்சி.

**மகரம்:** வாக்குவசிகரம், எண்ணியது நடக்கும், பெரியோராசி, விவாக நிச்சயம், புகழ் தேடி வரும், கல்வியால் தொழில், காதலர் மகிழ்ச்சி, இடம் பெயர்ந்தோர் வருகை, தூரத்து பிரயாண நிறைவு, புதுத் தொழில், இலட்சுமி கடாட்சம்.

**கும்பம்:** எண்ணியதுதடை, வாகன சுகம், வணிகர்கள் சமபலன், விவாக நிச்சயம், பெரியோராசி, புண்ணியவழிபாடு, தெய்வ ஆசி, புதுத் தொழில், பிரிந்த காதலர் ஒன்று சேருவார்கள், தூரத்து செய்தி நன்மை.

**மீனம்:** வாகன சுகம், வாக்கு பலிதம், பெரியோராசி, புகழ் தேடி வரும், புதுமனைச் சிறப்பு பூமியால் இலாபம், உயர் பதவி, இராஜமரியாதை, தூரத்து பிரயாண நிறைவு, இளைய சகோதரவழி நன்மை, தடைப்பட்ட தொழில் நிவர்த்தி.

# நூற்கடல் அமுதம்

## எதனின்று எது மிகை?

இசைத்தட்டில் கிட்டப்பாவின்கிளிக்கண்ணி கேட்கிறோம் மாண்ட்-வெள்ளிக் கிண்கிணிகளின் அலறல். மூல மூர்க்கத்தின் வேதனை. நக்ஷத்திரப் பொறிகள், இளமையின் பிரிவாற்றாமை. பீரங்கிகள் கோட்டையைத் தகர்ப்பது போல நெஞ்சை உலுக்கல்.

அடுத்துக் காவடிச் சிந்தில், அல்ல; அதுபோன்ற ஒரு ராகத்தில் பட்டம்மாளின் கிளிக்கண்ணியைக் கேட்கிறேன். தடபுடலற்ற அடக்கம். ஆனால் ஏமாற்றல் அடக்கம். ஊறுகாய் ஊறி ஊறித் தேன் கசிவது போன்ற ஓர் இனித்த ஏக்கம், உள்ளேயே அரித்து அரித்து எலும்பை உருக்குகிறது. இனிப்பிழைக்க மாட்டேன். என் மார்பில் பாய்ந்து விட்ட வேலோடு என்னை எரித்து விடுங்கள் என்று கேட்கிற மாதிரி இருக்கிறது.

எதனின்று எது மிகை?

(பக். 209-210

போட்டுக் கொள்ளலாம் பின்னித் தொங்க விட்டுக் கொள்ளலாம். ஒண்ணுமே வேண்டாம். வெறுமென அள்ளிச் சொருகிக் கொள்ளலாம். எதுவுமே அழகுதான்!

பக். 214

## வேண்டுகோள்!

... எனக்கு ரீதிகௌளை ரொம்பவும் பிடித்த ராகம் அதிலும் 'ஜனனி நினுவினு' கேட்டுக் கொண்டே இருக்கையில் பட்டென்று உயிர் போய் விடாதா என்று நான் வெகுவாக விரும்புவது உண்டு. எந்தவிதமான உன்னத அநுபவத்திற்கும் சாவைப் பற்றிய எண்ணம் சொர்க்க வாசலாக எனக்குத் தோன்றுகிறது.

'ஜனனி நினுவினு'—

வேணுய பேர் பாடுகிறார்கள். ஆனால் ஆலத்தூர் சகோரர்களிடம் கேட்கையில் அதில் சக்கைப் பிரதமனின் வழவழா கொழா கொழா இல்லாது விளம்ப காலம் என்கிற சாக்கில் ஆமை மெதுவும் இலாது அதற்குரிய நடையில் சாஹித்யத் துல்லியமும் இராகத்தின் முழு ஸ்வரூபமும பரிணமிப்பதாக பரிமளிப்பதாக என்னுடைய எண்ணம்.

(பக். 314)

## இப்படி ஒரு அநுபவம்

... ஆலத்தூர் சகோதரர்கள் ஸ்ரீராகத்தில் ஒரு பாட்டுப் பாடுவார்கள்.

''நாமகுஸும''—

அந்தப்பாட்டை அவர்களிடம் கேட்கும் போதெல்லாம் என் மனக்கண்ணில் ஓர் உருவம் எழும். ஓர் அழகிய பெண், பின் கச்சை தெரிய மாத்வக் கட்டுக் கட்டிக் கொண்டு இடுப்பில் குடத்துடன் குலுக்கி நடந்து...

(பக். 136)

கடைசியாக ஒரு வேண்டுகோள் என்னுடைய வேளை வரும்பொழுது இந்தப்பாட்டு என் செவியில் ஒலித்துக் கொண்டே அனுயாஸ மரணத்தில் என் உயிர் பிரியவேண்டும் என்று என் சார்பில் அவளை வேண்டிக் கொள்ளுங்கள். உண்மையாகத்தான் நான் கேட்கும் வரமும் சாமானியமா? ஆனப்பட்ட மகான்களே கிடந்துதான் சடலம் கழற்றும்படி இருந்திருக்கையில் என் ஆசையை அவள் அகந்தையாகவே கருதக்கூடும், ஆனால் அதைக் கொடுத்தவளும் அவளே ஈஜகமுலோ நினுவினுதிக்கெவரம்மா.

(பக்.322)

நூலகம்

நூல்: பாற்கடல் (இளமை நினைவுகள்)

ஆசிரியர்: லால்குடி, சப்தரிஷி, ராமாமிருதம்

வெளியீடு: ஐந்திணைப் பதிப்பகம் (சென்னை, 1984)

## மனுஷன் தனக்காகவே பாடினன்

'தெலிஸி ராமச்சந்தர' மதுரை மணியிடம் எத்தனை முறைதான் கேளுங்களேன்; அலுக்காது, நேரில் கேட்டவருக்கு அந்தப் பாக்கியம் தெரியும். ஏன்? மனுஷன் தனக்காகவே பாடிக்கொண்டிருந்தான். தான் கண்ட இன்பம் வையகமும் உய்ந்தது. உச்சாடனம் கூடக் கூட மந்திரத்துக்கு வலு ஏறுகிறது.

(பக். 208)

இப்படியெல்லாம் எழுதும் லா.ச.ரா இப்படியும் எழுதுகிறார்.

அந்த நாளில் ஆனந்த விகடனில் கர்நாடகத்தின் (கல்கி) வர்ணனைக்கெதிரே நான் காரைப் பூச்சுக்கூடக் காணமாட்டேன்.

(பக்.206)

## கூந்தல் உள்ள சீமாட்டி

அம்மாவும் நானும் மதுரை மணி கச்சேரிக்குப் போயிருந்தோம். அந்த ஆபோஹி ஆலாப், 'காணக்கண்கோடி' கடைசியில் 'கந்தன் கருணைபுரி (யும்) வடிவேல்' —என் போதையை யாருடனேனும் பங்கிட்டுக் கொள்ள வேணும் ஆர்வத்தில்:

'அம்மா கச்சேரி எப்படி?'

'கூந்தல் உள்ள சீமாட்டி!' அத்துடனேயே நிறுத்திக் கொள்ள இருந்தவள், என் திகைப்பைக்கண்டு, தயவுபுரிகிற மாதிரி:' கொண்டை

## காணிக்கை எங்கே?

Charles Dickens இன் நாவல்கள் London சேரிகளில் மக்களின் அவல நிலையைப் போக்கக் காரணமாக இருந்தன.

H Beecher Stowe எழுதிய UncTeIom's Cabin அமெரிக்காவில் அடிமைகளின் தளையறுப்பதில் பெரும்பங்கு கொண்டது.

நம் நாட்டில் பாரதியை வைத்துக் கொண்டு எழுத்தைப் பூபூ என்றால் என்ன அர்த்தம்? இது தான் பாரதிக்குக் காணிக்கையா?

(பக். 140-141)

## லா. ச.ராவின் உயில்

உயிரின் உயிலை எழுதி வைப்பதற்கே எழுத்து.

இஸங்களை (isms) விட்டு விட்டு நாம் வந்த வழியைக் கொண்டாடிக் கொள்வோம்.

(பக்.142)

# பல் சுவை

## அருகதை ஏது?

கடவுள் இல்லை என்று சொல்கிறவர்களிடம் வாதம் செய்து பயனில்லை. அதற்கு அவசியமும் இல்லை,

தன்கட்சியை உணர்த்த முடியாத ஒருவருக்குத்தான் வக்கீல் தேவை. நம்மை விட மேலான ஒருவரின் கட்சிக்கு நாம் வக்கீலாக முடியாது. தெய்வத்தின் கட்சியை எடுத்துக் கொண்டு பரிந்து பேசி வாதாட நமக்கு ஏது அருகதை.

கல்கி

## மொ(மு)ழி பெயர்ப்பு விநோதம்

'ஒரு பெரிய உருளையை விளையாடுவதற்கு அரசு கொண்டுள்ளது'– இது தமிழ் நாட்டில் வெளியிடப்பட்ட 1979 மேல் நிலை இரண்டாம் ஆண்டுபொருளியல் தொகுதி–1, பக்.71–ல் உள்ளதொரு வசனம்.

இதே நூலின் ஆங்கிலப் பதிப்பின் பக். 47–ல் The state has a big role to play என்று வசனம் உள்ளது.

## சிந்திக்கும் வேகத்தில் பேச முடிந்தால்

நாம் சாதாரணமாகப் பேசும் வேகம் நிமிடத்திற்கு 125 வார்த்தைகள் ஆனால் நாம் நினைக்கும்வேகம் நிமிஷத்திற்கு 500 வார்த்தைகள் அதாவது நாம் பேசுவதை விட நான்குமடங்கு அதிகவேகமாக சிந்திக்கின்றோம்.

## உயிர்ப்பு

பல்வகை மரங்கள்இடையே ஒரு செடி. வசந்தகாலம்- இளவேனில்.

செடியில் அரும்புகள் தோன்றின, மொட்டாகி மலர்ந்தன.

பருவங்கள் மாறின.

விரிந்தமலர் ஒன்று கருகி வீழ்ந்தது. கருகி வீழ்ந்தது மலரல்ல. அதன் இதழ்களே என்பதை மலருக்குப் பதிலாகத் தொங்கிய பிஞ்சு பச்சையாக உணர்த்திக் கொண்டிருந்தது.

முதுவேனில்; கொடும் வெயில். செடி வாடுகிறது. வாட்டத்தின் நடுவேயும் தன் காய்க்கு அது உயிரூட்டியது.

செடி நின்ற இடத்தில் சுடுகாட்டு அமைதி. எஞ்சி நின்றவை மேலே தவழ்ந்த மழை தரா முகில்கள் மட்டுமே.

வசந்தம் வெறும் கனவாய் முடிந்தது.

கார்காலம்; கருமுகில் மழையாய்ச் சொரிந்தது. மண்ணில் புதுமுளை தோன்றியது; வளர்ந்தது; பனியில் தோய்ந்து; செடியாகப் படர்ந்தது.

மீண்டும் அதேவானம்–மண்ணில் அதே பசுமையின் நறுமணம்.

நாக. பத்மநாதன்

## ஸேஸ்ஸ்மேன்!

விமர்சகர் Cum ஆராய்ச்சியாளர்

வேதங்களைப் படிப்பவர்களில் பல ரகத்தினர் உண்டு. நண்பர்களிடமிருந்தும் புத்தகசாலைகளிலிருந்தும் இரவல் வாங்கியும், சில சமயம் சொந்தமாக வாங்கியும் ஏராளமாகப் புத்தகங்களைப் படிக்கும் ஒரு நண்பர் எனக்கிருந்தார். அவருடன் பேசுவது ஒரு அகராதியைப் படிப்பதற்குச் சமம். இவருக்குத் தெரியாத விஷயமே கிடையாது. எந்த விஷயத்தைப் பற்றியும் சிறந்த நூல்கள் எவை என்பதை நொடியில் கூறிவிடுவார். எந்தெந்தப் புத்தகங்களுக்கு எந்தெந்த விசேஷ அம்சங்கள் உண்டு என்பதையும் எடுத்துரைப்பார்.

அவர் ஒரு சமயம் என்னிடம் கீதையைப் பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்; நான் கேட்டிராத, கீதையையொட்டிய அநேக புத்தகங்களைப்பற்றி விமர்சித்தார். விசாரித்ததில் அநேக ஆயிரம் புத்தகங்களின் முகவுரைகளை மட்டும் படித்துக்கொண்டு ஒரு ஸேஸ்ஸ் மேனைப் போல் பேசுவதற்குக் கற்றுக் கொண்டவர் என்பது தெரிய வந்தது.

குலபதி கே எம். முன்ஷி

## ஆயிரம் மைல் பார்வை

பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் உள்ள அட்சரங்களை படிக்கும்போது நாம் கண்கள் இடமிருந்து வலம் சஞ்சரிக்கின்றன. சாதாரணமாக ஒரு மனிதனின் ஆயுளில் இம்மாதிரி 1000 மைல் வரை கண்கள் சஞ்சரிப்பதாகக் கண்டு பிடித்துள்ளார்கள்.

அத்தியூர்க் குட்டி

# தெரிந்து கொள்ளுங்கள்

- உலகில் முதன் முதலிற் சர்க்கஸை ஆரம்பித்தவர்கள் ரஷ்யர்கள்.
- இந்து சமுத்திரத்தில் உள்ள மிகப்பெரிய தீவு மலாகா.
- மத்திய தரைக் கடலில் உள்ள தீவுகளில் மிகப் பெரிய தீவு சிசிலி.
- உலகின் மிகப் பெரிய தீவு கிரின்லாந்து.
- பிஜி தீவுகளில் 300 க்கு மேற்பட்ட தீவுகள் உள.
- பிலிப்பைன் தீவுகள்: 7107 தீவுகள்.
- உலகின் எரிமலைகளில் மிகப் பெரியது யப்பானிலுள்ள மியுஜி மலை. உயரம் 12,320 அடி ஆகும்.
- ஐஸ்லாந்து நாட்டிலேயே உலகில் அதிகளவு எரிமலைகள் காணப்படுகின்றன.
- முதலில் வடதுருவத்திற்குச் சென்ற மனிதன் ரொபர்ட்வல்கன்ஸ்கொட்.
- முதன் முதல் மொழியை இயற்றிய நாடு சீனு.
- லண்டனில் வேகமாக செல்லும் புகையிரதம் கிளாஸ்கோ எக்ஸ்பிரஸ்.
- கொடியை முதன் முதல் செய்தவர்கள் சீனர் ஆவர்.

தீ. தவபாலன்

# வறுமையும் படைப்பாளிகளும்

புகழ்பெற்ற எழுத்தாளர்கள் தோன்ற வறுமை காரணமாக இருந்திருக்கிறது. வயிறு காய்ந்திருக்கும் போது, அல்லது குறைவான உணவுடன் இருக்கும் போதுதான் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்கிறதாம்!

எட்கார் அலன்போ என்ற பிரபல எழுத்தாளரை வேர்ஜீனிவாவில் ஒரு செல்வந்தர் சுவீகாரமாக எடுத்து வளர்த்து நன்கு படிக்க வைத்தார் ஆனால் பின்னர் அலன்போ சுவீகாரத் தந்தையுடன் தகராறு செய்து கொண்டு பிரிந்து சென்றார். அதனால் அவர் வறுமையோடு தான் வாழவேண்டியவரானார், அவருடைய மனைவிக்கு அணிவதற்கு உடைகளே இல்லையாம். எனவே கடுங்குளிரில் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தனது பெரிய பூனையை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டிருப்பாராம்; பாவம்!

வறுமையால் வருந்திய மற்றொரு படைப்பாளி ஒலிவர் கோஸ்ட் சிமித். வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காததினால், பணம் கொடுத்தவர் அவர் மீது வழக்குப் போடப் போவதாக மிரட்டிக் கடிதம் எழுதினர்! ஒலிவர் மிகவும் வருந்தினர்; சிறந்த விமர்சகராகவும், கவிஞராகவும் விளங்கிய சாமுவேல் ஜோன்சனுக்கு வேதனை ததும்ப கடிதமொன்றினை எழுதினர்.

ஜோன்சன் அவருக்கு சிறிது பணம் அனுப்பினர். பிறகு அவர் தனது நண்பரைப் பார்க்க அவர் வீட்டிற்குச் சென்றார். கோல்ட் சிமித் அந்தப் பணத்திற்கு வைன் வாங்கி வயிறு நிரப்பக் குடித்துவிட்டு தமது வீட்டுக்காரியிடம் நீண்ட பிரசங்கம் செய்து கொண்டிருந்தாராம்.

''பணம் பெறுவதற்கு உம்மிடம் ஏதாவது வழி இருக்கிறதா?'' என்று ஜோன்சன், கோல்ட் ஸ்மித்திடம் கேட்டார். கோல்ட் ஸ்மித், தாம் எழுதிய ஒரு நாவலின் கையெழுத்துப் பிரதியை ஜோன்சனிடம் கொடுத்தார். ஜோன்சன் அதனை 45 பவுனுக்கு விற்றார். அதனை வாங்கிய பிரசுரகர்த்தாவுக்கு அதுவோர் அதிர்ஷ்டமாகிவிட்டது! அந்த நாவல் மிகவும் பிரசித்தமாகி விட்ட ஒன்று! அதன் பெயர் ''த விக்கார் ஒவ் வேக்பீல்ட்''.

ஹரியட் பீச்சர் ஸ்ரோவி என்ற பெண் எழுத்தாளரும் இவ்வாறு வறுமையால் கஷ்டமடைந்தவரே. உணவினைச் சூடாக்கிக் கொள்ள ஒரு ''ஸ்டவ்'' தானும் இவரிடம் இல்லை, இவரது ''அங்கில் ரொம் கபின்'' என்ற நாவல் உலகப்புகழ் பெற்றது.

''த டிவைன் கொமெடி'' என்ற உலகப் பிரசித்தி பெற்ற படைப்பின் தாந்தே கூட, வறுமையின் பிடியில் சிக்கித் தவித்தவர்தானும்.

இவர்கள் மட்டுமா? சாமுவேல் டெயிலர் கோல்றிட்ஜ், ஜோன் கீட்ஸ், சார்ள்ஸ் டிக்கன்ஸ் எனப் பலரும் வறுமையால் வாடியுள்ளனர். தமிழ்ப் புலவர்களும், எழுத்தாளர்களும் இதற்கு விதிவிலக்கில்லைத்தானே!

இ. அநுரதன்

## விஷகடிபற்றி உரையாற்றுவார்

வட இலங்கை ஹோமியோ பதி சங்கம் நடாத்தும் 36-வது கருத்தரங்கு எதிர்வரும் ஆறும் திகதி ஞாயிற்றுக் கிழமையன்று யாழ். நகரி லுள்ள சங்கமண்டபத்தில் சங்கத் தலைவர் டாக்டர் ஏ.கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பிரபல விஷகடி வைத்திய நிபுணர் டாக்டர் க சிற்றம்பலம் 'விஷ கடியும் சிகிச்சையும் என்ற விடயம்பற்றி உரை நிகழ்த்து வார்.

## காலங்கள் . . .

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

''ஸ்ருப்பிட் நான் தான் சொல்லிவிட்டேனே. எல்லாம் அறிந்துதான் உன்னை என் வாழ்க்கைத் துணைவியாக ஏற் றேன் என்று அப்புறம் என்ன அருண்?''

''எங்கம்மா செய்த தவறு எவ்வளவு பாரதூரமான விட யம்''

''சாதாரணமாகப் பார்க்கு மிடத்து சமுதாய வரம்புகளை குடும்பக் கட்டுப்பாட்டை, வரையறையை மீறின செயல் தான். இளமையின் உணர் வுக்கு ஆட்பட்ட நிலையில் ஏற் பட்ட அசட்டுத்துணிச்சலால் நிகழ்ந்துவிட்ட விளைவு, முடிந்துபோன விடயம். மனி தாபிமான முறையில் அடிப் படையில் என்னென்ன நடந் ததோ யார் கண்டார்கள். கடந்து போனதைப் பார்த்து யாரையும் நாம் எடைபோடக் கூடாது, அருண். இப்போ எப்படி நடந்துக்கிறார்கள், எதிர்கால நிகழ்வு எப்படி என் பதை தான் நாம் பார்க்க வேண்டும். ரிஷி மூலம், நதி மூலம் பார்த்தால் சமுதாயத் தில் பெரும்பான்மையினர் சமுதாய விதிகளுக்கு அப்பாற் பட்டவர்களாகவே தென்படு வர். நான் உன்னிடம் எதை யும் மறைக்க விரும்பவில்லை. என்னை எடுத்துக்கொள். நான் யூனிவர்சிட்டியில் படித்த போது நீர் அங்கே படித்திருந் தால் என்னை ஓர் மனிதப் புழு வாகவே கருதியிருப்பீர். ஆனுல் இன்று என் நிலை... ரகுவே ஆச்சரியப்படுகிறான். லைவ் இஸ் லைக் தட். வெளியே போய் முகத்தைக் கழுவி விட்டு வா'' என்றான்.

எதுவும் பேசாமல் வெளியே எழுந்து சென்றவள் பத்து நிமிடத்தில் குளித்து உடை மாற்றிக் கொண்டு உள்ளே வந்தவள் பூசை அறைக்குள் சென்று வணங்கி விட்டு வந் தாள்.

''அருண்''சிறீதரன் அழைத் தான்.

''ம்'' என்று நிமிர்ந்தாள்.

அழுதழுது கன்றிச் சிவந்த அழகிய நயனங்கள் பனியில் குளிர்ந்த மலர்கள் போல காட்சியளித்தன. ஏற்கனவே ரோஜா நிறத்திலான அவள் முகம் குங்கும வர்ணத்தில் சிவந்திருந்தது.

''ஒருமுறை சிரியேன் அருண்''என்று சிரித்தான் சிறி.

அவள் மௌனப் புன்னகை ஒன்றை வீசினுள். செவ்விள நீர் மரத்தின்பாளை வெடித்து சிதறியது போன்று அதரங் களிடையே முத்துநிறப்பற் கள் பளிச்சிட்டன.

''சாப்பிடலாமா?''

''ம்''

இருவரும் மேசையில் உட் கார்ந்தனர். ஏற்கனவே சந்திர ஞானம் யாவும் தயார் நிலை யில் வைத்து மூடியிருந்தாள்.

''அம்மாவை கூப்பிடேன் அருண்''

அவனை நிமிர்ந்து பார்த் தாள். அவனை நேருக்கு நேர் உற்றுப்பார்த்தபடியே 'இந்த நிமிடம் முதலே நடந்தவை களை மறந்து முன்பு போல இருக்கவேண்டும். இப்போ நீர் அருண்மொழி நங்கை மாசிலா மணியல்ல. மிஸிஸ் சிறீதரன் அருண்மொழி நங்கை 'அண் டஸ்ராண்ட்' '' என்றான்.

'ம்' என்று சிரித்தாள்.

'ப்புறமிஸ்' என்று கையை நீட்டினான்.

'ப்புறமிஸ்' என்று அவன் கரத்துள் தன் கரத்தை வைத் துக் கொண்டாள்.

'குட். அம்மாவைக் கூப்பி டும்' என்றான்.

'அம்மா, அம்மா' என்று அழைத்தாள். சந்திரஞானம் விழிகளைத் துடைத்துக் கொண்டே ஓடி வந்தாள்.

சில்வர் தட்டுக்களை எடுத்து வைத்து உணவு பரிமாறினாள். இருவரும் மகிழ்ச்சியுடன் உணவுண்பதைப்பார்த்து ஆனந்தக்கண்ணீர் சிந்திய வாறே அவ்விடம் விட்டகன் றாள் சந்திரஞானம்.

உணவு உட்கொண்ட பின் இருவரும் அறைக்குள் சென்று அமர்ந்து கொண்டனர். பல் வேறு விடயங்கள் பற்றிக் கதைத்தனர். சிந்துவைப் பெண் பார்க்கப்போனது பற் றியும் அங்கே நடை பெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றியும் கதை கதையாகக் கூறினான் சிறீ தரன். ரீச்சர் இனிப்படிப்பிக்க வரமாட்டா போலிருக்கே என்று வாய் திறந்து கதைத் தாள் அருண்.

'எழுத்து முடிந்ததும்தான் வருவார்கள்'

'எப்ப எழுத்து?'

'நம்ம திருமணத்தின் பின்பு தான்'

'ரீச்சர் அதிர்ஷ்டசாலி' மாப் பிளை வீட்டாரே நகை வைத் துக் கொண்டு காவலிருக்கிறார் கள்' என்றான்.

'என் அம்மாகூட மருமகளுக் காக தன்னுடைய நகை எல் லாம் அப்படியே வைத்திருக் கின்றா. ஆனாலும் இந்தப் பெண் கள் படித்ததுகளும் சரி படியா ததுகளும்சரி நகை என்றால் ஏன்தான் இப்படி......' என்று சிரித்தபோது 'ஹ்கும்' என்று சிணுங்கினாள் அருண்.

'அருண் நான் உமக்குச் சொல்லப் போவது உபதேச மல்ல. உலகியலில் நடந்து கொண்டிருப்பவைபோல நீ எதை நினைத்து துன்பப்பட் டாயோ அது சமுதாயத்தின் மேல் மட்டத்திலும்-கீழ் மட் டத்திலும் எத்தனையோ நடந் திருக்கின்றன நடந்து கொண் டுமிருக்கின்றது. எங்களை போன்ற நடுத்தர வர்க்கத்தி னரே இதனை மானப்பிரச்சினை யாக எடுத்துக்கொண்டு தமி ழர் பண்பாடு கலாசாரத்தின் ஏகப் பிரதிநிதியாக கலங்கித் தவிக்கின்றனர். மனதுக்குப் பிடிக்காத வாழ்க்கையை உத றித்தள்ள மேல் நாட்டில் இரு பாலருக்கும் பூரண சுதந்திர முண்டு. ஆனால் எமது பண் பாடு அதற்கு இடம் தராது- தரமுடியாது என்பதால் தக்க காரணம் காட்டி சட்டபூர்வ மாக விலகிக் கொள்ள அனு மதியளிக்கப்பட்டுள்ளது. ஒரு ஆணின் தயவில்தான் பெண் வாழவேண்டும் என்ற நியதி எமது பண்பாட்டில் பிரதிபலிக் கும் வரை இப்படியான இழு பறிநிலையும் இருந்துகொண்டே இருக்கும். இனிமேல் இதனைப் பொருட்படுத்தாமல் சந்தோச மாக இருக்க வேண்டும்.' என் றான்.

'நண்பருடைய பேச்சாற்றல் உங்களிடமும் தொற்றிக் கொண்டே இருக்கே' என்று சிரித்தாள் அருண்.

'அவன் எங்களை மனிதனாக் கிய தெய்வம்' என்றுகூறி பல் கலைக்கழக சம்பவத்தை விவ ரித்தபோது அருண்மொழியே கண் கலங்கிவிட்டாள்,

'எங்கள் திருமணத்திற்கு என் சினேகிதர்கள் எல்லோ ரும் வருவார்கள் எனக்காக வல்ல ரகு இங்கே எங்களோடு இருக்கின்றான் என்பதற்காக"?

'ம்'

'என்ன 'ம்'?' அவன் என் நண்பன் மட்டுமில்லை என்னு டைய.. என்று கூறு முன்பே அவன் வாயை தன் மலர்க் கரத்தால் இறுக மூடி விட் டாள் அருண்.

(அடுத்த இதழில் நிறைவுறும்)

## தொலைக்காட்சி

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிடையேயுள்ள தொடர்பினை நோக்கின், நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவிலேயே 21 மக்களுக்குஒரு பெட்டி,0.004 சதுரகிலோ மீற்றர் பரப்பிறகு ஒரு பெட்டி, என்ற நிலை காணப்படுகின்றது. யாழ்ப் பாண நகரப்பகுதி வடம ராட்சி தென்மேற்கு, வலிகா மம் தென்மேற்கு வலிகாமம் கிழக்கு, ஆகிய பிரிவுகளில் தொலைக்காட்சிப் பெட்டிகளின் விகிதம் முறையே,27,34, 38, 51, ஆகவும் தொலைக்காட்சிப் பெட்டி—நிலப் பரப்பு விகிதம் முறையே 0.004,0.04,0.03, 0.07 சதுர கிலோ மீற்றராக வும் காணப்படுகின்றன. அதே வேளை நெடுந்தீவில் 5 சதுர கிலோ மீற்றருக்கு ஒரு பெட் டியே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சமூக, கலாசார அந்தஸ்துச் சுட்டெண்ணுடன் குறிப்பிட்ட பிரதேசங்களில் தொலைக்காட் சிப் பெட்டிகளின் பயன் பாட்டினை எடுத்துக்காட்டும். மாவட்டத்தின் பதின்மூன்று உ. அ.அ.பிரிவினை 5 பிரிவுக ளாகவும் வகைப்படுத்தலாம். i உயர் நிலை, ii உயர்மத்தி, iii தாழ்மத்தி, iv தாழ் நிலை, v மிகத்தாழ் நிலை என்பனவே அவையாகும். உயர்நிலையில் நல்லூர், யாழ்ப்பாணப்பிரிவும், உயர்மத்தியநிலையில் வடம ராட்சி தென்மேற்கும், தாழ் மத்தியநிலையில் வலி—தென் மேற்கு வலி— கிழக்கு, வலி— மேற்கும், தாழ்வு நிலையில் தீவுப்பகுதி வடக்கு, வலி— தெற்கு, வலி—வடக்கு தீவுப் பகுதி தெற்கும் மிகத் தாழ்ந்த நிலையில் நெடுந்தீவு, வடமராட்சிவட கிழக்கு,தென் மராட்சியும் இடம்பெறுகின் றன. இவ் வேறுபட்ட நிலையை மக்களிடையே காணப்படும் பொருளாதார நிலையே பெரி தும் தீர்மானித்த போதிலும், சமூக அந்தஸ்து, பொழுது போக்குத் தேவையின் முக்கி யத்துவத்தை உணரும் பண்பு, கல்விநிலை, பிள்ளைகளின் வற் புறுத்தல், போன்ற காரணிக ளும் தீர்மானிக்கின்றன.

1983-ம் ஆண்டின் பின்னர் இம்மாவட்டத்தில் பெட்டிக ளின் பரம்பல் அதிகரிப்பதற்கு அரசியற் குழப்ப நிலைகளாற் சினிமாக் கொட்டகைகள் செயலிழந்தமை, அச்சம் கார ணமாக மக்கள் வெளியே நட மாட இயலாமை, தொலைக் காட்சிப் பெட்டி, வீடியோ போன்றவை வாடகைக்கு விடும்நிலை வளர்ச்சியடைந் தமை, தொழில் நுட்ப விருத்தி. வெளிநாட்டு இடப்பெயர்வாற் பணப்புழக் கம் அதிகரித்தமை மின்சார வசதி கிராமங்களுக்கும் கிடைக்கப் பெற்றமை, புதிய கல்வீடுகள் கட்டப்பட்டமை முதலியபல காரணிகள் உள.

வளர்ந்தநாடுகளில்தொலைக் காட்சிப் பெட்டிப் பயன்பாடு வருமானம், பொழுதுபோக்கு போன்றனவற்றுடன் தொடர்புகொண்டிருக்க, இம் மாவட்டத்திலோ வருமானத் துடன் அந்தஸ்தினைப் பேணு தலிலும்,தொடர்புற்றுள் ளது. அரச தொழில்கள், மற்றும் வர்த்தகத் தொழி லில் ஈடுபட்டோரிடையே யாழ்ப்பாணப் பிரிவில் 88 வீதத்தினரிடையேயும் நல் லூர் பிரிவில் 76 வீதத்தின ரிடையேயும் காணப்படுகின் றமை இதனை தெளிவுபடுத்து கின்றது. தொலைக்காட்சிப் பெட்டியைப் பயன்படுத்து வோர் அனைவரும் வானொலிப் பெட்டி உரிமையாளர்களாக வும் இருக்கின்றனர்.

இம்மாவட்டத்தில் ஒளி பரப்பு நிகழ்ச்சிகளை நுகரும் நேரம் பொருளாதார நிலை, கல்வி, தொலைக்காட் சிப் பெட்டி வாங்கிய காலம், குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை போன்றவை தீர் மானித்துள்ளன. தொலைக் காட்சிப் பெட்டி வாங்கிய காலத்தில் சராசரி 4½ மணித் தியாலங்கள் பார்க்கும் ஆவல் தென்பட்டது. ஆனால் காலப் போக்கில் கல்வி அறிவுடன் கூடிய தொழில் பார்க்கும் குடும்பங்களில் 1—2 மணித்தி யாலமாகவும், ஏனைய தொழில் பார்க்கும் குடும்பங் களில் 2—4 மணித்தியாலங்க ளாகவும் உள்ளன.

யாழ். மாவட்ட மக்களி டையே தொலைக்காட்சிபற்றி இருவித கருத்துக்கள் நிலவு கின்றன. ஒன்று மக்களின் அறிவுத்திறனையும் உலக விட யங்களையும் வீட்டிலிருந்தே பெற்றுக்கொள்ள உதவுகின் றது என்பது. மற்றையது. ஆடம்பரப் பொருளாய் இருப் பதுமன்றி இப் பிரதேசப் பொருளாதார வளமான கல் வியைப் பாதிக்கின்றது என் பது. இவ்வாய்வின் பேருய்க் குடும்ப அங்கத்தவரிடையே ''முன்னேற்றம்'' எனக்கருது பவர்கள் ஏறத்தாழ மூன்றி லொரு பங்கினராகவும் 'கல்வி நிலை பாதிக்கப் படுகின்றது, வெறும் ஆடம்பரப்பொருள்' என எண்ணுபவர்கள் மூன்றி லொரு பங்கினராகவும் உள்ளனர். தொலைக் காட்சிப் பெட்டிப் பயன் பாட்டாற் குடும்பத்தலைவருக்கும் பிள்ளை களுக்குமிடையே கருத்துவேறு பாடு பத்திலொரு குடும்பத் தில் நிலவுவதாகவும் தெரிய வந்தது.

ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் பெருமளவுக்கு மக்களை மேலைத்தேச மயமாக்கிவிடும் என்ற கருத்தை 109 குடும்பங் களில் 94 குடும்பங்கள் மறு தலிக்கின்றன. வாழ்க்கை அமைப்பில் மாற்றங்களை ஏற் படுத்துதாகவும் கூறப்பட்டது. ஆனால் ஒளிபரப்பு நிகழ்ச்சி யினால் ஏற்படும் தாக்கத்தினை விட, வெளிநாடு செல்லல், தென்னிந்தியத் தொடர்பு, சினிமாவின் தாக்கம், அரசியல் சூழ்நிலை போன்றவற்றால் ஏற் படும் தாக்கம், முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளமையும் தெரிவிக்கப்படுகின்றது.

தொலைக்காட்சி நிகழ்ச்சி யின் ஒரங்கமான விளம்பரங் கள் நுகர்வாளரைப் பெரிதும் பாதிக்கின்றன. குறிப்பாக நுகர்வாளரின் உணவு வகைக ளில் மட்டுமன்றி ஆடம்பர பொருள்களிலும் அவர்களை நாட்டம் கொள்ளச் செய்யும் நிலையில் வானொலிக்கில்லாத சக்தி தொலைக்காட்சிக்குண்டு. எனினும் தொலைக்காட்சி ரசி கர்களிடையே நாளாந்த நட வடிக்கைகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என் பதை 97 வீதமானோர் நிரா கரிக்கின்றனர்.

## நவீன விவசாய

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உரமுறையே சிறந்தது என கூறப்பட்டது. இந்த உர வகையை தயாரிக்க அதிக நாட்கள் பிடித்திருந்தா லும் பிரச்சினையில்லாத மித வேகவிளைச்சல் முறையாகும்.

இம்முறையே இப்போது அமெரிக்கா, சீனு, கனடா, ஜேர்மனி போன்ற நாடுகளில் மீண்டும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அமெரிக்காவில் இரசாயன உரமில்லாபயிர்கள் விளைவிக்கப்பட்டு காய்கறி கள், இதரதானியங்கள் சந் தைக்கு வருகின்றன.

இரசாயன முறையில் உற் பத்தியான உற்பத்திப் பொருள்களின் விலையைவிட இயற்கை முறை உற்பத்திப் பொருள்கள் கூடிய விலையில் விற்பனை செய்யப்பட்டாலும் அமெரிக்க மக்கள் மத்தியில் புதுக் 'கிராக்கி' ஏற்பட்டிருக் கின்றது.

சீனுவை எடுத்துக் கொண் டால் அங்கு இயற்கை உரங் களுக்குத்தான் முக்கியத்து வம் கொடுக்கப்படுகின்றது. ஆடு, மாடு, பன்றி, முயல் இவற்றோடு மனிதர்களின் கழிவுகளைக் கூட உரமாகப் பயன்படுத்துகின்றார்கள். ஒழுங்கான நீர்ப்பாசன வசதி இருக்கிறது. மண்ணும் கெட் டுப்போகாமல் இருக்கின்றது. அதனால் விளைச்சல் அபரி மிதமாகக் கிடைக்கின்றது.

சீனர்களைப் போன்ற விவ சாய முறையை கடைப்பிடித் தால் விவசாயத்தில் தன் னிறைவு அடைவதோடுநோய் களிலிருந்தும் நம்மைப் பாது காத்துக் கொள்ளமுடியும்.

வளர்ச்சியடைந்த நாடுகளே நவீன விவசாய முறையால் பாதிக்கப்படுவது தெரிந்து பழைய விவசாய முறைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின் றன. வளர்முக நாடுகள் நவீன விவசாய முறையைப் பின்பற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றன.

இஸ்ரேல், ஜப்பான், சீனு போன்ற நாடுகளில் மண்ணில் இருந்து நீரை எடுத்து பயிர் செய்கின்றார்கள். அதேபோல தேவையான காலங்களில் நீரை திரும்பவும் மண்ணுக் குள் அழுத்தமான கருவிகள் மூலம் செலுத்தி நிலத்துக் கடியில் நீர்மட்டத்தை உயர்த்துகின்றார்கள். இதன் மூலம் அதிகபட்ச நீரைச் சேமிக்க முடியும்.

இரசாயன உரங்கள், கிருமி நாசினிகளால் மண்வளம் நீர் வளம் கெடுகின்றபோது நீரை சேமித்து வைப்பதே ஆபத் தாக முடிகின்றது. இதனாலே வளர்ச்சியடைந்த நாடுகள் நவீன விவசாய முறையை பின்பற்றுவதில் இருந்து பழைய முறையை நோக்கிச் செல்கின்றன.

நாமும் நவீன விவசாய முறைகளைப் பின்பற்றி எமது சந்ததியினரை ஆரோக்கியம் குறைவர்களாக மாற்றி ஆயுட் காலத்தைக் குறைக்காமல் இயற்கையோடு ஒட்டிய பழைய விவசாய முறையைப் பின்பற்றி எமது இனத்தைக் காப்பாற்றுவோமாக!

★ லண்டன் ★ ஜேர்மன்
★ சுவிஸ் ★ பிரான்ஸ்
★ ஹொலண்ட் ★ சவுதி அரேபியா
ஆகிய நாடுகளுக்கு
துரிதகதி பிரயாண ஒழுங்குகள்
அத்துடன்
பாஸ்போட், பொண்ட் ஆகியன உடனே
செய்து கொடுக்கப்படும்
உங்கள் பயண அமைப்பாளர்
M. P. LINGAMS
764, Hospital Road
Jaffna
07242

வேலணை பொதுக்கூட்டத்தில் சம்மேளன செயலாளர் பேச்சு:

# சீவல் தொழிலாளர்கள் பிளவுபட்டு நிற்பது அவர்கள் முன்னேற்றத்திற்கு உதவப் போவதில்லை

"ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களான சீவல் தொழிலாளர்கள் தம் மத்தியில் சாதியின் பேரால் பிளவுபட்டு நிற்பதோ, அல்லது ஊரின் பெயரால், பிராந்தியத்தின் பேரால் பிளவுபட்டு நிற்பதோ அவர்கள் முன்னேற்றத்திற்கு ஒரு போதும் உதவப்போவதில்லை. இப்படியான பிரிவுகள் அவர்களைப் பின்னடையச் செய்து மீண்டும் அடிமைத்தனத்திற்கே கொண்டு செல்லும். தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தில் தொழிலாளர்களிற்கு அதிருப்தி ஏற்பட்டால் தொழிலாளர்களை சரியான முறையில் கவனத்திற்கெடுத்துக் கொள்ளாது, அதிகாரத்துவப் போக்கு தலை தூக்கினால் அதற்கெதிராக குரல் கொடுப்பதற்கு சீவல் தொழிலாளர்களுக்கென்று ஒரு அமைப்பு இருக்கவேண்டும். இதற்காகவே நாம் ஐக்கிய சீவல் தொழிலாளர் சங்கத்தை உருவாக்கி உள்ளோம். அதில் அனைத்து சீவல் தொழிலாளர்களும் இணைந்து கொள்வதுடன், வேலணை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க நிர்வாகம் சரிவர இயங்கவில்லை என்றால் சரியாக செயற்படக்கூடிய நிர்வாகத்தை தெரிவு செய்ய வேலணை பிராந்திய சீவல் தொழிலாளர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்."

வேலணை தெ. ப. பொ. உ. வி. கூட்டுறவுச் சங்கக் காரியாலயத்தில் 26-07-89 காலை பதினொரு மணியளவில் தலைவர் திரு க. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற சீவலாளர் பொதுக் கூட்டத்தில் ஈழத் தொழிற்சங்க சம்மேளனம் யாழ். மாவட்டச் செயலாளர் திரு. அ. இராசலிங்கம் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சமாசத் தலைவர் திரு. தி. அமிர்தநாதன் பேசும்போது "மற்ற சங்கங்களில் தொழில் செய்யும் சீவல் தொழிலாளர்களில் ஒரு சிலர் நாளொன்றுக்கு நூறு போத்தல் கள் சங்கத்திற்குக் கொடுக்கும்போது வேலணைச் சங்கத்தில் நூறு போத்தல் கள் மட்டும் கொள்வனவு செய்யப்பட்டு விற்கப்படுவதானது, சீவல் தொழிலாளர் சட்டவிரோதகள் விற்பனையில் ஈடுபட்டு வருவதையே எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இதற்கு ஒரு போதும் அனுமதிக்க முடியாது கள்ளை உற்பத்தி செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் தெ. ப. பொ. உ. வி. கூட்டுறவுச் சங்கங்களிற்கு மட்டும்தான் அனுமதி உண்டு. வீடு வீடாக கள் விற்பது சட்டவிரோதமானது. ஆகவே சகல சீவல் தொழிலாளர்களும் சங்கத்திற்கு சரியான நிர்வாகத்தை தெரிவு செய்து தொழிலாளர் ஒத்துழைப்புடன் சங்கத்தை லாபத்துடன் இயங்கச் செய்தால், அதனால் சீவல் தொழிலாளர்களே பெரிதும் நன்மையடைவர் எனத் தெரிவித்தார்.

சீவல் தொழிலாளர் வன்செயல்காலத்தில் பல மாதங்களாக தொழில்செய்ய முடியாமல் கோவில்களிலும், பாடசாலைகளிலும் மாறி மாறி தஞ்சமடைந்ததால் அவர்களின் தொழில் முற்றாகப் பாதிக்கப்பட்டது. அவர்களிற்கு உற்பத்தி பாதிப்பு நிவாரணம் கொடுக்கவேண்டியது அவசியமாகும். சில கிராம சேவகர்களது தவறானபோக்குகளாலும், சிவில் நிர்வாகத் தடையாலும் உரிய நிவாரணம் தொழிலாளர்களிற்கு கிடைக்கமுடியவில்லை.

இன்று தமிழ் மாநிலத்தில் உள்ள தொழிலாளர்கள் பன்முகத்தாக்குதலிற்கு உள்ளாகி இருக்கிறார்கள். அரசின் இனவாதப் போக்கு தமிழினத்தை மட்டுமல்ல, தொழிலாளிவர்க்கத்தை பெருமளவு புறக்கணித்து வருகிறது உதாரணத்திற்கு திருகோணமலைத் துறைமுகத் தொழிலாளர்களை எடுத்துக்கொள்ளலாம். வன்செயல் காரணமாக சிங்களத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாவிட்டால் அதை அவர்களிற்கு லீவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது தமிழ்த் தொழிலாளர் ஹர்த்தால், சதவடைப்பு போக்குவரத்து இல்லாமை ஆகியவற்றால் வேலைக்குச் செல்லாத நாட்களிற்கு அவர்கள் சம்பளம் வெட்டப்படுகிறது சிங்களத் தொழிலாளர்களிற்கு அபாய சூழ்நிலைகளில் வேலைசெய்வதாகக் கூறி அபாய அலவன்ஸ் வழங்கப்படுகின்றது இது தமிழ்த் தொழிலாளர்களிற்கு மறுக்கப்படுகிறது. சிங்களத் தொழிலாளர்களிற்கு உணவுக் காசு ரூபா 45/- வழங்கப்படுகிறது. ஆனால் தமிழ்த் தொழிலாளர்களிற்கு ரூபா 7 50 சதம் தான் வழங்கப்படுகிறது இவை போன்ற எண்ணற்ற சம்பவங்கள் நடந்தபோதும் இவற்றை ஒருஉதாரணத்திற்கு மட்டுமே குறிப்பிடடேன் என்றார்

## மா வேண்டுமா?...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடிக்கடி மா மா என்ற ஓசை கேட்கிறது. இவ்விரண்டையும் பிணைத்து அடுத்த வீட்டு அண்ணுச்சாமி கதை கட்டிவிட்டிருக்கிறான். அதை நம்பி நீங்களும் வந்திருக்கிறீர்கள்...

நண்பர் அருமைநாயகத்திற்கு முகத்தில் அசடுவழிந்தாலும் சிரிப்பும் பொத்துக் கொண்டு வந்தது.

எனக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது மா வாங்கப் போய் மனைவியின் முன்னால் கையைப் பிசைந்து கொண்டு நிற்க வேண்டியது நான் தானே!

## தமிழ் எழுத்துக்களைச்...

[3-ம் பக்கத்தொடர்]

மயக்கும்.

'கள்ளைக் குடிக்காதே' என்பது 'கள்ளளக் குடிக்காதே' என்றும், 'கணுக்கண்டேன்' என்பது 'கனாக்கண்டேன்' என்றும், 'குதிரைகனைக்கும்' என்பது 'குதிரை கனனக்கும்' என்றும், 'கலைக்குரிசில்' என்பது கனலக்குரிசில் என்றும் அச்சுக்கோப்பாளர்களால் வாசிக்கப்படலாம். ஒரே ஒட்டத்தில் எழுதுகின்ற பொழுது (ை) என்ற சங்கிலிக் கொம்பு, அதே ஒட்டத்தில் வருகின்ற ன, ண, என்ற எழுத்துகளோடு சேர்கின்ற பொழுது மயக்கத்தைக் கொடுக்கும். கொக்கி என்ற குறியீடு குறித்த எழுத்துக்களோடு அமையும் பொழுது வரிவடிவும் அழகாக இருக்கும். ஆனால் அக்குறியீடு ஏனைய எழுத்துக்களோடு அழகாகப் பொருத்துவது கடினம்.

எழுத்துக்கள் கையெழுத்துக்கு மூலாதாரமேயன்றி எழுத்துக்களுக்கு மூலாதாரமன்று, தட்டெழுத்துப்பிரதி என்றாலென்ன? அச்செழுத்துப் பிரதி என்றாலென்ன? கையெழுத்து மூலத்திலிருந்தே தோன்ற வேண்டும். எந்த யந்திரம் வந்தாலும் எழுத்தைக் கையால் எழுதப் பழகிய பின்தான் யந்திரத்தை உபயோகிக்கலாம். ஆகவே நடுநிலை நின்று;

எதிர்கால நோக்கோடும் தூரதிருஷ்டியோடும், எங்களுடைய எழுத்துக்களைத் தமிழ் நாட்டைப் பின்பற்றிச் சீர்திருத்துவது நன்றா? எல்லோருடைய சக்தியையும் ஒன்று திரட்டித் தமிழ்நாட்டாரைத் தங்கள் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கைவிட்டுப் பழைய முறைக்கு வரத் தூண்டுவது நன்றா? என்று யோசிக்க வேண்டும்; இது அரசியல் அன்று.

மனிதரின் வாழ்நாள் மொழியின் வாழ்நாளோடு ஒப்பிடும் பொழுது மிக மிக அற்பம்; காலம் என்ற பெருங் கடலில் ஒருமிகச் சிறிய நீர்த்திவலை ஒருசில ஆண்டுகள் வாழ்வோர் தீர்மானிக்கும் விஷயமன்று.

## புனர்வாழ்வு ..

மாகாண அரச வங்கிகளுடாகவே செயற்படுத்த முறபட்டுள்ள இச்சமயத்தில், அச்சுறுத்தல்களைக் காரணமாகக் காட்டிவங்கிகளைப் பூட்டி வைப்பதையும், தமது கடமையை துஷ்பிரயோகம் செய்வதையும் எம்மால் அனுமதிக்க முடியாது இத்தகைய நடைமுறைகளை கைக்கொள்ளும் நீங்கள் ஒவ்வொருவரும் அரச ஊழியர்கள் என்பதால் மக்களின் சேவகர்களே என்பதை ஒரு போதும் மறந்து விடக் கூடாது."

இவ்வாறு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் வங்கி அதிகாரிகள், ஊழியர்கள் அடங்கிய முந்நூற்றுக்கும் மேற்பட்டோர் சமுகமளித்திருந்த கூட்டத்தில், வடக்கு கிழக்கு மாகாண சபையின் யாழ் மாவட்ட உறுப்பினர் திரு கே ரவீந்திரன் பேசும் போது குறிப்பிட்டார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்.

"வடக்கு கிழக்கு மாகாண அரசின் புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பெருமளவு நிதியினை சரியான திட்டகதின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சென்றடைவதற்கான நடவடிக்கைகளை மாகாண அரசு திட்டமிட்டு நடைமுறைப் படுத்துகின்றது இதனை மக்களுக்கு சென்றடையச் செய்வதில் வங்கி ஊழியர்கள் சிரமங்களைப் பொருட்படுத்தாது, மேலதிக நேரங்கள் வேலை செய்தாயினும் மக்களின் சிரமங்களைப் போக்க முன்வர வேண்டும். உங்கள் தரப்பில் இருந்து முன்வைக்கப்பட்ட குறைபாடுகளையும் இடர்களையும் நாம் கவனத்தில் எடுத்து, அவற்றுக்குத் தீர்வு காண முயல்வோம்" என்றார். இக் கூட்டத்தில் மாகாண சபை உறுப்பினர் திரு பி. பிரபாகரனும் சமூகம் அளித்திருந்தார்.

## ஊழியர் மரணம் குறித்து

# பருத்தித்துறை டிப்போ ஊழியர் சேவையில் ஈடுபட மறுப்பு

(உடுப்பிட்டி)

பருத்தித்துறையின் டிப்போ ஊழியருக்கு போதிய பாதுகாப்பு உறுதியளிக்கப்பட்டால் மட்டுமே பஸ்கள் சேவையில் ஈடுபடும் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை பருத்தித்துறையில் நடைபெற்ற அசம்பாவிதத்தின்போது பஸ் சேவையில் கடமையில் ஈடுபட்டிருந்த பஸ் நடத்துநர் ஒருவரும் கடமைக்குச் சென்ற மெக்கானிக் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டதன் எதிரொலியாகவே தொழிலாளர்களால் இந்த முடிவெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கடந்த சில மாதங்களாக பருத்தித்துறை டிப்போ ஊழியர்கள் டிப்போ வளவில் தாக்குதலுக்குள்ளாவது சாதாரண விடயமாக நடந்துள்ளது எனவும் தற்போது நடைபெற்ற ஊழியர் மரணத்தை தொடர்ந்து மேற்படி பஸ் ஊழியர்களுக்கும் உயிர் உத்தரவாதமும் பாதுகாப்பும் அளிக்கப்பட்டால் மட்டுமே கடமைக்கு செல்வது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மடுமாதா ஆலய திருநாள்

(வவுனியா)

வழமை போல் மடு அன்னையின் திருவிழா ஆகஸ்ட் மாதம் 15-ந் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற உள்ளது.

இதற்கான ஆயத்த நவநாட்கள் 6-ந் திகதி ஆரம்பமாகும். போக்குவரத்து ஒழுங்குகளும், கேரதீவு- பூநகரி மேலதிக பாதை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன

மடுப்பதியில் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுவதால்மடுப்பதிக்கு வர இருக்கும்பக்தர்கள் திருப்பதியில் தங்கி இருக்கும் நாட்களில் பாவனைக்கென தண்ணீர் சேகரித்து வைப்பதற்கான பாத்திரங்களையும் (வாளி, குடம்)கொண்டு வருமாறு மடுப்பரிபாலகர் அருட் திரு. பி. ஜேசுராஜா அடிகள் அறிவித்துள்ளார்

# இன்று கூட்டம்

(கொழும்புத்துறை)

சமூக அபிவிருத்தி பற்றிய பயிற்சிக் கருத்தரங்கு இன்று 30-ம் திகதி காலை யாழ் முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது யாழ் மாவட்ட சன சமூக நிலையங்களின் சம்மேளனம் இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளது.

## அநியாய ..

ளின் போது பல அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்படுவதும் அவர்களின் வீடுகள், உடைமைகள் அழிக்கப்படுவதும் தமிழ்ப்பகுதிகளில் தொடரும் நிகழ்வுகளாகும். மோதல்களின் போது ஏற்படும் இழப்புக்களால் உருவாகும் பழிவாங்கும் உணர்ச்சியை மக்கள் மீது தீர்ப்பது கண்டிக்கத்தக்கதும் நிறுத்தப்பட வேண்டியதுமான நடவடிக்கைகள் ஆகும்

அண்மையில் இலங்கை, இந்திய அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு சாதாரண தமிழ் மக்கள் எந்தவகையிலும் பொறுப்பானவர்களல்லர். இந்நிலையில் அவர்களை வெறுப்பு உணர்ச்சியுடன் தண்டிக்க முயல்வது நிறுத்தப்பட வேண்டியதும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதும் ஆகும் இந்நிகழ்வுகள் ஏற்கனவே கொலைகள், கொள்ளைகள், அழிவுகள், ஆட்கடத்தல் போன்ற செயல்களால் நொந்து போயுள்ள ஒரு இனத்திற்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்ற ஒரு செயலாகும்.

இந்த வகையில் கடந்த 26-7-89 அன்று வடமராட்சியில் மோதல்களின் போது 15 பொதுமக்கள் வரையில் கொல்லப்பட்டதும் மேலும் பலர்காயமுற்றமையும் மிகுந்த வேதனை தருகின்ற நிகழ்ச்சிகளாகும். இத்தகைய அநியாய மரணங்கள் மேலும் தொடராமல் இருக்க சம்பந்தப்பட்டவர்கள் அக்கறை செலுத்த வேண்டும்.


## காலமானார்

### குமாரசாமி ஜெகதீஸ்வரன்

குமாரசாமி ஜெகதீஸ்வரன் அவர்கள் சுவிற்சலாந்தில் 25-7-1989 அன்று அகால மரணமானார். இவர் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வட்டக்கச்சி கட்சன் றேட்டை வசிப்பிடமாகக் கொண்டவர்களாகிய குமாரசாமி, பத்மாவதி தம்பதிகளின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற பேராசிரியர் சோ. செல்வநாயகம் அவர்களின் பெருமகனும், உதயகுமார் (நோர்வே), சூரியகுமாரி, புனிதகுமாரி, நகுலேஸ்வரி, கலாநிதி, செல்வநிதி, புவனேஸ்வரன் (சுவிற்சலாந்து), கிருஸ்ணகுமார், பத்மநாதன், செல்வறஞ்சன், தயாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆ. சொக்கலிங்கம் (உருத்திரபுரம் கிழக்கு), ம அருணகிரிநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவர். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:

கட்சன் றேட்,
வட்டக்கச்சி,

சோ. குமாரசாமி

07245



## காலமானார்

### குமாரசுவாமி சாந்தகுமார் (சாந்தன்)

(பருத்தித்துறை)

புலோலி மேற்கு கந்த உடையார் ஒழுங்கை [மாடிவீடு] யைச் சேர்ந்தவரும் வேலாயுதம் மகா வித்தியாலய உயர்வகுப்புமாணவனுமான குமாரசுவாமி சாந்தகுமார் அகால மரணமானார் இவர் பொலிஸ்சார் ஜண்ட் காலஞ்சென்ற இரத்தினம் குமாரசுவாமி, குமாரசுவாமி குலதிலகமணி ஆகியோரின் மூத்த புதல்வரும், விஜயகுமார் அனுசுயாதேவி. நந்தகுமார், சுஜீதா, வினிதா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26 07. 89 ல் நடைபெற்றதென்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

மாடிவீடு,
கந்த உடையார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

ஏ. குலஜீவராஜா
(கிளாக்கர்)

07244

# அரைமனதுடன் ரஞ்சன் இந்தியா சென்றார்

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவிற்கு சர்வதேச விவகாரங்களில் ஆலோசனை வழங்குவதற்காக ஆலோசகராக திரு. பிரட்மன் வீரக்கோன் கடந்த புதன் கிழமை நியமிக்கப்பட்டார். சர்வதேச விவகாரங்களில் இலங்கையின் நிலையை விளக்கிக் கூறுவதற்காக பிறநாட்டு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துதல், இலங்கைத் தூதரகங்களை மறுசீரமைப்பு செய்தல், போன்ற கடமைகளுக்காக அவர் நியமிக்கப்பட்டதாக அரசு அறிவித்திருந்தது. இந்தியாவோடு இலங்கை அரசு ஒரு பேச்சுவார்த்தையை நடத்துமாயின் அதற்கு தயாராக இலங்கை சார்பில் தனித்துக் கலந்து கொள்ளவே இவர் நியமிக்கப்பட்டார் என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்துள்ளன. ஏனெனில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன இந்தியா செல்ல விரும்பவில்லை என அப்போது கருதப்பட்டது. இந்தியா இலங்கையுடன் பேச ரஞ்சனுக்கு அழைப்பு விடுத்திருந்தபோது அதை ரஞ்சன் மறுத்ததோடு அல்லாமல் ''விருப்பமாயின் இந்தியா இங்கே வரட்டும்'' என்று இறுமாப்பாக பேசியிருந்தார். இதை அப்போது இந்திய அரசும் கடுமையாக கண்டித்திருந்தது. இந்தியாவுடன் பேச்சு நடத்த தூதுக்குழுவிற்கு தலைமைவகித்துச் செல்ல ரஞ்சன் விரும்பவில்லை என்றும், இந்திய அரசு ரஞ்சனே வரவேண்டும் என்பதில் இறுக்கம் காட்டியதாலேயே அவர் அரைமனதுடன் சென்றார்.

# உணவு முத்திரைக்கு பொருட்களை வாங்கும் கால எல்லை மேலும் நீடிப்பு

(எப். சி. ஆர்.)

நான்காவது தொடர் புதிய உணவு முத்திரையின் முதலாம் இரண்டாம் மூன்றும், நான்காம். புள்ளிகளுக்குரிய உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு மேலும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஏப்ரல், மே மாதங்களுக்குரிய புள்ளிகளுக்கான உணவுப் பொருட்களை இம்மாதம் முப்பதாம்திகதி வரை பாவனையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

யூன், யூலை மாதங்களுக்குரிய உணவுப் பொருட்களை ஆகஸ்ட் மாதம் பதினைந்தாம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

இப்புள்ளிகளுக்குரிய உணவுப் பொருட்களை இம்மாதம் இருபதாம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளல் வேண்டுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் புதிய உணவு முத்திரையை யாழ். மாவட்டத்தில் குறித்த காலத்தினுள் விநியோகித்து முடிக்க முடியாது போய் விட்டதனால் பலர் தமக்குரிய உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இவ்விடயத்தை யாழ். மாவட்ட சமூகசேவை உதவிப் பணிப்பாளர் திருமதி கமலா சிவசிதம்பரம் வறுமை நிவாரண பிரதி ஆணையாளர் திருமதி பி. கே. குணவர்த்தனவின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்தே தற்பொழுது விசேட கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கால நீடிப்பு பற்றி சகலஉதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும், ப.நோ.கூ. சங்கங்களுக்கும் சமூக சேவைப் பகுதியால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

## தெற்கில் 84 ஜே. வி. பியினரும் 92 பொதுமக்களும் மரணம்

இந்தியப்படைகள் வெளியேறக்கோரி தென்பகுதிகளில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆர்பாட்டங்களில் ஜே. வி. பியைச் சேர்ந்த எண்பத்திநான்கு பேரும் பொதுமக்களில் தொண்ணூற்றியிரண்டு பேரும் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

படையினர் பலரும் பலியானதாகவும் நேற்று தென்பகுதியில் ஆர்ப்பாட்டம் ஏதும் நிகழவில்லை, அமைதியான சூழ்நிலை எங்கும் நிலவியதாக தெரிவிக்கப்படுகிறது.

## காருடன் அரைகுறையாக எரிந்தநிலையில் சடலங்கள்

(பருத்தித்துறை)

துன்னாலை அல்லையம்பதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் போது பலியான வயோதிபமாது செல்லாச்சி, தங்கம்மா, சாந்தினி ஆகியோரின் சடலங்கள் காருடன் தீயிட்டுக்கொளுத்தப்பட்டதையடுத்து அவர்களின் உறவினர்கள் குறைநிலையில் எரிந்திருந்த சடலங்களை மீட்டு அடக்கம் செய்தனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள், பேர்த்தியாரான மூவரும் வீட்டில்வைத்தே துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டனர் இவர்களின் சடலங்களை பிரேத பரிசோதனைக்காக மந்திகை அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதே காருக்குத் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது.

காரில் பயணம் செய்தோர் சாரதி ஆகியோர் காயங்களுடன் ஓடிச்சென்றதும் சடலங்கள் மூன்றும் காருடன் தீக்கிரையாக்கப்பட்டது.

அரைகுறையாக எரிந்த நிலையில் கிடந்த சடலங்கள் மறுநாள்வரை அப்படியே காருடன் இருந்தன.

## உடற்பயிற்சி ஆசிரியர் தெரிவு நேர்முகப்பரீட்சை ஒத்திவைப்பு

உடற்பயிற்சி ஆசிரியர் தெரிவிற்கான நேர்முகப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 3-ம், 5-ம், 6-ம் திகதிகளுக்கு பின்போடப்பட்டுள்ளது என கல்வியமைச்சுதெரிவித்துள்ளது

இந்த நேர்முகப்பரீட்சை நேற்றும்,நேற்று முன்தினமும் நடைபெற இருந்தது. அரசின் ஊரடங்குச்சட்டப் பிரகடனம் காரணமாகவே நேர் முகப் பரீட்சை பின்போடப்பட்டது.

## ஆயுதப்படையிலிருந்து விலகிய தமிழரை மீள சேர்க்க அக்கறை

இலங்கை அரசின் ஆயுதப் படைகளிலிருந்து விலகியோரை மீண்டும் படைகளில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக கடந்தகால வன்செயல் காரணங்களினால் படைகளில் தொடர்ந்தும் பணிபுரிய விரும்பாமல் தாமாகவே சேவையிலிருந்து விலகிய தமிழர்களை மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்வதற்கு அதிக அக்கறைகாட்டப்பட்டு வருகின்றது.

படையிலிருந்து விலகிய தமிழர்கள் மீண்டும் படையில் சேரவிரும்பி தொடர்பு கொண்டால் அவர்களை சேவையில் சேர்த்துக்கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்படுமெனவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றதாம்

### சமரசத்தின்...

படைவிலகல் பற்றி கேட்கப்பட்டதற்கு இது இருநாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட சமரசத்தின் பெறுபேறு அல்ல. புரிந்துணர்வுதான் என அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் புதுடில்லி செல்லும் இலங்கை உயர்மட்டக்குழு இந்திய அரசுடன் இந்திய படைவிலகலுக்கான கால அட்டவணையை தயாரிப்பதிலும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வதிலும் கவனம் செலுத்தும் என தெரிவித்தார்.

### யுதத நிறுத்தம்...

செயலர் நரேஷ் சந்திரா, வெளியுறவு செயலர் எஸ்.கே. சிங், வெளிவிவகார குழு உறுப்பினர்களான குல்தீஷ் சகாதேவ், ஜி. பார்த்தசாரதி ஆகியோர் இடம் பெற்றனர்.

இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தை நாளை மீண்டும் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. முதற்கட்ட பேச்சுகளை இன்று ஞாயிற்றுக் கிழமையும் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கைக் குழுவில் முப்படைத்தளபதிகளும் இறுதி நேரத்தில் சேர்ககப்பட்டுள்ளனர். கடற்படைத் தளபதி ஆனந்த சில்வா, வடகிழக்கு இராணுவ தளபதி பிரிகேடியர், ஜி. ஆர். ஆர். எஸ். டி. சில்வா ஏயர்மார்ஷல் ரெரி குணவர்த்தன ஆகியோரே இவ்வாறு சேர்க்கப்பட்டவர்களாவர்.

### இரு நாடுகளின்...

அமைச்சர்களிடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகள் இரத்தம் சிந்துவதை நிறுத்தி அமைதி ஏற்படுத்த வழி ஏற்படுத்தும் என முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்தார்.

## பஸ் சேவைகள் நேற்று மூன்றும் நாளாக ஸ்தம்பிதம்

யாழ். குடாநாட்டில் பஸ் சேவைகள் நேற்று மூன்றுவது நாளாக தொடர்ந்து பாதிக்கப்பட்டிருந்தது.

வவுனியா, கிளிநொச்சி போன்ற வெளியூர் டிப்போக்கள் மட்டும் யாழ்ப்பாணத்திற்கு சில பஸ் சேவைகளை நடாத்தின.

பருத்தித்துறை, யாழ்ப்பாணம், காரைநகர் டிப்போக்களைச் சேர்ந்த பஸ்கள் சேவையிலீடுபடவில்லை.

மினி பஸ் சேவைகளும் நேற்று மிகக் குறைவாகவே காணப்பட்டன.

இதேவேளை வவுனியாவுக்கு அப்பாலான மினிபஸ் சேவைகள் முதலாம் திகதிக்கு பின்னரேயே வழமைபோல் மேற்கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

### பங்களாதேஷ் மகிழ்ச்சி

இலங்கையில் இருந்து இந்திய அமைதிப்படையினர் மீண்டும் திருப்பி அனுப்பப்படுவதையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாக பங்களாதேஷ் ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாத் தெரிவித்துள்ளார்.

### யாழ். வைந்தியசாலையில்...

குறிப்பிட்ட பார்மஸியின் பெயருடன் கூடிய மாதிரி திகதி குறிப்பு அட்டையும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

வைத்திய சாலையினால் வழங்கப்படும் திகதி குறிப்பு அட்டை கொண்டுவருவோருக்கு பற்சிகிச்சை வழங்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது இந்த குறிப்பு அட்டை அந்த பார்மஸியில் ஒரு ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### சிறுவன் காயம்

கடந்த வியாழன் கிளிநொச்சி ஜெயந்தி நகரில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த சி. தர்மசீலன் (11) யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பொடிச் செய்திகள்

### படையினர் கட்டுப்பாட்டில் லேக்ஹவுஸ்

அரச சார்பு பத்திரிகை நிறுவனமான அசோஷியேற்றற் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டட் என்ற லேக்ஹவுஸ் கம்பனி நிர்வாகம் பாதுகாப்பு படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் உடனடியாக கொண்டு வரப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

### லண்டனில் தமிழர் ஆர்ப்பாட்டம்

லண்டனில் இந்தியத் தூதரகம் முன் பல தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர் என்றுபி.பி.ஸி. தெரிவித்தது.

### அமெரிக்கா வரவேற்பு

இலங்கையில் இருந்து இந்தியா தனது துருப்புகளை திருப்பி அனுப்புவது என்று எடுத்த தீர்மானத்தை அமெரிக்கா வரவேற்றுள்ளது. இந் நடவடிக்கை மூலம் இருநாடு உறவும் நல்ல நிலையில் பேணக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும், இலங்கையின் இறைமையை மதிப்பதாகவும் இது அமைந்துள்ளது

### ஊரடங்கு இல்லை

(வவுனியா)

இலங்கை அரசின் ஊரடங்கு அமுல் வவுனியாவில் செல்லுபடியாகவில்லை வழமைபோல் மக்கள் நடமாட்டம் இருந்தது. வர்த்தக நிலையங்களும் திறந்திருந்தன.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 30-07-89 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.